

பானை; புலி;
சல்ஃபோன்!


# கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 02.05.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



## கோடைக்கால கொண்டாட்டம் உணவு ஸ்பெஷல்



ஆறு வாரப் போட்டி ஆரம்பம்!

தங்கக் காசு பரிசு! தவற விடாதீங்க...



## கூலா சாப்பிடுங்க...

# 15 லட்சம் ருத்ராக்ஷங்கள் கொண்ட பந்தலின் கீழ்

இந்தியாவிலேயே முதன் முறையாக அனைத்து
தரப்பு மக்களும் பங்கேற்கும் வகையில்

### தடை நீக்கும், வளம் கூட்டும்



# மஹாருத்ர ஹோமம்

**மே 14, 15, 16 2010**

ஸ்ரீ ராமசந்திரா மருத்துவமனை சிட்டி சென்டர்
24, டாக்டர் வாசுதேவ நகர், திருவான்மியூர்
(பஸ் நிலையம் பின்புறம்) சென்னை – 41

ஹோமங்களிலேயே தலையாய ஹோமமாக கருதப்படுவது மஹாருத்ர ஹோமம். இதில் கலந்து கொள்வதன் மூலம் திருமணத்தடை, கல்வி, வேலை வாய்ப்பு, நல்வாழ்க்கை, கடன் பிணி நீங்குதல், மன அமைதி போன்ற மனிதனின் பலவித நியாயமான தேவைகள் இறையருளால் நிறைவேறும் என்பது நிச்சயம்.

மஹாருத்ர ஹோமத்தைப் பற்றி யஜூர் வேதம் குறிப்பிடுகையில் சமகம் எதுவோ (ஒரு மனிதன் தன்னுடைய தேவைகளாக எதை நினைக்கிறானோ) அது அனைத்தையும் கொடுக்க வல்லது என்று கூறுகிறது.

இதில் பல்வேறு ஆதித்தனார்களும், ஆன்மீக வாதிகளும் கலந்து கொள்வதால் அவர்கள் அனைவரையும் ஒரு சேர தரிசிக்கும் சந்தர்ப்பமாக இந்த ஹோமம் அமையும்.

இந்த ஹோமம் 15 லட்சத்திற்கு மேற்பட்ட ருத்ராட்சங்கள் கொண்ட பிரமாண்ட பந்தலின் கீழ் இந்தியாவிலேயே முதன் முறையாக நடக்கிறது. இது 150 க்கும் மேற்பட்ட வேத விற்பன்னர்கள் கூடி 3 நாட்கள், 6 வேளை நடைபெறும் ஹோமம்.

ருத்ராக்ஷத்தைக் கொண்டு உச்சரிக்கும் மந்திரங்கள் பல கோடி மடங்கு பலனை அளிக்க வல்லது என நடராசசதகம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.

ரூ.370/- செலுத்துபவர்களுக்கு
ஸங்கல்பம் (4 நபர்களுக்கு) செய்து பிரசாதம்
அனுப்பி வைக்கப்படும்.
இதற்கு பதிவு செய்யுமாறு வேண்டுகிறோம்.

**ஸ்பான்சர்கள் வரவேற்கப்படுகிறார்கள்**

இந்த மாபெரும் ஹோமத்திற்கு உங்களால்
இயன்ற நன்கொடையை அளிக்குமாறு
பணிவுடன் வேண்டுகிறோம்.

பல வருடங்களாக தொடர்ந்து செய்யும் ஹோமம் மூலம் பெறப்படும் பலன்களை இந்த 3 நாட்கள் ருத்ராக்ஷ பந்தலின் கீழ் நடைபெறும் ஹோமம் தருவதால் தாங்கள் இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் விபரங்களுக்கு

## ஆருத்ரா சேவா சாரிடபிள் டிரஸ்ட்

B.No. 24, TNHB Complex, 1st Floor, #21, L.B. Road, Adyar, Chennai - 600 020
Ph: 044-45504330 / 25. Mobile: 91763 62022, 95662 56133 Email: aruthratrust@gmail.com

# கல்கி

02.05.2010





'ஒரு பாகிஸ்தான் ஆட்டக்காரரைக்கூட ஏலத்தில் சேர்க்காதது தப்பு' என்ற சர்ச்சையில் துவங்கியது ஐ.பி.எல். 3வது சீசன்.

விளையாட்டுத்துறையில் அமைச்சர்களின் தலையீடு, ஊழல் என்பதெல்லாம் இந்திய அரசியலில் புதிதான விஷயம் இல்லை எனினும், இந்தக் குற்றச்சாட்டுகள் புதுமாதிரியானவை. புதிரானவையும் கூட. தினமொரு செய்தியுடனும் திடுக்கிடும் திருப்பங்களுடனும், தொடர்ந்த இந்த விஷயம், கிரிக்கெட் மாட்ச்களை விட விறுவிறுப்பானது. மேலும், 'கோடிகளை'ப் பற்றி எழுப்பும் கேள்விகள் கிரிக்கெட் ரசிகனுக்கு மட்டுமில்லாமல், சாதாரண மக்களுக்கும் புரியாத மர்மமாகத்தான் இருக்கிறது.



# லலித் மோடிக்கே தெரியாது!

**மர்மம் 1 :**

மற்ற டீம்களைவிட மிக மிக அதிக விலையில் (333 மில்லியன் டாலர்கள்) ஏலமெடுக்கப்பட்டது இந்த கொச்சி அணி.



* லலித் மோடி

வினாடிகளைக் கூட வீணாக்காமல், விளம்பரங்களிலிருந்து கொட்டும் பணமழையினால், உலகம் முழுவதற்கான ஐ.பி.எல்.லின் தொலைக்காட்சி உரிமை பெரிய விலைக்கு விற்கப்பட்டிருக்கிறது. அதனால் ஐ.பி.எல்.லின் மதிப்பும், (18,000 கோடி ரூபாய்!) பங்குகொள்ளும் அணிகளின் மதிப்பும் பல மடங்கு உயர்ந்துவிட்டது. ஒவ்வொரு ஆட்டத்திலும் தொடர்ந்து லாபம் நிச்சயம் என்பதால், இந்த விலை என்று பேசப்பட்டது. ஆனால், ஏலமெடுத்த நிறுவனத்தின் பங்குதாரர்கள் யார் யார் என்று ஏலத்துக்கு மனுச்செய்தவர்களுக்குக் கூடத் தெளிவாகத் தெரியாது. இதை ஒப்புக்கொள்வது யார் தெரியுமா? ஐ.பி.எல்.லின் கமிஷனர் லலித் மோடி! ஒரு சாதாரணப் பஞ்சாயத்தின் காண்டிராக்டை எடுப்பவர்கூட, காண்டிட்ராக்ட் கிடைத்தால், அந்தப் பணியைச் செய்ய

ஜது பொருளாதாரத் துதியை நிரூபிக்கச் சான்று ன் சமர்ப்பிக்கவேண்டும். ப்படியிருக்க, 300 மில்லி ன் டாலர் பிசினஸ் எப்படி கம் தெரியாதவர்களுக்கு மூங்கப்பட்டது?



✱ சரத் பவார்

**மர்மம் 2 :**

ஏலமெல்லாம் முடிந்து 30 ாள் காத்திருந்து, ஏன் திடுமென லலித் மாடி புகார் புயலைக் கிளப்பியிருக்கிறார்? லமெடுத்த தொகையை விடப் பல கோடிகள் மலும், அதிகமாகக் கொடுத்து அவர் விரும்பிய ற்றொரு நிறுவனத்துக்கு உரிமையை மாற்ற, வர் செய்த முயற்சிகள் பலனளிக்காததால் மூந்த கோபத்தின் விளைவுதான் இந்தப் கார் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி ானால் அந்த அணியின் உண்மையான திப்புதான் என்ன?

**மர்மம் 3 :**

தனியாக ஒருபெண் போராடித் தொழில் சய்து முன்னேறுவதில் இவ்வளவு முட்டுக் ட்டையா? அமைச்சரின் தோழியாக இருப் தற்கும், தனக்கு இலவசமாகக் கிடைத்த ங்குகளுக்கும் (மதிப்பு 70 கோடி) எந்தச் ம்பந்தமுமில்லை. அது தனது உழைப்புக்கும், தாடரப்போகும் சேவைக்கும் கிடைத்தது என மூங்கிய, இதில் சம்பந்தப்பட்ட ஒரே பெண் னந்தா புஷ்கர் அதிரடியாகத் தன் பங்குகளைத் ருப்பிக்கொடுப்பானேன்?

**மர்மம் 4 :**

அரசின் நிதித்துறை ஆணைப்படி, வருமான ரி அதிகாரிகள் ஐ.பி.எல். அலுவலகத்தைச் சாதனையிட்டபோது, லலித் மோடி தர்மசாலா பில் தலாய்லாமாவைச் சந்தித்து விட்டு அங்கு டந்த மாட்சைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். சாதனையே நாடகமா அல்லது வரி மோசடி துவுமே இல்லையா?

– ரமணன்


கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
**லக்ஷ்மி நடராஜன்**

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
**கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா**

வடிவமைப்பு :
**எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்**

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

**ஆசிரியர் குழு :**
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

**விளம்பரப் பிரிவு :**
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

**சந்தா பிரிவு :**
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

**விற்பனை பிரிவு :**
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
**www.sangapalagai.com**

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

★ ஏட்டிக்குப் போட்டி!



★ புற்றுக்குள் கை!



★ சமச்சீருக்கு சல்யூட்!



● **எஸ்.ராமசாமி, வடக்குதயிர் பாளையம்** ★

**? தலித் இனத்தவர் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறினாலும், அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதி உரிய சலுகை வழங்க வேண்டும் என்று முதல்வர் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளாரே - இது சரியா? கிறிஸ்தவ மதத்தில் ஜாதிப் பிரிவுகள் உண்டா?**

! எந்த மதத்திலுமே ஜாதிப் பிரிவினை இல்லை; இருக்கக் கூடாது என்பது ஒருபுறம் இருக்க, பிரிவினையைக் காரணம் காட்டி கிறிஸ்துவர்களாக மாற்றப்பட்டவர்கள் அங்கேயும் ஜாதி அடிப்படையில் ஒதுக்கீடு கோருவது சரியல்ல. மக்களை முன்னேற்றத் தெரியாத அரசியல்வாதிகள், அவர்களைத் திருப்திப்படுத்த இரண்டு வழிகளை வைத்திருக்கிறார்கள். ஒன்று - ஜாதி அடிப்படையில் ஒதுக்கீடு; இரண்டு- இலவசங்கள்.

● **ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி.**

**? ''மாவோயிஸ்டுகள் - நக்ஸல்கள் கோழைகள். ஏன் அவர்கள் காட்டுக்குள் ஒளிந்து வாழ வேண்டும்?'' என்று கேட்கிறாரே ப.சிதம்பரம்?**

! வீரத்தைக் காட்டினால் வீரமரணம்தான் மிஞ்சும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் பதுங்கிப் பாய்கிறார்கள். கொரில்லாப் போர் முறை என்பதே அதுதான். பாம்புப் புற்று அருகே மகுடி வாசிக்கலாம்; அல்லது ஒரேயடியாக இடித் நொறுக்கி அடித்துக் கொல் லாம். சிதம்பரம் புற்றுக்கு கையை விட்டு ஆழம் பார் கிறார். கொத்தாமல் என் செய்யும்!

● **லெ.நா.சிவகுமார், சென்னை-**

**? ''அரசியலுக்கு என்னை நானே தயார்ப்படுத்தி வரு கிறேன். மக்கள் விரும்பு போது களத்தில் இறங்கு வேன்'' என்கிறாரே நடிக விஜய்?**

! அரசியலுக்குத் தங் களைத் தயார்ப்படுத்திக் கொள்ள பலர் இருக்கிறா கள். அது கூட்டுக் கொள்ளை யில் பங்கேற்க. விஜய் தமிழக அரசியலைத் தயார் படுத்தத் தயாராக வேண்டும் மக்கள் அழைக்கக் காத்திரா மல், மக்களை நல் அரசியல் நோக்கி வழிநடத்திச் செல் வேண்டும். இந்த உறுதி இல்லையெனில், அரசிய லுக்கு வராமை நன்று.

● **கே.ரமேஷ், பள்ளிபாளையம்**

**? மக்கள் தொகைக் கணக் கெடுப்பில் அரவாணிகள் மற்றும் சாலையோரம் வசிப் போரையும் சேர்க்க வேண் டும் என்று பிரதமரைக் கேட் டுக்கொண்டிருக்கிறாரே**

# அரசியலுக்கு ஆயத்த

தராசு

முதல்வர்?

! முதல்வரின் கோரிக்கை முறை
யானது. இதுவரை இது தவிர்க்கப்பட்டிருந்தால் அது தவறுபட்டிருந்தவறு. அவர்களுக்கு அங்கீகாரமும் வாக்குரிமையும் உறுதி செய்யப்பட வேண்டும். இத்தகைய கணக்கெடுப்பின் மூலம், நமது பொருளாதார வளர்ச்சி மேல் மட்டத்தில் மட்டும்தான் என்பது உறுதியாகிவிடும்.

● இரா.சக்கரபாணி, மதுரை

? இந்தியத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட முதல் கிரையோஜெனிக் இன்ஜினுடன் விண்ணில் செலுத்தப்பட்ட ஜி.எஸ்.எல்.வி-டி3 ராக்கெட் தோல்வியைத் தழுவியுள்ளதே?

! இந்த முதல் கோணல் முற்றும் கோணலாகிவிடாது. அறிவியல்ரீதியான முயற்சியில், முதல் தோல்வியைக் கண்டு கலங்க வேண்டியதில்லை. பிழைகளைக் களையவும், வெற்றியை அடையவும் ராக்கெட் வேக முயற்சிகளை நமது விஞ்ஞானிகள் மேற்கொள்வார்கள்.

● எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்

? பணம் பெற்றுக்கொண்டு செய்திகளைப் பத்திரிகைகள் பிரசுரிப்பதாக பத்திரிகையாளர் சம்மேளனம் குற்றச்சாட்டு எழுப்பியுள்ளதே?

! பத்திரிகைகளின் வியாபார நோக்கு, வாய்மைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். பத்திரிகைச் சம்மேளனத்தின் குற்றச்சாட்டு, ஆத்ம பரிசோதனைக்கு ஒப்பானது. தவறு தொடர்ந்தால், அத்தகைய பத்திரிகைகளைப் பகிரங்கமாக இனம்காட்ட சம்மேளனம் தயங்கக்கூடாது.

● கு.ப.இரகுநாதன், சென்னை-56 ❑

? சித்திரை 1ல் பஞ்சாங்கம் வாசிப்பதைத் தடைசெய்வதாலும், அதை மீறுவோரைக் கைது செய்வதாலும் தமிழ்ப்புத்தாண்டு மாறி விடுமா? அரசுக்கு ஏன் இந்த வீண் வேலை?

! மாறாது என்பது ஒருபுறமிருக்க, அரசின் இத்தகைய நடவடிக்கை, மக்களின் அடிப்படை சுதந்திரத்தைப் பறிப்பதும் ஆகும். பஞ்சாங்கம் படிக்க வேண்டும் என்று எப்படி வற்புறுத்த முடியாதோ அவ்வாறே படிக்கக்கூடாது என்றும் உத்தரவிட முடியாது; கூடாது. நடப்பது வீண் வேலை அல்ல; கருத்துத் திணிப்பு வேலை; மிரட்டல் வேலை.

● ஜி.இந்திரா, பெங்களூரு

? ''சமச்சீர் கல்விக்கான உள்கட்டமைப்புகளை ஒரே நாளில் செய்துவிட முடியாது.



* அரசியலுக்கு .தயார்

# சய்கிறாரே விஜய்?

★ சொல்லாத செய்தி!



அதற்கான அலாவுதீனின் அற்புத விளக்கு என்னிடம் இல்லை!'' என்று அமைச்சர் தங்கம் தென்னரசு சொல்கிறாரே?

! உண்மையை ஒப்புக் கொண்டதற்குப் பாராட்டலாம். அத்துடன்



★ திருப்பட்ட மனித உரிமை!

நில்லாமல், ''உள் கட்டமைப்பு வசதிகளைப் படிப்படியாக அதிகரித்து, அதற்கேற்ப சமச்சீர் கல்வி முறையையும் படிப்படியாக அமுல்படுத்துவோம்'' என்றும் கூறி, ஒரு கால நிர்ணயத்துடன் பணியாற்றினால் மேலும் பாராட்டலாம்.

● ஜெ.செல்வராணி, மதுரை

? பதிபக்தி இல்லாதவர் ஜெயலலிதா என கருணாநிதி கூறியுள்ளது பற்றி?

! சில வருடங்களுக்கு முன் சோனியா பற்றி ஜெ.சொன்ன வார்த்தைகளையேதான் இப்போது கருணாநிதி பேசியுள்ளார். அன்றும் இன்றும் என்றும் இத்தகைய தனிநபர் தாக்குதல்கள் அநாகரிகமானவையே.

● கே.என்.சுப்பிரமணியன், சென்னை-15

? மருத்துவச் சிகிச்சைக்காக வந்த பிரபாகரனின் தாய், இந்தியாவுக்குள் நுழைய அனுமதி மறுப்பது சரிதானா? மனிதாபிமானம் இருக்க வேண்டாமா?

! சட்டம் வேறு; மனிதாபிமானம் வேறு. அதிகாரிகள் சட்டப்படி செயல்பட்டதில் தவறில்லை. பிரபாகரனின் அம்மா, ''மருத்துவச் சிகிச்சைக்கு வருகிறேன் உதவி வேண்டும்'' என முதல்வருக்கு ஓர் அவசரச் செய்தி அனுப்பியிருந்தால், இந்த மனிதாபிமானமற்ற செயல் நடந்திருக்காது.

● ஜே.துரைராஜ், சென்னை-87

? பெங்களூரில் கிரிக்கெட் மைதானத்திற்கருகே

❑ ரூ. 150 பரிசு பெறுபவர்:
கு.ப.இரகுநாதன், சென்னை-56

★ ரூ. 75 பரிசு பெறுபவர்:
எஸ்.ராமசாமி, வடக்குதயிர்பாளையம்

குண்டுவெடிப்பு நடந்த பிறகும் ஐ.பி.எல் போட்டியைத் துணிச்சலுடன் நடத்தியிருக்கிறார்களே?

! நிலைக்களனையே மாற்றி ஆட்டத்தைத் தொடர்ந்தது துணிச்சல் என்பதாகத் தோன்றவில்லை. ஆனால், ஐ.பி.எல். ஊழல்கள் பெரிதாக வெடித்த பிறகும் ஆட்டத்தைத் தொடர்வது துணிச்சல்தான்!

● பி.பரத், அண்ணாமலைநகர்

? அரசு கேபிள் டீவி நிறுவனத்துக்கு இப்படி குடும்பத்தோடு சேர்ந்து பால் ஊற்றிவிட்டார்களே...

! கேபிள் பிஸினஸைக் கடைந்து மு.க. குடும்பத்தினர் வெண்ணெய் எடுக்க வசதியாகத்தான்.

ரூமுக்குள்ளேயே இருந்துட்டு திடீர்னு வெயில்ல வெளியே கிளம்பிப் போறீங்க. தெருவுல எறங்கி வெயிலைப் பார்த்ததுமே கண்கள் கூசும். வெயில்ல அலைஞ்சு திரிஞ்சுட்டு ரூமுக்குள்ள வர்றீங்க. வந்ததும் கண்களுக்குள் ஒரே எரிச்சலா இருக்கும். இது ரெண்டுக்குமே ஒரே கை வைத்தியம் கண்களைக் கழுவுறதுதான். சாப்பிட்டு அரை மணி நேரம் கழித்தோ அல்லது சிறுநீர் கழித்த பிறகோ, ஒரு பாத்திரத்துல தண்ணீர் நிரப்பி, அதுல கண்களை உள்ளே விட்டு இமைகளைத் திறந்து திறந்து மூடணும். இந்தப் பயிற்சியால கண் எரிச்சலும், கூச்சமும் விலகிப் போயிடும். - திருநாவு



# கண்களைக் கழுவுங்க!

● கீதா, அரக்கோணம்

***கிரேஸி, நீங்க ஆவி, பேய், பிசாசு, பூதம் இத்யாதிகளைப் பார்த்ததுண்டோ?***

போன வாரம் திக்திக் ஸ்பெஷல் கல்கியை கரைச்சுக் குடிச்ச எஃபக்ட்ல இப்படியொரு கேள்வியா...? வசமா மாட்டிக்கிட்டீங்க! திக்கித்திக்கி ஒரு பேயைப் பேட்டி எடுத்த அனுபவம் அடியேனுக்கு உண்டு. கேளுங்க... நான் 'ஆவி'யில் பணி புரிந்துகொண்டிருந்தபோது, (*பயப்படாதீங்க 'ஆவி'ன்னா ஆனந்தவிகடன்*) அப்போதைய இணையாசிரியர் 'ஹாய் மதன்' திடீரென்று ஒருநாள் 'பேய் மதனாக' மாறி, என்னைக் கூப்பிட்டு இந்த க்ஷணம் 'பேயோ, பிசாசோ, பூதமோ அட்லீஸ்ட் குட்டிச் சாத்தான்' இப்படி ஏதாவது ஒன்றை 'பேய்ட்டி'... ஸாரி பேட்டி எடுத்து வருமாறு கட்டளையிட்டார். இல்லாவிட்டால் அந்த மாதப் பேயை (Pay) குறைத்துவிடுவதாகப் பூச்சாண்டி காட்டினார். 'பேய் பயம் ப்ளஸ் பேட்டி எடுக்க பேய்க்கு எங்கே போவேன்' என்ற குழப்பத்தில் நான் பேய் முழி முழித்தேன்.

"மோகன்... திருவல்லிக்கேணி பேயாழ்வார் சன்னிதி தெருவுல 'வேதாள விலாஸ்'னு ஒரு பங்களா இருக்கு. அங்க பேய், பிசாசு உலவுறதா ஐதீகம். நீ வேணா அங்க பேய்... ஸாரி! அங்க போய் ட்ரை பண்ணிப் பாரேன்" என்று வயிற்றில் கள்ளிப் பாலை வார்த்தார் என் தந்தையார்.

திருவல்லிக்கேணி 'வேதாள விலாஸ்' பார்ப்பதற்கு, கட்டும்போதே பாழடைந்த பங்களாவாகக் கட்டியது போல புத்தம் புதுசாக இருந்தது. வாசல் சுவரில் காலிங் பெல் இருக்கும் உசரத்தில் காலில்லாமல் குந்தியிருந்தவரை வெலவெலத்துப் பார்த்து "நீங்கள் யார்" என்று கேட்டபோது, நபும்சகத்தனமாக என்னைப் பார்த்து நகைத்துவிட்டு "நான்தான் காலிங்பெல், அதாவது எம் பேர் மணி... என்னை அடியுங்க" என்றார். நான் தயங்க, அவர் தன் கன்னத்தில் தானே பேய் அறை அறைந்துகொள்ள, வீட்டுக்குள், மணி அடிக்கும் சத்தம் - வெளியே கோயில் மணிச் சத்தம் போல் கேட்டது. அப்போது 'காற்று வர கதவு திறந்தது'. உள்ளே அந்தரத்தில் இரண்டு குட்டிப் பிசாசுகள் பிரும்மாண்டமான காரம்போர்டில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் அவை இரண்டும், "அப்பா பேய்...

உன்னைப் பாக்க யாரோ மனுஷன்
வந்துருக்கான்டா" என்று ரகசியமாகக்
கூச்சலிட்டுவிட்டு, காரம் - போர்டை
மடித்துச் சுருட்டி வாயில் சூயிங்-கம்
போல் போட்டுக் கொண்டு, மென்று
விட்டு MRF பலூான் ஸைசுக்கு விட்ட
பப்பிள் வெடிக்க
அதிலிருந்து
'அப்பா பேய்
குதித்து வந்
தார்.



# பேயோ

வந்தவர் பார்ப்பதற்கு 'வைகை
பாண்டியன் எக்ஸ்பிரஸ்சில் ஜன்னல்
வெளியே தலையை நீட்டிக்கொண்டு
வந்தவர் போல' தென்பட்டார். பரட்
டையான அவர் ஹேர்-ஸ்டைல்
என்னை மயிர்க் கூச்செறிய வைத்தது
இரண்டு காதுகளிலும் 'கறிவேப்
பிலைக் கொத்தாக முடிகள்... வந்தது
அவரா? இல்லை அவரது நிழலா
என்று சந்தேகப்படும் அளவுக்கு அவ
ருக்கு தீபாவளி லேகியம் கலரில்
மேனி. கை குலுக்க தமது இல்லாத
கையை என்னை நோக்கி நீட்டி
"ஹலோ ஹவ் ஆர் யூ" என்றார். நான்
தயங்குவதைப் பார்த்தவர், தனது இல்
லாத கையால் எனது கால்களைப்
பிடித்து அசுரத்தனமாகக் குலுக்கி

விட்டு, அப்படியே என்னை அலாக் காகத் தூக்கிக்கொண்டு அந்தரத்தில் போய் அமர்ந்தார். உத்தரத்தில் ஓடிய 'டைனோசர்ஸ் சைஸ்' பல்லிகளைப் பார்த்து நான் பயப்பட, அவர் ''பயப் படாதீங்க. அதெல்லாம் செத்துப் போன பஞ்சாங்க பல்லிகள்'' என்று சொல்லி 'சூ போ' என்று விரட்ட, அந்த பல்லிகள் கெட்ட பலனைப் பார்ப்பது போல என்னைப் பார்த்து விட்டு எழுந்து நின்று நடந்து போயின. ''பல்லி நடக்குமா?'' என்று நான் கேட்க, உடனே அவர் அப் பல்லிகளைப் பார்த்து கண்ணடிக்க, ஒரு பல்லி பெல்லி டான்ஸ் ஆடிக் காட்டியது.

''பேட்டியை ஆரம்பிக்கலாமா''

# ஒரு பேய்(ய்)ட்டி!



என்று நான் கேட்க, வேலைக்காரி பேய் 'கிலியம்மா' வந்து ''ஒரு நிமிஷம் பெருக் கிடறேன்'' என்று சொல்லி விட்டு, நாங்கள் அமர்ந் திருந்த அந்தரத்தை, துடைப் பக் கட்டையால் அடித்துப் பெருக்க 'அய்யோ வலிக் குதே' என்று கூச்சலிட்டபடி அங்கு இறைந்து கிடந்த பேய்-பிசாசுகள் எழுந்து ஓடின... பேட்டி ஆரம்பமாயிற்று.

**நான்:** (பேனாவும் நானும் உதறிய படி) என் வாழ்க்கைல நான் பேட்டி எடுக்கற மொதல் பேய் நீங்கதான்!

**பேய்:** (ஆயிரம் பேர் *கோரஸாகச் சிரித்தால் வரும் சத்தத்தில் சிரித்துவிட்டு*) என் Death-க்கு அப் புறம் நான் பேட்டி கொடுக்கற மொதல் மனுஷன் நீங்கதான்!

**நான்:** உங்க பேர்?

**பேய்:** பூதம்!

**நான்:** அப்ப நீங்க பேய் இல்லியா?

**பேய்:** உசிரோட இருக்கறப்ப எம் பேர் மாத்ரு பூதம்... இப்ப நான் பேய்... Funeralogy பிரகாரம் என் பேரை பூதம்னு சுருக்கிக்கிட்டேன்!

**நான்:** மிஸ்டர் பூதம்! நீங்க எப்படிப் பேயானீங்க? ஐ மீன் செத்தீங்க?

**பேய்:** பழத்தால என் உசிர் போயிடிச்சு!

**நான்:** *(வெகுளியாக)* பலாப் பழத்தை அப்படியே முழுங்கிட்டீங்களா?

**பேய்:** வாழைப்பழம்... பழம் நழுவி பால்ல விழும்பாங்க. நான் பேயம் பழத்துல வழுக்கி பால் வண்டிக்கு அடில விழுந்து செத்துட்டேன்.!

*(அப்போது, வெள்ளைப் புடைவையில் தலை நிறைய கறுப்பு மல்லிகைப் பூ வைத்துக்கொண்டு ஒருத்தி பிரசன்னமானாள்.)*

**பேய்:** மீட் மை மனைவி... காத்துக்

கருப்பாயி. 'அவள் காதில் விழும் அளவுக்கு ரகசியமாக என் காதில்) உசிரோட இருக்கச்சே என் உசிரை வாங்கினா. இப்ப செத்து வந்து என்னைச் சாவடிக்கறா...!

**மனைவி பேய்:** ஆமாம், கோள் மூட்டற முகரையைப் பாரு... உசிரோட இருக்கச்சே 'பெசன்ட் நகர்' பீச்சுக்கு அழைச்சுகிட்டு போங்கன்னு எவ்வளவு தடவை கேட்டேன். அப்ப ஆஃபீஸ் ஆஃபீஸ்னு பேயா அலைஞ்சீங்க. அட்லீஸ்ட் இப்பவானா ஜாலியா பெசன்ட் நகர் மயானம், கீழ்பாக்கம் சிமெட்ரி...ன்னு அழைச்சுகிட்டுப் போங்க...

*(அப்போது அங்கு சுடச்சுட ஒரு கொள்ளி வாய்ப் பிசாசு வந்தது)*



**கொள்ளிவாய் பிசாசு:** இவன் மூஞ்சிக்கு என்னடி குறைச்சல்.. ஒண்ணு தெரிஞ்சுக்கோ... 'பேயானாலும் புருஷன்னு' பழமொழியே இருக்கு.

**பேய்:** அம்மா! ப்ளீஸ்! பழம்னு சொல்லாதீங்க. பழத்தாலதான் நான் பேயாயிட்டேன்!

**நான்:** இவங்க யாரு?

**மனைவி பேய்:** என்னோட மாமியார் கொள்ளிவாய்ப் பிசாசு! அம்மா, நீங்க ஒண்ணும் உங்க புள்ளையை சப்போர்ட் பண்ண வேணாம்!

**மாமியார் கொள்ளி வாய்ப் பிசாசு:** அப்படித்தான் பண்ணுவேன். ஆயிரம் சொன்னாலும் 'பேய்க்கு தன் குஞ்சு வேப்பமரப் பிஞ்சு' தெரிஞ்சுக்கோ!

**பேய்:** சேச்சேசே... மண்டையைப் போட்டதுக்கு அப்புறமும் இந்த மாமியார்-மாட்டுப் பொண் சண்டையை நிறுத்த மாட்டேங்கறீங்களே... *(எழுந்து)* நான் போய் அப்புறம் முருங்க மரத்துல தூக்குப் போட்டிகிட்டுத் தற்கொலை பண்ணிப்பேன்! ஆமாம்..., *(என்னைப் பார்த்து)* நீங்க பேட்டியைத் தொடருங்க சார்...

**நான்:** இதுக்கு முன்னாடி நீங்க என்னவா இருந்தீங்க?

**பேய்:** உசிரோட இருந்தேன்!

**நான்:** அதில்ல பேய் சார். எங்க வொர்க் பண்ணிகிட்டு இருந்தீங்க?

**பேய்:** 'திகிலன்'ங்கற புனை பெயர்ல பேய்க் கதைகள் எழுதுவாரே... அவருக்கு 'கோஸ்ட் ரைட்டரா' இருந்தேன்.

"அண்டை நாட்டுடன் நடந்த போர், அமைதியாக முடிந்துவிட்டதே?"

"நமது அரசர், வாள் பிடித்து சண்டை போடுவதற்குப் பதிலாக எதிரி மன்னரின் கால் பிடித்ததுதான்யா காரணம்!"

– **ராய்.இம்மானுவேல்**

*(அப்போது அவர் மனைவி பேய் காப்பி கொண்டு வந்து தந்துவிட்டு)*

**மனைவி பேய்:** அம்மா ப்ளீஸ்.. வேணாம் போயிடுங்க... (என்று மிரட்ட.... காஃபியில் ஒளிந்துகொண்டிருந்த மாமியார் பேய் ஆவி பறக்க ஓடினாள்.)

**நான்:** *(நோட்ஸ் எடுத்த என் பேனாவில் இங்க் தீர்ந்து போய் விட்டதால்)* இங்க் இருக்குமா உங்ககிட்ட?

**பேய்:** ரெட் இங்க் பரவாயில்லையா... *(என்று கேட்டுவிட்டு உள்ளே பார்த்து)* RK இங்க வா... *(என்று கூப்பிட RK வந்தார்)*

**நான்:** *(நெர்வஸ்ஸாக)* யாரிவர் RK ?

**பேய்:** எம் மச்சான். RK – ரத்தக் காட்டேரி. RK, சாருக்கு ரெட்-இங்க் கக்கு... (என்று

சொல்ல RK என் பேனாவை வாங்கி அதில் ரத்தத்தை ரொப்பிக் கொடுத்தார்.)

நான்: (நடுங்கியபடி பேனாவை வாங்கி) மத்தியான வேளைல நீங்க என்ன பண்ணுவீங்க?

பேய்: பேய்த் தூக்கம் போடுவோம். ராத்திரி யாரான தனியா வந்தா அவனைப் பிடிச்சுப்போம்!

நான்: இன்னிக்கு யாரை புடிக்கறதா உத்தேசம்?

பேய்: கும்பிடப் போன மனுஷன் குறுக்கே வந்தா மாதிரி, அதான் நீங்க வந்துட்டீங்களே!

**மச்சான் பேய்:** மாமோய்... இவருக்கு இங்க் போட்டதுல எனக்கு ரத்தசோகையா இருக்கு!

பேய்: சரி... அப்ப நீ மொதல்ல இவர்கிட்ட ரத்தத்தை உறிஞ்சிக்க. அப்பால நான் இவரைப் புடிச்சுக்கறேன்!

**மனைவி பேய்:** (வந்து என் கையைப் பிடித்து) என்னைச் சுடுகாட்டுக்கு அழைச்சுகிட்டுப் போய் சுத்திக் காட்டுங்க ப்ளீஸ்!

(அப்போது அங்கு ஒரு கோணவாய்ப் பாட்டி பிசாசு வந்து)

**கோ.வா.பி:** டேய் பேராண்டி... பேயைப் பாத்தேன். பாரிச வாயுல செத்ததால என் வாய் கோண வாயா ஆயிடுச்சாம். உசிரோட இருக்கற மனுஷனுக்கு உம்மா கொடுத்தா சரியா போயிடுங்கறார் டாக்டர். கதவைத் தட்டிட்டு உள்ள நுழைஞ்சா, என் அதிர்ஷ்டம் (என்னைக் காட்டி) காத்துகிட்டிருக்கு... ஒரே ஒரு உம்மா கண்ணா... (என்று என் அருகில் கோ.வா.பி. பாட்டி நெருங்க... என் ரத்தத்தை உறிஞ்ச RKP அணுக. மனைவி பேய் என்னைக் கையைப் பிடித்து இழுக்க... மாமியார் கொ.வா.பி. என்னைச் சுடச்சுட நெருங்க... நான் 'வல்ல பேய்கள் வாலாட்டிக பூதம்... அல்லல் படுத்தும் அடங்கா முனிகள்' என்று கந்தர் சஷ்டி கவசத்தைச் சொல்ல, யாரோ என்னை உலுக்க... எழுந்து பார்த்தால் படுக்கையில் நான்... பக்கத்தில் என் மனைவி... அத்தனையும் கனவு... ஆமென்... ஸாரி ஓமன்!

கோடையைச் சமாளிக்க குளுகுளுன்னு என்னென்ன சாப்பிடலாம் என்று பெரிய பட்டியலே இடலாம்.

இந்தமுறை வித்தியாசமாகக் கல்லூரி இளசுகள், குறிப்பாக கேட்டரிங் துறை மாணவ, மாணவிகள் என்ன மாதிரி வித்தியாசமான ரெஸிபிகள் செய்து கோடையை அசத்துகிறார்கள் என்று தெரிந்துகொள்ளப் போனோம்.

கோவை கே.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி மாணவிகள், மாணவர்கள் நுங்கும், இளநியும் சேர்ந்த ஸ்பெஷல் குளுகுளுப்புடன், வாயில் நுழையாத ஜப்பான், சீனப் பெயர்களோடு நம்ம ஊரில் கிடைக்கும் பொருட்களை வைத்துச் சுவையான, சுகாதாரமான ரெஸிபிகளைச் செய்து வியக்க வைத்தார்கள். அவை, குளிர்ச்சி, ரிச் புரோட்டீன், விட்டமின் நிரம்பியதாய், வயிற்றுப் பிரச்னைகளைச் சரி செய்யும் விதமாய், எண்ணெய், கொழுப்பு இல்லாமல், நார்ச்சத்து அடங்கியது என்று விளக்கம் தந்தார்கள். இதோ அவர்கள் அசத்தும் குளுகுளு டிப்ஸ் சில...



# இது யூத் ரெஸிபி!

***கேட்டரிங் மாணவி யமுனா வழங்கும்***

## மூன்று கண் நுங்கு பாயசம்

**தேவையான பொருட்கள்:**

தோல் நீக்கப்பட்ட நுங்கு 10, பால் 600 மிலி, சர்க்கரை 1 கப், இளநீர் - 300 மிலி, நெய் தேவையான அளவு, முந்தரிப் பருப்பு 2.5 கிராம்

ஏலக்காய் தேவையான அளவு

**செய்முறை:**

நுங்கை துண்டுதுண்டாக நறுக்கவும். தனியாக பாலுடன் சர்க்கரையைச் சேர்த்துக் கொதிக்க வைத்து ஆற வைக்கணும்!

ஒரு பாத்திரத்தில் நுங்கு, இளநீர் மற்றும் ஆற வைத்த பால் இவற்றைக் கலக்கி வைக்கவும். மற்றொருபுறம் நெய்யினை உருக்கி முந்திரிப் பருப்பினை வறுத்தெடுக்கவும். ஏலக்காயைப் பொடியாக்கி பாலுடன் இவ்விரண்டையும் சேர்த்துக் கொள்ளவும். தயாரிக்கப்பட்ட இந்தக் கலவையை கண்ணாடித் தம்ளரில் ஊற்றி, குளிர் சாதனப் பெட்டியில் வைத்து அரை மணி நேரம் கழித்து எடுத்தால், மூன்று கண் நுங்கு பாயசம் ரெடி!





*கேட்டரிங் மாணவன் பவன் அசத்தும்*

**வாட்டர் லைம் பிரிஸ்**

**தேவையான பொருட்கள்:**

தர்பூசணி 2 கிலோ

எலுமிச்சை 1

சர்க்கரை 100 கிராம்

காய்ச்சிய பால் அரை லிட்டர்

துருவிய ஐஸ் 2 கப்

**செய்முறை:**

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் தர்பூசணியின் பிழிந்த சாறு, எலுமிச்சைச் சாறு, இரண்டையும் நன்கு கலக்கி, இதனுடன் தேவையான அளவு சர்க்கரையுடன் நன்கு சுண்டக் காய்ச்சிய பாலுடன் மிக்ஸ் பண்ணவும்! ஒரு கண்ணாடி தம்ளரில் துருவிய ஐஸ்சைப் போட்டு, அதன் மீது மேலே சொன்ன கலவையை ஊற்றினால், 'வாட்டர் லைம் பிரிஸ்' தயார்!

சந்திப்பு : **ஆர்.பாலா**





# கல்கி



2010 மே 2
விக்ருதி சித்திரை 19
மலர் : 68
இதழ் : 40

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


## கிரிக்கெட் ரசிகன் முகத்தில் கரி!

**20-20** போட்டிகளை நடத்தும் ஐ.பி.எல். அமைப்பு, கிரிக்கெட் விளையாட்டுக்கு சேவை செய்வதற்காக ஏற்பட்டதல்ல. உயர் பண்புகளுக்கே குறியீடாகக் கொள்ளப்பட்ட நல்லதொரு விளையாட்டை, ஒட்டுமொத்த வியாபாரக் கேளிக்கையாக உருமாற்றி, குறுகிய காலத்தில் கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்காக நிறுவப்பட்டது. அமைப்பின் நோக்கமே இவ்வாறு இருக்க, அதன் நடவடிக்கைகளும் அதன் ஆதரவில் நடைபெறும் ஆட்டங்களும் எப்படி ஆரோக்கியமாக இருக்கும்?!

நமது நாட்டில் மிக அதிகமாகப் பணம் புரளும் களங்கள் பெரும்பாலும் அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. கேபிள் தொலைக்காட்சி, சினிமா வர்த்தகம், சுயநிதிக் கல்லூரிகள், சாராயத் தொழிற்சாலைகள் என அனைத்திலும் அரசியல் பெரும்புள்ளிகளின் ஆதிக்கம்தான். கறுப்புப் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடும் இவர்கள், அதனைக் கணக்கில் கொண்டு வரவும், மேலும் கொள்ளையடிக்கவும் ஒரு நல்ல மார்க்கமாக ஐ.பி.எல்.லை அடையாளங்கண்டதில் வியப்பில்லை. 'பெரிய பெரிய தொழிலதிபர்களும் களம் இறங்க-அரசியல்வாதிகளும் தொழிலதிபர்களும் அடிக்கும் கூட்டுக் கொள்ளையாக ஐ.பி.எல். விளங்குகிறது. சசி தரூரின் ராஜினாமாவும், அவர் தோழி ரூபாய் எழுபது கோடிக்கான பங்குகளைத் திரும்பத் தந்ததும் இந்தக் கூட்டுக் கொள்ளையின் ஒரு சிறு அடையாளமே!

ஐ.பி.எல்.லை சிருஷ்டித்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு






வாரியம், ஷரத் பவாரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதன் தலைமையை அடைய அவர் என்ன பாடுபட்டார் என்பதைச் சுலபத்தில் மறந்துவிட முடியாது. ஐ.பி.எல். தலைமைப் பொறுப்புக்கு லலித் மோடியை ஆதரித்து அமர்த்தியவரும் அவரே! தரூர் விவகாரம் வெளிச்சத்துக்கு வந்த பிறகு, பவாரின் உறவினர்களும் ஐ.பி.எல். மூலம் முறைகேடான ஆதாயங்களை அடைந்துள்ளதாகச் செய்திகள் கசிகின்றன. இன்னும் பல புற்றுகளில் பல பாம்புகள் பதுங்கியிருப்பது மெள்ள மெள்ள வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆட்டத்திறனை ரசிக்கும் மகிழ்ச்சியும், சத்தியத்துக்குக் கட்டுப்படும் திருப்தியும், எதிரணியின் ஆற்றலையும் மதிக்கும் மாண்பும் கிரிக்கெட்டில் சில காலம் முன்புவரை இருந்தது. ஆனால், தற்போது இவற்றையெல்லாம்விடப் பணம்தான் கிரிக்கெட்டில் முக்கியமாகிவிட்டது. ஆட்டக்காரர்களின் சம்பாத்தியம், தேவை என்கிற வரம்பிலிருந்து பேராசை என்கிற வரம்பற்ற பிரதேசத்துக்குப் போய்விட்டது. பிறகு, ஆட்டக்காரர்களை ஏலத்தில் எடுக்கும் அருவருப்பான நிகழ்வும் ஆரம்பித்தது. ஆட்ட நேரம் குறுக; அதையொட்டி சூதாட்டம் வளர்வதும் சுலபமாயிற்று. சூதாட்டம் நடத்துவோர், ஆட்டக்காரர்களை விலைக்கு வாங்கி, பந்தயங்களின் முடிவுகளை முன்கூட்டியே தீர்மானிப்பதாகவும் தெரிய வந்தது. போதாக் குறைக்கு, திரையுலகப் பகட்டும் ஆட்ட அழகிகளின் அநாகரிகமும் வேறு, கிரிக்கெட் மைதானத்தை ஆக்கிரமித்துள்ளன.

மெய்யான கிரிக்கெட் ரசிகனின் முகத்தில் கரியைப் பூசும் இந்தக் களத்தை, எந்த முனையில் தொடங்கிச் சுத்தப்படுத்த? ஐ.பி.எல்.லையே கலைப்பதுடன், சந்தேகத்தின் நிழல் படிந்தவர்கள் பேரில் விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கையை உடனடியாக எடுப்பதே ஆறுதல் தரும். ஆட்டப் பண்புகளுக்கு நேர் விரோதமாகக் கிரிக்கெட் வாரிய நிர்வாகப் பண்புகள் அமைய இனியும் அனுமதிக்கப்பட்டால், உலக அரங்கில் இந்திய கிரிக்கெட் வென்றாலும், அந்த வெற்றிக்கு மதிப்பிராது. ●



# அவலட்சணப் போட்டி!

# அமரர் கல்கி

பெண்கள் எல்லாரையும் தாய்மார்களாகவும் சகோதரிகளாவும், பராசக்தியின் வடிவங்களாகவும் கருதிப் போற்றும் பண்பாடு பாரத நாட்டின் பண்பாடு. தாய்மார்களையும் சகோதரிகளையும் கொண்டுவந்து பலர் பார்க்க நிறுத்தி, முன்னழகும் பின்னழகும் பார்த்து, அலங்காரங்களை எடை போட்டு அளவிட்டு, அழகுப் போட்டி நடத்துவது எவ்வளவு அருவருக்கத்தக்க விஷயம்?

கல்விப் பயிற்சி, கைத்தொழில் திறமை, தன் முயற்சி முதலிய துறைகளில் போட்டி நடத்தினால், அப்போட்டியில் ஈடுபடுகிறவர்களின் வளர்ச்சிக்கு உதவியாயிருக்கலாம். போட்டியிட்டுக் கொண்டு அவர்கள் முன்னேற முயற்சிக்கலாம்.

ஆனால், அப்படிப்பட்ட அறிவியல் கல்வித் துறைகளிலே கூடப் போட்டிகளும் பரிசுகளும் வைக்கக்கூடாது என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். சிலருக்குப் பரிசு கிடைப்பதால் மற்றவர்களுக்கு அசூயையும் மனச்சோர்வும் ஏற்படுமே தவிர, அதனால் ஊக்கமும் வளர்ச்சியும் ஏற்படாது என்று அவ்வறிஞர்கள் கூறுகிறார்கள்.

அழகு என்பது கடவுள் அளிக்கும் வரப்பிரசாதம்; மனிதர்களால் வளர்த்துக் கொள்ளக்கூடியது அல்ல. பின், அழகுப் போட்டி வைப்பதின் பொருள் என்ன? அழகுப் போட்டிப் பரிசைக் கடவுளுக்கு அல்லவா கொடுக்க வேண்டும்? அல்லது அந்த அழகிகளின் பெற்றோர்களுக்கு அல்லவா அளிக்க வேண்டும்?

பெண்களிலே அழகுப் போட்டி வைப்பது என்றால் அதற்குத் தராதரம் எப்படிக் கண்டுபிடித்து முடிவு செய்வது? பட்டணங்களிலே சிவப்பு நிறத்துடன் மேனி மினுக்குகிற பெண்கள்தான் அழகிகளா?

''திருநெல்வேலிச் சீமையில் மறக்குலத்து ஏழைச் சகோதரிகள் மலைக்காடுகளில் விறகு பொறுக்கிக் கட்டிக்கொண்டு நடந்து வருவார்கள். அவர்களுடைய அழகுக்குக் கால் தூசி பெற மாட்டார்கள் பட்டணத்தில் பவுடர் பூசி வளரும் நாகரிக மங்கையர்கள்,'' என்கிறார் ஒரு நிருபர். இதிலிருந்து அழகை எடை போட்டுப் பார்ப்பது எவ்வளவு கடினமான வேலை என்று புரிகிறது.

ஏற்கெனவே நம் நாட்டில் உள்ள கோளாறுகள் போதாவென்று, இந்த அநாகரிக, அநாசார, அவலட்சண, அழகுப் போட்டியை யாரோ சில புண்ணியவான்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு நாட்டு மக்கள் சிறிதும் ஆதரவு காட்ட மாட்டார்கள் என்று நம்புவோம்.

\- கல்கி (16.03.1952)

**கல்வெட்டுகள்**



அலையன்ஸ்
சிறப்பு விருந்தினர்கள்
ஸ்ரீமதி கலாநிதி நாராயணன்
'காவியக் கவிஞர்','பத்மஸ்ரீ' வாலி
முனைவர் வெ.இறையன்பு IAS
முனைவர் கவிஞர்
தமிழச்சி தங்கபாண்டியன்
மயிலை சட்ட மன்ற உறுப்பினர்
எஸ்.வி.சேகர்
ப பாவம்
ர ராகம்
த தாளம்
மூன்றையும் காலெடுத்து சேர்ப்பது
பரதம்
கலையின் அங்கம் இசை
இசையின் அங்கம் பரதம்
பரதத்தின் அங்கம் அரங்கேற்றம்
குமாரி ஸ்ரீநிரஞ்ஜனி
01.05.2010 – சனிக்கிழமை மாலை சரியாக 6.00 மணி
பாரதிய வித்யா பவன் மயிலாப்பூர், சென்னை–600 004
உங்கள் வருகை
எங்கள் பெருமை

# கட்லெட்டின்



குழந்தைகள், இளைஞர்களின் ஃபேவரிட் ஃபுட் 'பர்கர்'. ஹோட்டல், சினிமா, அவுட்டிங், மால் என வெளியே போனாலே, பர்கர் கண்டிப்பாகச் சாப்பிட வேண்டுமென்பது யூத் உலகச் சட்டம்!

மேல்நாட்டு உணவு வகை என்றாலும், நம் நாட்டில் டாப்டென் ஃபாஸ்ட் புட்டில் பர்கருக்குக் கண்டிப்பாக இடம் உண்டு. இரு பன்களுக்கு நடுவே வைக்கப்படும் வெஜ் கட்லட், பாட்டீஸ் அல்லது நான் வெஜ் ப்ரியர்களுக்கு இறைச்சி, சிக்கன்... என வண்டலூர் ஐட்டங்களும் உண்டு.

க்ரில் அல்லது அவனில் டோஸ்ட் செய்யப்படும் பன்களின் உள்ளே, லேயர் லேயராக தக்காளி, வெள்ளரி, டொமாட்டோ சாஸ், சில சட்னி வகைகள், சீஸ்... என டபுள் டக்கர் பஸ் கணக்காக உயர்ந்து நிற்கும், பர்கர் பன்ஸுக்கு ரசிகர்கள் ஏராளம்.

பொதுவாக மேலை நாடுகளில் மாட்டிறைச்சி வைத்துச் செய்யப்படும் பர்கர், இந்தியாவில் தயாராகும்போது இந்த மக்களுக்குப் பிடித்த மாதிரி அவதாரம் எடுத்து அசத்துகிறது.

இன்று மெக்டோனல்ட் செல்லப் பிள்ளையாகிவிட்ட பர்கரை முதலில் யார் கண்டு பிடித்தது, எப்படிச் செய்தார்கள் எனக் கேட்பவர்களுக்கு, பல பின்னணிகள், பல கதைகள்.

மங்கோலியப் பேரரசனான செங்கிஸ்கான் (1167-1227) தன் குதிரைப் படை வீரர்களுடன், உலகின் பல பகுதிகளைத் தாக்குதல் நடத்திப் போரிட்டு, தன் ஆளுமையில் வைத்திருந்தான். மங்கோலிய வீரர்கள் வைத்திருந்தது சிறு குதிரைகளை. ஒருமுறை குதிரையில் ஏறிவிட்டால், நாள் கணக்கில் இறங்கவே மாட்டார்களாம். ஏதாவது ஒரு இடத்தில் தங்கி, தீ மூட்டி சமைப்பது என்பதற்கு அவகாசம், சந்தர்ப்பம் எதுவும் கிடையாது. குதிரைப் படைகளுக்குப் பின்னால், ஒரு கிராமமே மந்தை மந்தையாக ஆடு, செம்மறியாடு, எருது, குதிரைகள் என ஓட்டிச் செல்வார்களாம். குதிரை வீரர்கள் அதில் அமர்ந்தபடியே, ஒரு கையால் இறைச்சியை நசுக்கி உண்ணுவார்களாம். இந்த இறைச்சியை, கடும் தோலை சாஃப்ட் பண்ணுவதற்கும் ஒரு ஐடியா பண்ணினார்கள். போரிடும்போதெல்லாம், தங்கள் இருக்கைக்குக் கீழேயே இறைச்சியை வைத்துவிட்டு தேவைப் படும்போது லபக் கென்று விழுங்கி விடுவார்களாம்!

தன் கையாலேயே செய்து கட்டிகள், வால்கள் + கட்டிகளின் டாடிகளுக்குத் தர வேண்டும் எனப் பிடிவாதம் பிடிக்கும் பெண் மணிகளுக்கு -

* காரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு போட்டு வெஜிடபிள் கட்லட் செய்யவும்.

* இதில் உங்களுக்குப் பிடித்தமான சில்லி பவுடர், பச்சை மிளகாய் பேஸ்ட், கரம் மசாலா பவுடர், சாட் மசாலா சேர்க்கலாம்.

* பர்கர் பன்னில் தாராளமாக வெண்ணெயைத் (விலைவாசியைப் பற்றி நினைக்காமல்) தடவி, கட்லட்டை வைப்பதற்கு முன்னால் தக்காளி, வெள்ளரி ஸ்லைஸ்களை அடுக்கவும். பிறகு கட்லட்; பிறகு மீண்டும் தக்காளி, வெள்ளரி, வெங்காயம், முட்டை கோஸ் இவை பரப்பி அதன் மீதும் வைக்கலாம்.

* கவனமாக ரோஸ்ட் (தவாவில்) அல்லது க்ரில் செய்யவும்.

* டொமாட்டோ கெட்சப்புடன் பரிமாறவும். கூடவே சிப்ஸ்!

* குறிப்பு: கட்லட் உங்கள் விருப்பம்போல் காய்கறி, மஷ்ரூம் போட்டுச் செய்யலாம். மேலாக சீஸ் துருவியும் போடலாம். நடுநடுவே சீஸ் ஸ்லைஸ் வைக்கலாம்.

# கொள்ளுத் தாத்தா!

லதா சேகர்



கட்லெட்டின் கொள்ளுத் தாத்தா! பர்கரின் விதை. பதினொன்றாம் நூற்றாண்டில் மங்கோலியர்கள் சாப்பிட்ட இந்த மாமிச பாட்டீஸ்தான்.

1238-ல் செங்கிஸ்கானின் பேரனான குப்லாய்கான் மாஸ்கோ மீது படையெடுத்தபோது, தங்களுடன் வழக்கமான உணவான மாவாக்கப்பட்ட இறைச்சியையும் கொண்டுவந்து சாப்பிட்டனர் அவன் படையினர். இது ரஷ்யர்களுக்குப் பிடித்துப் போக, தங்களுடைய ஸ்டைலில் இதைச் செய்து 'ஸ்டீக் டார்டாரே' என்று பெயர் சூட்டினர். (மங்கோலியர்களை 'முரடன்' எனவும் சீக்ரெட்டாகப் பெயரிட்டிருந்தனர்!) ரஷிய செஃப்கள் தங்கள் பாணியில், ருசிக்கு ஏற்ப வெங்காயத்தையும் பச்சை முட்டைகளையும் சேர்த்துச் செய்தனர்.

1600-ல் ஜெர்மனியில் ஹாம்பர்க் துறை முகத்திலிருந்து ரஷியாவுக்கு கப்பல்கள் போக ஆரம்பித்தன. இந்தக் கால கட்டத்தில் ரஷியாவில் பிரபலமான ஸ்டீக் டார்டாரேவை சீஸ் எனப் போட்டு, ஜலேசா என ஜெர்மனிக்கு கொண்டு வந்து டார்டாரே ஸ்டீக் எனப் பெயரிட்டு வழங்கினார்களாம். நம் நாட்டில் வெஜ் பர்கருக்குதான் ஏக டிமாண்ட். (பெட்டிச் செய்தி பார்க்க...) ○

"கொழுப்புச்சத்து கிட்டே வரக்கூடாது; வெண்ணெய்யா, வேண்டவே வேண்டாம்; நீண்ட நேரம் எண்ணெய்யில் பொறித்தது எதுவும் கூடாது; இனிப்புக்கு மட்டுமில்லை; சர்க்கரைக்கே தடா! இனிப்பு வேண்டுமென்றால் தேன் பயன்படுத்தலாம்; அசைவத் தயாரிப்புக்கோ ஆயிரம் கண்டிஷன்கள்; புரோட்டீனும், கார்போஹைட்ரேட்டும் நிறைய இருக்க வேண்டும். இவை எல்லாம் என்ன? ஐ.பி.எல். போட்டிகளில் பல்வேறு அணிகளிலும் இடம்பெற்றிருக்கும் கிரிக்கெட் வீரர்களுக்கு உணவு தயாரிக்கும் விதிமுறைகள். இத்தனை கட்டுப்பாடுகளோடும் தயாரிக்கும் உணவு, வாய்க்கு ருசியாகவும் இருக்க வேண்டும்; சாப்பிடத் தூண்டும் வாசனையோடு இருக்க வேண்டும்; நீங்களே சொல்லுங்க! இது எவ்வளோ பெரிய சவால்?" என்று கேட்கிறார் செஃப் பிரவீன் ஆனந்த். இவர் சென்னை பார்க் ஷெராட்டன் நட்சத்திர ஓட்டலில் உள்ள தக்ஷிண் உணவகத்தின் தலைமை செஃப்.

"ஐ.பி.எல். அணிகளில் இடம்பெற்றிருக்கும் வீரர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவர்கள் மட்டுமில்லாமல், உலகின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்தவர்கள்; எனவே, அவர்களுடைய உணவுப் பழக்கங்கள் வெவ்வேறாக இருக்கும். டெல்லி, பஞ்சாப் அணியின் பெரும்பாலான வீரர்கள் தந்தூரி ரொட்டி போன்றவற்றையே விரும்புவார்கள்; பெங்களூரு அணியில் பலர் சைவம். ஹைதராபாத் அணியினருக்கு ஸ்பெஷல் பிரியாணி பிடிக்கும்; தனிப்பட்ட ஆட்டக்காரர்களை எடுத்துக்கொண்டால், முத்தையா முரளீதரனுக்கு சாப்பாட்டில் தயிர் சாதம் இருந்தே ஆக வேண்டும். திட்டமிட்டு வேலையைச் சிறப்பாகச் செய்து



# கொழுப்பா... 'ஊச்!' வெண்ணெய்யா 'போச்!'

முடிக்கிறபோது கிடைக்கும் பாராட்டில், அத்தனை கஷ்டங்களும் மறந்துபோய்விடும்'' என்கிறார் பிரவீன் ஆனந்த்.

''முதல் முறை ஐ.பி.எல். போட்டியின் முதல் மேட்சில், சென்னை சூப்பர் கிங் அணி வெற்றியுடன் ஹோட்டலுக்குத் திரும்பியபோது, நாங்கள் தயாரித்து வைத்திருந்த ஒரு மெகா சைஸ் கேக்கை, கேப்டன் தோனி வெட்டி எல்லோருக்கும் கொடுத்து, வெற்றியைக் கொண்டாடினார். அடுத்து ஒவ்வொரு வெற்றியின் போதும் அப்படியே கேக் வெட்டிக் கொண்டாட்டம் நடந்தது. சச்சின், ''போன முறை வந்த போது இன்ன ஐட்டம் செய்திருந்தீர்களே அது சூப்பர். எனக்கு இப்போதும் அதைச் செய்து கொடுங்கள்'' என்று கேட்பார். கிரிக்கெட்டர்கள் தனிப்பட்ட முறையில் சென்னை வரும்போது இங்கே தங்கினாலும், அதே போலக் கேட்பதுண்டு!''

**போ**ட்டி நடக்கும் தினங்களில் மைதானத்தில் உணவு வழங்கும் பொறுப்பு இன்னும் சவாலானது. விளையாட்டு வீரர்கள், மற்ற வி.ஐ.பிக்களுக்கு பஃபே ஸ்டைல், ரசிகர்களில் சில பகுதிகளில் இருப்பவர்களுக்கு பஃபே, மற்றவர்களுக்கு டிரேயில் பேக் செய்த உணவு. மைதானத்தில் போட்டி துவங்குவதற்கு குறைந்தபட்சம் நாலு மணி நேரம் முன்பாக எல்லா உணவுப் பொருட்களையும் ஸ்டேடியத்துக்குள் எடுத்துச் சென்று விட வேண்டும். அதன் பிறகு, எங்களுக்கு உள்ளே செல்ல அனுமதி கிடையாது. ஆனால், உள்ளே அனைவருக்கும் உணவோ, இதர ஸ்நாக்ஸ்களோ கொடுக்கிற போது அவை சுடச்சுட இருக்க வேண்டும்.

ஹோட்டல் கிச்சனில் உணவு தயாரித்து, குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வேன்களில் அவற்றை மைதானத்துக்கு எடுத்துக் கொண்டு போனோம். மைதானத்துக்குள் ஒரு சின்ன கிச்சன் அமைத்துக் கொண்டு, அங்கே எல்லாவற்றையும் சூடுசெய்து வழங்கினோம். பல்வேறு பகுதிகளிலும் உணவு வழங்கப்பட வேண்டியிருந்ததால், ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக வண்ணக்குறியீடு செய்து, அந்தந்த பகுதிக்குரிய ஐட்டங்கள், அந்தப் பகுதிக்கே நேரடியாகக் கொண்டு செல்லவும் ஏற்பாடு செய்து கொண்டோம். இதனால் பலவிதமான குழப்பங்களைத்



* பிரவீன் ஆனந்த்.



• அவினாஷ்

தவிர்க்க முடிந்தது.


எல்லாவற்றையும் பக்காவாகத் திட்டமிட்டு நாங்கள் செயல்பட்ட போதிலும், திடீரென்று ஒரு சிக்கல் வந்தது. பொதுவாக எந்த ஒரு பகுதியா னாலும், நாங்கள் அங்கே இருப்பவர்களில் அறுபது சதவிகித பேர் அசைவம், மீதி சைவம் என்று ஒரு கணக்குப் போட்டு, உணவு எடுத்துக் கொண்டு போவோம். ஆனால் ஒருநாள், ஒரு குறிப்பிட்ட பகுதியில் உட்கார்ந்து கொண்டிருந்த நாற்பது பேர்களில் சற்றும் எதிர் பாராதவிதமாக 39 பேர் சைவம் என்று சொல்லிவிட்டார் கள்! சர்வீசுக்குச் சென்ற எங்கள் ஆட்கள் மிரண்டு போனார்கள். அசைவக்காரர்களிடமாவது நிலைமை எடுத்துச் சொன் னால் சைவம், சாப்பிட ஒப்புக் கொள்வார்கள். ஆனால், சைவக் காரர்களிடம் எப்படி அசைவத் தைக் கொடுக்க முடியும்? உடனடியாக மற்ற பகுதிக்குச் செல்ல வேண்டிய கோட்டா விலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து, அங்கே அனுப்பி வைத்துச் சமாளித்தோம்'' என்கிறார் பார்க் ஷெராட்ட னின் பொது மேலாளர் அவினாஷ்.

- எஸ்.சந்திரமௌலி

# கடவுளின் அருகாமை!

தலைப்பே இல்லாத கதைகள் எழுதத் துணிச்சல் வேண்டும் - அமிர்தம் சூர்யாவிடம் அது நிறையவே இருக்கிறது! 'கடவுளைக் கண்டுபிடிப்பவன்' என்று தொகுப்புக்கு பெயர் இட்டவர், கதைகளுக்கு எண்கள் தந்துள்ளார்; எண்களுக்குரிய தலைப்புகள் நூலின் இறுதியில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன! அனைத்துக் கதைகளிலும் கிருஷ்ணனே நாயகன்; எந்தக் கதையையும் படித்துவிட்டு நாம் இன்னொருவருக்குச் சுலபத்தில் சொல்லிவிட முடியாது - அவை உணரப்படவேண்டிய கதைகள்! எதை உணர வைக்கின்றன என்பதில்தான் சுவாரஸ்யமே!

மானுடத்தின் பலம், பலவீனம், தொடர் ஓட்டம், போலித்தனம், இயலாமை, வெறி, கோழைத்தனம், கம்பீரம்... என எதுவும் இவர் கதைக்குச் சரடாகின்றன. அதில் கோக்கும் சம்பவ மணிகள் அல்லது உணர்ச்சி முத்துக்கள் பட்டை தீட்டப்படாதவை, நாசூக்கின் ஒப்பனையால் போர்த்தப்படாதவை - அப்படியே அணியும் துணிவு உள்ளவர்கள் அள்ளிக்கொள்வார்கள்; மற்றவர்கள் சற்றுத் திணறவே செய்வர்! படிமப்பாறைகளுக்கிடையே கசிந்து ஓடும் கதைசொல்லும் பாணி, வேப்பம்பூ ரசம் போல, சுண்டைக்காய் கறி போல பழகு சுவை.




பதினான்கு கதைகளில் நான்கைந்து கதாபாத்திரங்களாவது மனத்தில் நிற்கிறார் போல் அமையாதது பெருங்குறை. கதை மாந்தர்கள் கதாசிரியரின் படைப்பு 'வேகத்துக்கும்' பரிசோதனைத் தாகத்துக்கும் கருவிகளாகவே தங்கிவிடுவதால் நூலைப் படித்து முடித்த பிறகு ஏற்படும் பிரமிப்பில் அவர்கள் இடம் பெறுவதில்லை; விரிக்க விரிக்க விளங்காத வாழ்க்கைப் புதிர்விவரணையில், அவர்கள் காணாமல் போய்விடுகிறார்கள்! பரிமாணங்கள் உள்ள கிருஷ்ணனும் ஆயாவும் (கதை 3, 4) கூட கதாசிரியரால் புதிராக்கப் படுகிறார்கள். கிருஷ்ணன், கதாசிரியராலேயே கொலை செய்யப்படுகிறான். ஆயா வயசுக்கு மீறி வாழ்ந்தாலும், 'ஆயாவை சிறுகதையாக்குவது எப்படி?' என்கிற தலைப்புக்குள் நசுக்கப்படுவது நம்மைத் திணற வைக்கிறது!



அமிர்தம் சூர்யா

'கவிதா மனோபாவத்துள்ளும் தர்க்க விமர்சன மனோபாவத்துள்ளும் நுழைய மறுத்து' வெளி நிற்பதாக தமது 'வெள்ளை அறிக்கையில்' (அதாங்க ஆசிரியர் முன்னுரை) சொல்கிறார் அமிர்தம் சூர்யா. அந்தப் பிடிவாதமேகூட சிறைதானே?! அவரையும் மீறி மென்மையும் மேன்மையும் சமூக அக்கறையும் அழகுணர்ச்சியும் வெளிப்படும் இடங்கள் இந்நூலில் நிறையவே உண்டு - அவையே நம்மை கடவுளுக்கு வெகு அருகில் அழைத்துச் செல்பவை.

**கடவுளைக் கண்டுபிடிப்பவன்.**
**அமிர்தம் சூர்யா**
வெளியீடு: அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை 600 011. விலை: ரூ: 70/-

**சீதா ரவி**

# ஒரு விபத்து; சில நிகழ்வுகள்!



மறக்கவே முடியாதபடி, மனத்தில் ஆழப் பதிந்துபோனது இந்த வருஷ 'ஹோலிப் பண்டிகை'. கொண்டாட்டங்களும் மகிழ்ச்சி ஆரவாரங்களும் ஒரு பக்கம் உற்சாகமாக அரங்கேறிக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் பால்ராஜும், நரேந்திரனும் மறுநாள் போட வேண்டிய சிலாப் கான்கிரீட்டுக்கான ஆயத்தப் பணிகளில் மும்முரமாய் இருந்தார்கள். அப்போது, திடீரென்று வேலை ஆட்களின் கூடாரங்களிலிருந்து அழுகையும் கூச்சலுமாய் சத்தம் கேட்கத் தொடங்கவும், ஏதோ விபரீதம் என்று புரிந்து இருவரும் கூடாரம் நோக்கி ஓடினார்கள்.

வேலையாட்களின் உபயோகத்திற்காகக் கட்டப்பட்டிருந்த தண்ணீர்த் தொட்டியின் இரண்டு சுவர்கள் அப்படியே சரிந்து, அப்போது குளித்துக் கொண்டும் தண்ணீர் பிடித்துக் கொண்டுமிருந்தவர்களின் மீது விழுந்தது. சுவரின் அடியில் மாட்டிக் கொண்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

சூழல் முழுக்க பதற்றமும் அழுகையும் அவசர ஓட்டங்களுமாய் இருந்தது. தைரியமான சிலர், இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டிருந்தவர்களை வெளியில் இழுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

''பத்துப் பேருக்கு மேல செத்துட்டாங்க போலிருக்கு...''

''அதெல்லாம் சும்மா! உயிர்ச் சேதமெல்லாம் ஒண்ணுமில்ல; கொஞ்சம் பேருக்கு அடிபட்டுருக்கு அவ்வளவுதான்...'' பலரும் பலவிதமாய்க் கூடிக் கூடிப் பேசினார்கள்.

அரசு அலுவலர்களுக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணி அது. ஹைதராபாத் கம்பெனிக்கு டெண்டர் கிடைத்து, அப்போதுதான் வேலைகள் தொடங்கியிருந்தன. பெரும்பாலான கட்டடத் தொழிலாளர்கள் ஹைதராபாத்திலிருந்தே வரவழைக்கப்பட்டு, அவர்



களும் வேலைத்தளத்திலேயே கூடாரங்கள் அமைத்துத் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். செய்தி கேள்விப்பட்டதும், கம்பெனியின் முக்கியப் பொறுப்பிலிருந்தவர்கள் எல்லோரும் அடித்துப் பிடித்துக் கொண்டு சம்பவ இடத்துக்கு ஓடி வந்தார்கள்.

''ஏதாவது வண்டி ஏற்பாடு பண்ணுங்க; அடிபட்டவங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாம்...'' யாரோ ஒருத்தர் சத்தம் போடவும், சிலர் ரோட்டை வழி மறித்து அப்போது அந்த வழியாய்ப் போன சரக்குகள் ஏற்றும் மினிவேனில் மொத்தம் பதினெட்டு உடல்களை வரிசையாகப் படுக்க வைத்தார்கள். வேனின் டிரைவர் முனகிக் கொண்டிருந்தான். ''இதென்ன அக்கிரமம்... எங்க ஓனருக்கு யார் பதில் சொல்றது?''

''கொஞ்சம் உதவி பண்ணுப்பா, உன் வேனுக்கு உண்டான வாடகையை செட்டில் பண்ணிடுறோம்; உன் வண்டியையும் அப்புறம் மேல நாங்களே கழுவிக் கொடுத்துடுறோம்...'' என்று அவனைச் சமாதானப் படுத்தினார் திவாகர் ராவ் - கம்பெனியின்

**சோ.சுப்புராஜ்**

அட்மினிஸ்ட்ரேஷன் மேனேஜர். அப்புறம் அவனிடம், ''இது விபத்துக் கேஸா இருக்குறதால, பிரைவேட் ஆஸ்பத்திரியில எடுத்துக்க மாட்டாங்க... அதால நேரா ஜி.ஹெச்.சுக்கே கொண்டு போயிரு...'' என்றார்.

போலீஸ் வந்து கூட்டத்தைக் கலைத்தது. தீயணைப்புப் படையினர் வந்து, விழுந்து கிடந்த சுவர்களுக்கடியில் இன்னும் வேறு யாரேனும் மீட்கப்படாமல் மாட்டிக்கொண்டிருக்கிறார்களா என்று பரிசோதித்தார்கள். ''தண்ணித் தொட்டி கட்டியிருக்கிற இலட்சணத்தப் பாருங்க; அஸ்திவாரமே தோண்டாம, தரைக்கு மேல அப்படியே ஏனோதானோன்னு கட்டியிருக்குறாங்க...''

''கவர்மெண்ட் என்ஜினியர்கள் எல்லாம் என்னத்தைப் ....... தெரியல..''

மருத்துவமனை வட்டாரத்திலிருந்து சேதாரங்கள் பற்றிய செய்தி கசியத் தொடங்கியது. ஒரு பதினைந்து வயதுப் பெண், ஐம்பது வயது மூதாட்டி, ஆறு மற்றும் எட்டு வயதில் இரண்டு சிறுவர்கள் இறந்து போயிருந்தார்கள். ஐந்து பேர் கவலைக்கிடம். மற்றவர்கள் அபாயக் கட்டத்தைத் தாண்டி விட்டிருந்தார்கள்.

''இந்த வேலைக்கு இன்சார்ஜ் யாருங்க?'' மிடுக்காய் இருந்த இன்ஸ்பெக்டர் லோகநாதன் கேட்டார். நாற்பது வயதிலேயே அறுபது வயதுக்குரிய தளர்வுடனிருந்த நரேந்திரன், ''நான்தாங்க...'' என்றபடி இன்ஸ்பெக்டரின் அருகில் போனார். கலக்கம் அவரின் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

''வாங்க ஸ்டேஷனுக்குப் போயிட்டு வந்துடலாம்...'' தோளில் கை போட்டபடி இன்ஸ்பெக்டர் மிக மரியாதையாகவே அழைத்துப் போனார். ''பயப்படாதீங்க; எதிர்பாராம நடந்த விபத்துக்கு நீங்க என்ன பண்ணுவீங்க? வில்லங்கமில்லாம எப்படி ஸ்டேட்மெண்ட் கொடுக்குறதுன்னும் நானே சொல்லித் தர்றேன்...'' சொன்ன இன்ஸ்பெக்டரின் கண்களுக்குள் கரன்சிகள் படபடத்தன.

ரீஜினல் டைரக்டர் சேதுராமன் அவசரமாய் அவர்களுக்கு அருகில் வந்து, ''நீங்க ஸ்டேஷன்ல போயி இருங்க; நான் மினிஸ்டர்ட்டப் பேசிட்டு, நம்ம வக்கீலையும் அழைச்சுக்கிட்டு ஸ்டேஷனுக்கு வர்றேன்...'' என்றார். நரேந்திரன் பயம் தெளிந்து இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்தார்.

போலீஸைச் சமாளிப்பது பெரிய விஷயமாய் இருக்கவில்லை. மினிஸ்டரின் போன்காலும் கொஞ்சம் பணமும் போதுமானதாக இருந்தது. ஹோலிப் பண்டிகைக் கொண்டாட்டங்களில், வேலை ஆட்கள்

போதை தெளியாதவர்கள் சுடுகாட்டிலேயே விழுந்து கிடக்க மற்றவர்கள் அங்கிருந்து வெளியேறினார்கள்!


## வயிற்றுக்கு ஓய்வு

**ப**ட்டினி இருக்கப் போவதாக பாரதியார் தன் மனைவி செல்லம்மாவிடம் சொன்னபோது, ''உங்களால் முடியுமா?'' என்று அவர் கேட்டாராம். ''காந்திஜி எத்தனை தடவை உண்ணாவிரதம் இருக்கிறார். அவருக்கு என்ன ஆகிவிட்டது? செத்துப் போகவில்லையே. நான் மட்டும் செத்துப் போய் விடுவேனா?'' என்று பதில் அளித்தாராம் பாரதி. ''சரி. நானும் இன்று பட்டினி

கிடக்கிறேன்'' என்று செல்லம்மா சொன்னதும், ''ரொம்ப நல்லது செல்லம்மா. சமையல் செய்யும் வேலையும் உனக்கு இல்லை. செலவும் மிச்சம். வாரம் ஒருநாள் பட்டினி இருந்தால், மறுநாள் சாப்பாட்டில் மோசமான குழம்பும் அக்கார வடிசில் போல சுவைக்கும். ஏன்? நீ வற்றல் குழம்பில் உப்பே போடவிட்டாலும்கூட பிரமாதமாக இருக்கும்'' என்று சொன்னாராம் பாரதி. அவர் எப்போதும் வயிறு நிறையச் சாப்பிடவே மாட்டாராம்.

நாமும் வாரம் ஒருநாள் பட்டினி இருக்க முடியாவிட்டாலும், 15 நாட்களுக்கு ஒருமுறையாவது, பட்டினி இருந்தால் வயிற்றுக்கும், ஜீரண உறுப்புகளுக்கும் ஓய்வு கிடைக்கும். உடம்புக்கும் நல்லது. இதைத்தான் நம்முன்னோர் 'ஏகாதசி விரதம்' என்றார்கள்.

- ஆர். ராஜலட்சுமி,
ஹூப்ளி



குடித்து விட்டு தண்ணீர்த் தொட்டியின் மேலேறி ஆட்டம் போட்டதால்தான் சுவர் விழுந்து விட்டதென்று பதிந்து கொண்டார்கள்.

விபத்து பற்றிய செய்தியைப் பெரிது படுத்தாமலிருக்க, பத்திரிகைக்காரர்களிடம்தான் பெரிதும் போராட வேண்டியிருந்த. பெரும் தொகையும் செலவழிக்க வேண்டியிருந்தது. கடைசியில் செய்தியை இருட்டடிப்பு செய்ய முடியாதென்றும், முக்கியத்துவமில்லாமல் மூன்றாம் நான்காம் பக்கங்களில், பொடி எழுத்துக்களில், கம்பெனியின் பெயரின்றி வெளியிடவும் ஒப்புக்கொண்டு அதன்படியே வெளியிட்டார்கள்.

அடுத்த நாள், களைப்பும் தூக்கமுமாய் அலுவலக அறையில் திவாகர் ராவும் சேதுராமனும் உட்கார்ந்து, அடுத்து என்ன செய்யலாம் என்பது பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, மிக நீளமான துண்டு அணிந்திருந்த ஒருவர், தன் பின்னால் ஆறேழு பேர் புடைசூழப் புயல் போல வேகமாய் வந்தார்.

''தொழிலாளி உயிருன்னா உங்களுக்கு... சமானமாயிடுச்சா... நாலு பேர் தான் செத்துட்டாங்கன்னு ஏன் பொய்த் தகவல் தர்றீங்க? கை, கால் இழந்து, நடைப் பிணமா வாழப் போறவங்களுக்கு உங்களோட பதில் என்ன? கவர்ன்மெண்ட் தந்த சிமெண்ட்ட எல்லாம் வெளிமார்க்கெட்டுல வித்துட்டு, சாம்பலைக் கலந்து தண்ணித் தொட்டி கட்டுனதாலதான் அது சரிஞ்சிடுச்சுன்னு தெரியாதா எங்களுக்கு! இதை நான் சும்மா விடப் போறதில்ல; சாலை மறியல் பண்ணி, இந்த விஷயத்தைக் கோட்டை வரைக்கும் கொண்டு போவேன்...'' தாம்தூமென்று குதித்தார்.

அதே வேகத்தில் தன் பரிவாரங்களுடன் போய் வேலை ஆட்களைச் சந்தித்து, ''உங்களை எல்லோரும் ஏமாத்தப் பாக்குறாங்க; உங்களுக்கு நியாயம் கிடைக்கப் போராடுவேன்...'' என்றபடி நடுவீதியில் நின்றபடி மீட்டிங் போலப் பேசத் தொடங்கினார்.


''இவனெல்லாம் வெத்து வேட்டு... சும்மா ஃபிலிம் காட்டுறான். போன தடவை வார்டு எலக்ஷன்ல நின்னு டெபாஸிட் காலி; இவனுக மாதிரி ஆளுக மிரட்டலுக்கெல்லாம் பயந்து குடுக்க ஆரம்பிச்சா, கம்பெனிய வித்தாலும் குடுத்து மாளாது; அவனே குதிச்சு அடங்கி காணா

மப் போயிடுவான்; அப்படியும் போகலைன்னா, நம்ம போலீஸ் ப்ரண்டுக எதுக்கு இருக்குறாங்க! அப்புறம் இந்தப் பக்கம் தலை வச்சே படுக்க மாட்டாங்க...'' என்றார் சேதுராமன். அப்படியேதான் நடந்தது.

லேபர் ஆபீஸிலிருந்து இரண்டு பேர் வந்தார்கள். ஏகப்பட்ட கேள்விகள்! அவர்களை சேதுராமன்தான் சாமர்த்தியமாய்ப் பேசிச் சமாளித்து, அலுவலகத்தில் வந்து அவர்களைக் கவனிப்பதாய் உறுதி அளித்து அனுப்பி வைத்தார்.

**போ**ஸ்ட்மார்ட்டம் முடிந்து செத்துப் போனவர்களின் உடல்கள் ஜி.ஹெச்.சிலிருந்து வருகிற செய்தி கிடைத்ததும், சேதுராமன் பரபரப்பானார்.

**"பாடியை எக்காரணம் கொண்டும் வேலையாட்களின் கூடாரங்களுக்குக் கொண்டு போகவிடக்கூடாது!"**



''பாடிய எந்தக் காரணத்துக்காகவும் வேலை ஆட்களின் கூடாரங்களுக்கு கொண்டு வராமல், சுடுகாட்டுக்குச் கொண்டு போய் விடுங்கள். அப்புறம் வேறு பிரச்னைகள் வரலாம்...'' சேதுராமன் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டு, அவசர அவசரமாய்க் கிளம்பிப் போனார்.

இறுதிச் சடங்குகள் செய்ய சுடுகாட்டிற்கு வர, வேலையாட்கள் மறுத்தார்கள். தங்களின் பெரிய மேஸ்திரி ஹைதராபாத்திலிருந்து வந்த பின்புதான் உடல்களை அடக்கம் செய்ய அனுமதிப்போம் என்று முரண்டு பண்ணினார்கள். சுடுகாட்டிற்கு வெளியே பிணங்களை இறக்கி விட்டு, அமரர் ஊர்தி சென்றுவிட, கம்பெனி ஆட்கள் பிணங்களுக்கு காவல் இருந்தனர். திவாகர் ராவும் மற்றும் சிலரும் வேலை ஆட்களைச் சமாதானப்படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்தனர்.

''நஷ்டஈடு பத்தி வெளிப்படையா கேட்க கம்பெனி விசுவாசம் தடுக்குறதால, பெரிய மேஸ்திரி வரணும்னு ஜால்சாப்பு சொல்றாங்க...'' நரேந்திரன், திவாகர் ராவிடம் சொல்ல, அவர் சேதுராமனை அவருடைய செல்போனில் தொடர்பு கொண்டார்.

''நஷ்டஈடு பத்தி எல்லாம் நானோ நீயோ தீர்மானிக்க முடியாது. மேனேஜிங் டைரக்டர்தான் தீர்மானிக்கணும். எப்படியாவது சமாளித்துச் சுமுகமாய் பிணங்களை அடக்கம் செய்கிற வழியைப் பார்...'' என்று சிடுசிடுத்தார் சேதுராமன்.

இரவு பதினோரு மணியைத் தாண்டியும் வேலை ஆட்கள் மசிவதாய்த் தெரியவில்லை.

''இதைக்கூடச் சமாளிக்கத் துப்பில்லைன்னா நீ என்ன அட்மினிஸ்ட்ரேஷன் மானேஜர்? எம்.டி.கிட்ட நஷ்டஈடு பத்தி பேசிட்டேன். அவர் தலைக்கு பத்தாயிரமோ பதினைஞ்சாயிரமோ கம்பெனி சார்புல கொடுக்

கலாம்ங்கிறார்'' என்று கொஞ்சம் கோபம் தணிந்து சொன்னார்.

''எப்படியாச்சும் அவங்களைச் சுடுகாட் 'டுக்குக் கொண்டு போயிடுங்க. நான் அங்க வந்து அவங்ககிட்ட பேசிப் பார்க் கிறேன்'' என்று சொல்லி ஃபோனை வைத் தார்.

சேதுராமன் வந்தும், வேலை ஆட்கள் விறைத்துக்கொண்டுதான் நின்றார்கள். அப் புறம்தான் அவர் காரிலிருந்து அந்தப் பெட்டியை இறக்கினார்.

காரிலிருந்து இறங்கிய பெட்டியில் உயர்ரக மதுவகைகள் பாட்டில் பாட்டிலாய் அடுக்கப்பட்டிருந்தன.

''எல்லோருக்கும் குடுங்கப்பா. குடிச்ச மனசை ஆத்திக்கிட்டு, பெரிய மேஸ்திரிக்கு காத்திருப்போம்..'' திவாகரைப் பார்த்து கண்சிமிட்டியபடி சொன்னார் சேது ராமன்.

ஆளுக்கொரு பாட்டிலுடன் ஒதுங் கினார்கள். குடித்து முடித்து வட்டமாய் உட்கார்ந்து குழறலாய்ப் பேசினார்கள்.

''பிணம் நாத்தமெடுக்கத் தொடங்கி ருச்சு. இன்னும் எதுக்கு இதுங்களை வச்சு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கணும்; குழிக்குள்ள எறக்கி மண்ணத் தள்ளுங் கப்பா...'' என்று ஒரு கூட்டம் அபிப்ராயம் சொல்ல, இன்னொரு கூட்டம் அவனுடன் சண்டைக்குப் போனது.

''பெரிய மேஸ்திரி வரணும்; அது வரைக்கும் எந்தக் காரியமும் பண்ணக் கூடாது...''

''பெரிய மேஸ்திரி என்ன...? ஆக்ஸி டெண்ட் நடந்து ரெண்டு நாளாகுது. இன் னும் வந்த பாடில்ல; அவன் வந்து மட்டும் என்ன பண்ணப் போறான்! கம்பெனிக்கு சாதகமாத்தான் பேசப் போறான்...'' ஆளா ளுக்கு அடித்துக் கொள்ளத் தொடங் கினார்கள்.

சேதுராமன் குரூரமாய்ச் சிரித்தார். சண்டை போட்டபடியே ஒரு கூட்டம்,




''என்னங்க இது? ஹோட்டல் விலைப் பட்டியல் போர்டுல விலை யைப் போடாம, கிரிக்கெட் ஸ்கோர் போர்டு மாதிரி ஓட்டை, ஓட்டையா விட்டு, வச்சிருக்கீங்க?''

''என்ன செய்யறது? பெயிண்ட்ல எழு தினா, பெயிண்ட் காயறதுக்குள்ளே விலை ஏறிடுது! அதான், 'ஸ்கோர் போர்டு' மாதிரி அப்பப்ப விலையை மாத்திக்க வசதி செய்திருக்கேன்.''

- சம்பத் குமாரி

பிணங்களை எல்லாம் ஏற்கெனவே வெட்டி வைத்திருந்த குழிகளுக்குள் தள்ளி மண் போட்டு மூடிற்று. காரியங்கள் எல்லாம் போதையிலேயே மளமளவென்று நடந்தேறின.

''எப்படி சுலபமா முடிச்சுட்டேன் பார்த்தியா?'' தன் சாமர்த்தியத்தை தானே ரசித்தபடி திவாகரிடம் சொன்னார் சேது ராமன். திவாகர் ராவுக்குத்தான் தொழி லாளர்களின் மீது பச்சாதாபமும் கோபமும் ஏற்பட்டது. போதை தெளியாதவர்கள், கடுகாட்டிலேயே விழுந்து கிடக்க, மற்றவர்கள் அங்கிருந்து வெளியேறினார் கள்.



தண்ணீர்ப் பந்தல், மோரை வரிசையில் நின்று, பொதுமக்கள் பெற்றுக் கொள்வதை எங்கேனும் பார்த்திருக்கிறீர்களா? திருச்சி ஐயப்பன் ஆலய முகப்பின் அருகே காண லாம். அதன் நிர்வாகமே, நீர் மோர் தான தண்ணீர்ப் பந்தலை நடத்தி வருகிறது.

“இந்தப் பக்கமா போகும்போதெல்லாம், நீர்மோர் வாங்கிக் குடிக்காம நாங்க போன தில்ல. இந்த நீர்மோர் மாதிரி எங்கேயுமே நீங்க ருசிக்கக் குடிச்சிருக்க முடியாது. ஆலய நிர்வாகம் அதனை அவ்வளவு பக்குவமா தயாரிக்கறதுதான் காரணம்!” என்கிறார் ஓர் அன்பர்.


ஒவ்வோர் ஆண்டின் கோடையிலும், மார்ச் ஒண்ணாம் தேதியிலிருந்து ஜூன் மாதம் பதினைந்தாம் தேதி வரைக்கும், இந்த நீர்மோர் தானம் நடைபெற்று வருகிறது. இது வருடத்தில் நூற்றியேழு நாட்கள். 1992ல் துவங்கப்பட்ட நீர்மோர் தானம், கடந்த பதினெட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

அப்படி என்னதான் இருக்கு... திருச்சி









ஐயப்பன் கோயில் நீர்மோர்ல? இதுக்குன்னு தனியா தயிர் வாங்குறது இல்லே. தினசரி நூத்தைம்பது லிட்டர் ஆவின் பால் வாங்குறாங்க. அந்தப் பாலைக் காய்ச்சி, அவுங்களே அதைப் பக்குவமாத் தயிராக்கி வெண்ணெயை எடுத்துட்டு மோர் ஆக்குறாங்க.

சதவிகித அளவுல கறிவேப்பிலை, இஞ்சி, பச்சைக் கொத்துமல்லி, பச்சை மிளகாய் இவற்றைச் சேர்த்து அரைச்சு, மோர்ல கலந்து வேணுங்கற அளவுக்குச் சுத்தமான தண்ணீரைச் சேர்த்து நீர்மோர்

# ஐயப்பன் அருளும் மோர் தானம்!

ஆக்குறாங்க. அப்புறம் அந்தக் கலவையில பெருங்காயம் சேர்த்து கடுகு தாளிச்சா இப்ப நீர்மோர் ரெடி. இந்த நீர்மோர்ல ஐஸ் பயன்படுத்தறது இல்லை. சுத்தம் - சுகாதாரம்- உடல்நலம் மூணுக்குமே உத்தரவாதம். கோடை வெயிலில் உடல்நலத்துக்கேற்ற ஆரோக்கியமான திரவ உணவு இது!

தினசரி குறைந்தபட்சம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர், நீர்மோர் அருந்துகின்றனர். இதற்கென தினசரி ஐந்தாயிரம் ரூபாய் செலவாகிறது. எங்கிருந்து வருகிறது பணம்?

"பொதுமக்கள் தாங்களாகவே மனமுவந்து நன்கொடை தருகின்றனர். ஐயப்பன் அருளால் குறிப்பிட்ட நாட்களுக்கு முன்பாகவே, ஒவ்வொரு நாளின் நீர்மோர் தான நிர்ணயத் தொகை பூர்த்தியாகி விடுகிறது. இது, பொதுமக்கள் தங்களுக்குத் தாங்களாகவே நடத்தி வரும் நீர்மோர் தானம்!" என்கிறார்கள் திருச்சி ஐயப்பன் கோயில் நிர்வாகத்தினர்.

செய்திச் சித்திரம்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

**முதல் பரிசு - ரூ. 10,000/-**
**இரண்டாம் பரிசு - ரூ. 7,500/-**
**மூன்றாம் பரிசு - ரூ. 5,000/-**

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும். யார் வேண்டுமானாலும், எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும், எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக் குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.



# அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-2010

**விதிமுறைகள்:**

* கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
* சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.
* அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
* படைப்பாளி முப்பத்தைந்து வயதுக் குட்பட்டவராக இருந்தால், அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பள்ளியிறுதிச் சான்றிதழ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
* முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
* தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால்தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
* போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணைய தளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.
* பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
* முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
* 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-2010' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

**ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ்,**
**47-NP ஜவாஹர்லால் நேரு சாலை,**
**ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.**

* கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: ஜூன் 15.
* போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 (01.08.2010) ஆண்டு மலரில் வெளியாகும்.

*படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.*

- ஆசிரியர்

# அன்ன உபகாரம்!

ஒரு ஊரில் (ஸ்ரீமடத்தின் ஆதரவில்) அன்னதானம் செய்தது. ரொம்பப் பேர், ஏழைகள், வயிறாரச் சாப்பிட்டுவிட்டு, மனஸ் குளிர்ந்து வாழ்த்திக்கொண்டு போனார்கள். (சமையல் வகைகள்) எல்லாம் நிறையப் பண்ணியிருந்தும், மூட்டை அரிசி வடித்திருந்தும், கொஞ்சங்கூட பாக்கியில்லாமல், எல்லாம் ஜனங்கள் வயிற்றுக்குப் போச்சே என்று ரொம்ப த்ருப்தியாக இருந்தது. த்ருப்தி என்றால் என்ன? 'நாமாக்கும் பண்ணிவிட்டோம்' என்ற 'ஈகோ'தான்!

பாத்ரம், பண்டம் எல்லாம் தேய்த்து, அடுத்த ஊருக்குக் கிளம்பத் தயாராக இருந்த ஸமயம். அப்போது ஒரு பத்துப் பதினைந்து ஏழை ஜனங்கள் - ஸ்த்ரீகள், குழந்தைகள் உள்பட - லொங்கு லொங்கு என்று ஓடிவந்து, "சோறு, சோறு' என்று கேட்க ஆரம்பித்ததுகள். எட்டு, பத்து மைல் தாண்டி எங்கேயோ இருக்கிறவர்கள். அன்னதான ஸமாசாரம் அவர்கள் காதுக்கு லேட்டாகத்தான் போயிருக்கிறது. உடனே, பாவம், வெயிலில் அத்தனாம் தூரம் ஓடி வந்திருக்கிறதுகள்! இங்கேயானால் பருக்கை சாதம் இல்லை! அண்டா, குண்டான் எல்லாம் வண்டியிலே ஏற்றிக்கொண்டிருக்கிறது! அப்போது அவர்களுக்கு உண்டான ஏமாற்றத்தைச் சொல்ல முடியாது.

ஆயிரம் பேருக்குப் போட்டு ஏதோ நாம் ப்ரமாத உபகாரம் பண்ணிவிட்டோமாக்கும் என்று த்ருப்திப்பட்டது அத்தனையும் இந்தப் பத்துப் பதினைந்து பேருக்குப் பண்ணிய அபகாரத்தில் ஓடியே போய்விட்டாற்போலிருந்தது!

எதற்குச் சொல்கிறேனென்றால், நாம் ஒருத்தனுக்கு உபகாரம் பண்ணுவதே நேராக இன்னொருத்தனுக்கு அபகாரமாக ஆகாதபோதுகூட, எப்படியோ சுற்றி வளைத்துக்கொண்டு போய் யாருக்கோ கஷ்டம் கொடுத்து, அதோடு, 'உபகாரம் செய்கிறேன்' என்று அக்ஷதை போட்டுக்கொண்டு கிளம்பின நாமும் மனஸ் வருத்தப்படும்படியாகலாம் என்று காட்டுவதற்குத்தான்!

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



மெல்லினத் தொடர்கதை

# உள்ளும் புறமும்

**வண்ணநிலவன்**

ஞாயிறு மலருக்கான புரூஃப்கள் கிருஷ்ணபாரதியின் மேஜை மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவன் தலைக்கு மேலிருந்த ஸ்பிலிட் ஏ.ஸி. மிஷினிலிருந்து இலேசான சப்தம் வந்து கொண்டிருந்தது. அசிரத்தையோடு புரூஃப் பேப்பர்களைப் புரட்டிப் பார்த்தான். மாலைக்குள் அவற்றை ரெடி பண்ணிக் கொடுத்தால்தான், நாளைக்கு பேஜ் ரெடி பண்ணத் தோதாக இருக்கும். ஆனால், மனோகரி பேசியது ஞாபகம் வந்து கொண்டேயிருந்தது. வேலையில் ஈடுபட முடியவில்லை.

காலையில் மனோகரி திடீரென்று வந்து கத்தியது, இப்போது ஃபோனில் பேசியது எல்லாம் அடுக்கடுக்காக ஞாபகத்துக்கு வந்தன. காலையில் ஏன் சம்பந்தமே இல்லாமல் அப்படிக் கத்தினாள்? ஹிஸ்டீரியா வந்தவள் போல் நடந்து கொண்டாளே. இத்தனை வருஷமாகக் குடும்பம் நடத்தி, இரண்டு பிள்ளைகளும் பெற்ற பிறகு, ஏன் சுசீலா விஷயத்தில் தேவையில்லாமல் அவனைச் சந்தேகப்பட வேண்டும்? சுசீலாவுடன் நட்பாக இருப்பதை வேறுவிதமாக மனோகரியால் ஏன் பார்க்க முடியவில்லை? அவனுக்கு மனோகரி மீது ஆத்திரமோ, எரிச்சலோ வரவில்லை. இதிலிருந்து அவளை எப்படி மீட்பது என்பது புரியவில்லை. சுசீலாவை வீட்டுக்கோ அல்லது தன்னைப் பார்க்க ஆபீஸுக்கோ வரவேண்டாம் என்று சொல்லி விடலாமா என்று யோசித்தான்.



சுசீலா துடுக்குத்தனமும், கர்வமும் கொண்டவள். பத்திரிகைகளில் அவள் எழுதுவது கூட நாலு பேர் தன்னைக் கவனித்துப் பார்க்கிறார்கள் என்பதற்காகத்தான். ஆனால், இந்த உண்மையை தனது வாய்ச் சாமர்த்தியத்தால் வெளியே தெரியாதவாறு மறைத்து விடுவாள். கலை, இலக்கியம், பெண்ணுரிமை என்று தனது புகழ் ஆசைக்கு மற்ற எழுத்தாளர்கள், கவிஞர்களைப் போல, அவளும் ஆயிரம் லட்சியங்களை அடுக்குவாள். ஆனால், அவளுடைய வீடும் அவன் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது. அவளுடைய அப்பாவும், அவன் தகப்பனாரும் நண்பர்கள். இந்த உரிமையில்தான் அவள் அடிக்கடி வீட்டுக்கு வருகிறாள். அவளுடைய முகத்துக்கு எதிரே, எப்படி என்னைப் பார்க்க வராதே என்று கூறுவது? ஆனால், மனோகரிக்காக இப்படிச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றியது. எதிரே கேபின் ஃப்ரேமில் தொங்கிக் கொண்டிருந்த தினசரிக் காலண்டரையே பார்த்துக் கொண்டிருந்தான். பார்த்தா உள்ளே வந்தான். எதிரே உட்கார்ந்தான்.

''என்னம்மா டல்லா இருக்கே...'' என்று கேட்டான்.

''அதெல்லாம் ஒண்ணு

மில்லேடா...'' என்றான் கிருஷ்ணபாரதி.

''வாய்தான் ஒண்ணு மில்லேங்குது.. மொகத்தைப் பார்த்தா அப்பிடித் தெரியலி யேம்மா... என்னடா விஷயம்? எடிட்டர் ஏதாவது சொன் னாரா?''

''சே... சே... அவரை இன் னைக்கி நான் பார்க்கவே இல்லியே. வீட்டிலே ஒரு பிரச்னை.'' ஆபீஸில் பார்த்தா அவனுடைய நெருங்கிய நண்பன். ஸ்போர்ட்ஸ் செக் ஷன் இன்சார்ஜ். எந்த விஷயத் தையும் ஒரு புதுக் கோணத்தி லிருந்து அணுகுவான். எதைப் பற்றியும் பெரிதாக அலட்டிக் கொள்ளக்கூடாது என்று நினைப்பவன். அவனுக் கும் சுசீலாவைத் தெரியும்.

''அதான் உன் மூஞ்சி சொல்லுதேடா... என்ன வீட்டிலே மனோ கூட ஏதாவது தகராறா? இல்லே, அப்பாகிட்டே ஏதா வது ப்ராப்ளமா?''

''மனோதான்''

''என்ன சொல்றா?''

அதைச் சொல்வதற்கே கூச்சமாக இருந்தது. அவமானத்தால் மனம் குறுகியது. தலை யைக் குனிந்துகொண்டு இருந்தான்.

''என்னடா புதுப் பொண்ணு மாதிரி தலையைக் கவிந்துக் கிட்டு இருக்கே...?''

''சுசீலாவைத் தெரியுமில் லியா?''



''இந்த அலட்டல் கேஸ்தானா?''

''அவளை நெனைச்சாலே மனோகரி கோபப்படறா...''

''அது கொஞ்சம் சவடாலாப் பேசும். மத்தபடி ஹார்ம்லெஸ் தானே? உன் ஏரியாவிலேதானே இருக்கிறா?''

''ஆமா... சமயங்கள்லே வீட்டுக்கு வந்து பேசிக்கிட்டு இருப்பா... அது மனோகரிக்குப் பிடிக்கலை.''

''எல்லாப் பொம்பளைங்களுக்கும் உள்ள பொஸஸிவ்னஸ்தானே? மனோகரியும் ஆவரேஜ் பொம்மனாட்டிதானடா?''

''இன்னைக்குக் காலையிலே நான் பேப்பர் படிச்சுட்டு இருந்தப்போ, சுசிலா பேரைச் சொல்லிக் கத்திட்டு பேப்பரைப் பிடுங்கி வீசிட்டா... ஒரே கத்தல். பிள்ளைகளை வேறு சத்தம் போட்டா...''

''சுசிலா வந்திருந்தாளா?''

''இல்லே... திடீர்னு அவ பேரைச் சொல்லிட்டு வந்து கத்தினாள். எனக்கும் சுசிலாவுக்கும் நடுவுலே ஏதோ இருக்குன்னு அவளுக்குச் சந்தேகம்...''

''சரி... அவளைக் கட் பண்ணிடு. அவ்வளவு தானே?''

''எப்படிக் கட் பண்றது?''

''போடா முட்டாள்... இது ஒரு பெரிய சமாச்சார மாடா? என்னைப் பார்க்க வராதேன்னு சொல்லிடு.''

''அது எப்படிடா, ஒருத்தரோட இத்தனை நாள் பழகிட்டு திடீர்னு என்னைப் பார்க்க வராதேன்னு சொல்றது? அவ என்ன நெனைப்பா?''

''அவ மனசும் வருத்தப்படக் கூடாது, உன் பொண்டாட்டி மனசும் வருத்தப்படக் கூடாதுன்னா எப்படிடா? சுசிலா வருத்தப்பட்டா உனக்கென்னடா? உனக்கு பொண்டாட்டி முக்கியமா, சுசிலா முக்கியமா? என்ன, உன் ஞாயிறு மலர் செக்ஷனுக்கு அவ கவிதை தர மாட்டா. இவ கவிதை இல்லாட்டா வேற கவிஞரோட கவிதை. கவிதை எழுதறதுக்கா ஆள் இல்லே. ஆயிரம் பேர் இருக்கான்.''

பார்த்தா கொஞ்சம் கரடு முரடாகத்தான் பேசுவான். எதைப் பற்றியும் பெரிதாகக்

''ஹீரோவும், வில்லனும் படத்தின் கடைசி ஸீன் வரை சந்தித்துக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால், போட்டி என்பது இந்த இருவர்களுக்கு இடையேதான்'' என்கிறார் 'காதலாகி' படத்தின் இயக்குநர் கே.ஆர்.விஷ்வா. 'காதலாகி' படத்தின் ஐந்து பாடல்களுக்கும் இசையமைத்திருப்பவர் ஆஸ்கார் நாயகனின் தங்கை ஏ.ஆர்.ரைஹனா!

''இந்தப் படத்தில் அறிமுகமாகும் அத்தனை பேரும் சினிமாவுக்குப் புதிது என்பதால், சென்னை கூத்துப்பட்டறையைச் சேர்ந்தவர்களைக் கொண்டு நடிப்புப் பயிற்சி கொடுத்தோம். அதுதான் இந்தப் புதுமுகங்களை நடிப்புக்குள் கவனமாகக் கையாள வைத்தது. இந்தப் படத்தின் ஹீரோ ஒரு மெஜிஷியன். அதனாலே திரைக்கதையில் சில உத்திகளைக் கையாண்டு மேஜிக் பண்ணியிருக்கிறோம்'' என்கிறார் விஷ்வா.

- கண்மணி

கவலைப்படாதவன், வேறு எப்படி இருப்பான்.

''உறவுகளைச் சட்டுனு முறிச்சிட முடியாதுடா...''

''என்னடா பெரிய புண்ணாக்கு ஒறவு? ஒருத்தியாலே உன்னோட ஃபேமிலி லைஃபே டேஞ்சராப் போற மாதிரி இருக்கு... ஒன்னோட கலாபூர்வமான, மென்மையான அணுகுமுறை எல்லாம் ஞாயிறு மலர்ப் பக்கங்களோட வெச்சுக்கோ.. இது லைஃப் ப்ராப்ளம்டா...''



பார்த்தாவுக்கு, அவன் இவ்வளவு தூரத்துக்கு யோசிப்பது வேடிக்கையாக இருந்தது. என்ன மனுஷன் இவன்? ஒன்றுமில்லாத விஷயத்தை இவ்வளவு தூரத்துக்கு இழுத்தடிக்கிறானே என்று தோன்றியது. பார்த்தா சொல்வது போல், அவ்வளவு சட்டென்று இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்று நினைத்தான் கிருஷ்ணபாரதி. பார்த்தா மேஜையிலிருந்த ப்ரூஃப் பேப்பர்களை விரலால் கிளறினான். புதிய பேப்பரின் மணம் வீசியது. அதை ஆழமாக உள்ளே இழுத்தான் கிருஷ்ணபாரதி.

''என்னடா இவ்வளவு ப்ரூஃப் இருக்கு? திருத்தலையா? உனக்கு தர்ஸ் டேதானே டெட் லைன்?''

''திருத்தணும்டா...'' என்று விட்டேற்றியாகச் சொன்னான் கிருஷ்ணபாரதி. அவனுக்குக் காபி குடிக்க வேண்டும் போலிருந்தது.

''உனக்குக் காபி வேணுமாடா?'' என்று பார்த்தாவிடம் கேட்டான்.

''கொஞ்சம் முன்னாடிதான் குடிச்சேன். சரி, இப்ப என்ன...? இன்னொரு காபியை உள்ள தள்ளினாப் போச்சு... பெல்லை அழுத்து. பாண்டுவைக் கூப்பிடு...''

கிருஷ்ணபாரதி காலிங்பெல்லை அழுத்தினான். பார்த்தாவின் முடி ஏற்கெனவே வாரப்படாமல் தாறுமாறாக இருந்தது. அதைத் தன் விரல்களை நுழைத்து நீவி விட்டுக் கொண்டான். அதில் தேய்த்திருந்த ஹேர் ஆயிலின் மணம் நாசிக்குள் புகுந்தது.

''ஏண்டா, பர்ஃபியூம் ஆயில் எல்லாம் தேய்க்கிறே... தலையை மட்டும் ஏண்டா வார மாட்டேங்கறே? முள்ளம்பன்றி மாதிரி இருக்கே...'' என்றான் கிருஷ்ணபாரதி.

''கண்ணா... நம்ம முடியே அப்படித்தான்டா... என்ன சீவினாலும் பணிய மாட்டேங்கறதுடா... வணங்காமுடி...''

பாண்டு உள்ளே வந்தான். அவனிடம் இரண்டு பேருக்கும் காபி கொண்டு வரச் சொன்னான் கிருஷ்ணபாரதி. பாண்டு காபி எடுத்து வரச் சென்றான். அவன் உடம்பிலிருந்து பிரிண்டிங் இங்க் வாசனை அடித்தது. திடீரென்று



**"ஒன்னோட கலாபூர்வமான, மென்மையான அனுகுமுறை எல்லாம் ஞாயிறு மலர்ப் பக்கங்களோட வெச்சுக்கோ... இது லைஃப் ப்ராப்ளம்டா..."**

கிருஷ்ணபாரதிக்கு பார்த்தாவைச் சீண்டிப் பார்க்கலாமென்று தோன்றியது.

"பார்த்தா... நீ சினிமா பார்த்து எவ்வளவு நாள்டா இருக்கும்...?" என்று கேட்டான்.

"அதுவா... பல மாசம் இருக்கும்டா... ஏன்?"

"கடைசியா என்ன படம்டா பார்த்தே...?"

"அந்த எழவை எல்லாம் எவன்டா ஞாபகம் வச்சிருக்கான்... இப்போ என்ன படமா எடுக்கான்? டப்பாங்குத்து டான்ஸு நாலு, நாலு அடிதடிச் சண்டை... அத்தோட படம் முடிஞ்சுது. இந்த எழவை தியேட்டருக்குப் போய் வேற பார்க்கணுமாக்கும்? நீதான் சினிமான்னா குடியிருந்து பார்ப்பியே? கடேசியா என்ன படம்டா பார்த்தே...?"

"இன்னைக்கு ஒரு பிரமாதமான படம் இருக்கு... வர்றீயா?"

"அப்படி என்ன பிரமாதமான படம்? யார் படம்? பாலுமகேந்திரா படமா...? ஒனக்கு கலைப் படங்கள்தானே பிடிக்கும்? நீ கலாரசிகனாச்சே..."

பாண்டு காபி தம்ளர்களைக் கொண்டு வந்து வைத்தான். கிருஷ்ணபாரதி தம்ளரை எடுத்து வாயருகே வைத்து உறிஞ்சினான்.

"நீ வர்றதுனா வா... சேம்பர்லே இருக்கு.. பெரிய டைரக்டரோட படம்" என்றான் கிருஷ்ணபாரதி.

"சேம்பர் படமா...? அப்போ அம்மணக்கட்டைப் படம்னு சொல்லு."

"சேம்பர்லே படம்னா ஆபாச படம்னு உனக்கு யார் சொன்னது?"

"அந்த மாதிரிப் படங்கள்தானேடா அங்கே போடுவான்."

"பெர்க்மான்னு ஒரு பெரிய டைரக்டரோட படம். அவரைக் கேள்விப்பட்டிருக்கியா...?"

"அவரைத் தெரிஞ்சுக்காட்டி என்ன நஷ்டம்டா?"

"ஒரு பத்திரிகையிலே வேலை பார்த்துக்கிட்டு ஒரு ஃபேமஸ் டைரக்டரைத் தெரியாதுங்கறீயே...? டோனி இதுவரை எத்தனை ரன் அடிச்சிருக்கான்னா டக்குன்னு சொல்றே?"

"அது நம்ம டிப்பார்ட்மெண்ட். ஒனக்கு ஸ்போர்ட்ஸைப் பத்தித் தெரியுமா? கிரிக்கெட் பாலைக் கையாலேயாவது தொட்டுப் பார்த்திருப்பியா? ஏன்னா ஒன்னோட ஃபீல்ட் வேற... அந்த மாதிரித்தான்..." பார்த்தா காப்பி தம்ளரைக் காலி செய்து விட்டுக் கீழே வைத்தான். இண்டர்காம் அழைத்தது. கிருஷ்ணபாரதி ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தான். ரிசப்ஷனிஸ்ட் உஷா பேசினாள்.

"சார், உங்களைப் பார்க்க சுசீலா வந்திருக்காங்க..." என்றாள்.

(தொடரும்)




***'கூல் கண்ணா கூல்' என்று கோடையில், நம்மைக் கூல் பண்ண எத்தனையோ ஐட்டங்கள் இருந்தாலும், கூழுக்கு நிகர் கூழ்தான். கோடையில் சாலையோரங்களில் முளைத்து விடும் கூழ் விற்கும் கடையில் ஈக்கள் போல கார்களும் மொய்ப்ப துண்டு. கோயம்பேடு 'கூழ்' நடராஜனின் கூலான கதை இது...***

"முதலில் கூழ் சாப்பிடுங்க. அப்புறம் பேசலாம்'' என்று அன்போடு ஒரு சொம்பில் கூழ் தருகிறார் நடராஜன். மாங்காய் ஊறுகாய், தக்காளிச் சட்னி, மோர் மிளகாய் வற்றல், பச்சை மிளகாய், நறுக்கிய வெங்காயம் என மெயின் ஐட்டமான கூழை விட, மேற்கண்ட சைட்டிஷ்கள் அதிகமாக இருந்தன. வாய்க்குச் சுவையாக இருந்தாலும், பச்சை மிளகாயின் காரத்தால் கண்ணில் நீர் எட்டிப் பார்த்தது.

"ஸார், முதல்ல சாப்பிடும்போது கஷ்டமாத்தான் இருக்கும். போகப் போகச் சரியாயிடும். வெயில் காலத்துல ரொம்ப நல்லது இது என்று அட்வைஸ் செய்கிறார். ஒருநாளைக்குக் கூழ் வியாபாரத்துல முந்நூற்று ஐம்பது ரூபாய் முதலீடு செய்யறோம். எழுநூறு ரூபாய் வரை வியாபாரம் ஆகும். முதலீடு போக முந்நூற்று ஐம்பது ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

எட்டு கிலோ கேழ்வரகு, ரெண்டு கிலோ கம்பு இரண்டையும் இட்லிக்கு மாவு அரைக்கிற மாதிரி அரைச்சு முதல் நாள் ராத்திரியே புளிக்க வைச்சுருவோம். இதோடு பொடிப் பொடியா இருக்கிற பச்சரிசி அல்லது நொய் அரிசி சாதத்தை மிக்ஸ் செய்து வேகவைப்போம். வேகவைச்சதுக்கப்புறம் கையில தொட்டுப் பார்ப்போம். கையில ஒட்டலைன்னா வெந்துடுச்சுன்னு அர்த்தம். ஒட்டுச்சுன்னா வேகவைக்கணும்'' என்பவர்,

காலையில் ஐந்து மணிக்கே தள்ளுவண்டியில வந்துவிடுகிறார். "வெயில் காலத்துல நல்லா வியாபாரம் ஆகும். மழைக் காலத்துல நூறு ரூபாய் வரை வியாபாரம் குறையும். எங்கிட்ட கோயம்பேடுக்கு லோடு ஏத்த வர்றவங்க, காய்கறி வியாபாரிகள், ஏன் கார்ல கூட வந்து வாங்கிச் சாப்பிடுறவங்க இருக்காங்க'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, நடுத்தர வயது மனிதர் ஒருவர் காரில் வருகிறார். நடராஜ் காருக்கே சென்று கூழை சப்ளை செய்கிறார்.

"எனக்கு சொந்த ஊர் அரக்கோணம் பக்கத்துல கிராமம். இங்க கடை போட்டு பதினைஞ்சு வருஷமாச்சு. சம்சாரம் கோவிந்தம்மாள் கூட ஒத்தாசையா இருக்காங்க. ரெண்டு பொண்ணு; ஒரு பையன். பொண்ணுங்களைக் கல்யாணம் செஞ்சு குடுத்தாச்சு. பையன் ஒரு கம்பெனியில வேலை பாக்குறான். கூழ் வியாபாரந்தான் என் குடும்பத்துக்கு இன்னைக்கு வரைக்கும் கஷ்டமில்லாமல் கஞ்சி ஊத்திக்கிட்டிருக்கு''' என்று சிரியஸாகிறார் நடராஜ்.

**- ஆர்.கே.; படம்: ஸ்ரீஹரி**

## 25.04.10 முதல்



சிலருக்கு, நெருங்கியவர்களைப் பிரிய நேரிடலாம். சுபச் செலவுகள் கூடும். ராகு, கேதுவை வழிபாடு செய்துவந்தால், நற்பலன்கள் அளிக்கும்.

### மிதுனம்:

பொன், பொருள் சேரும் அதிர்ஷ்ட வாரமிது. குடும்ப உறவுகள் சிறக்கும். பொருளாதாரம் சிறந்திருந்தாலும், சில நெருக்கடிகள் வந்து போகும். உடல்நலம் நன்றாக இருக்கும். சிலருக்குப் புதிய சொத்துகள் சேர வாய்ப்புண்டு.

### கடகம்:

தனயோகம் உண்டு. வழக்குகளில் வெற்றியுண்டு; நீண்ட தூரப் பயண வாய்ப்பு வந்து சேரும். சுபச் செலவுகளுக்கும் வாய்ப்புண்டு. மனச் சஞ்சலம் தீர குருபக வானுக்கு பரிகாரம் செய்து வரவும்.

### துலாம்:

லாபஸ்தானத்துச் சூரியன் உச்சத்தில் சஞ்சரிப்பதால், வியாபாரத்தில் நல்ல வருவாய் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க ஏற்ற தருணம். பூர்வீகச் சொத்து வரும் யோகமுண்டு. மனத்தில் நினைத்த காரியம் நடக்கும். வேலையில் உயர்வு ஏற்படும்.

### விருச்சிகம்:

வெளிநாட்டுப் பயண யோகமுண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். திருமணத் தடை விலகி, வெற்றி கிட்டும். உடல் நலத்தில் கவனம் தேவை. வீடு மாற்றம் ஏற்படும் நிலையுண்டு. ராகு/கேது வழிபாடு நன்மைகள் அளிக்கும்.

### தனுசு:

தந்தைவழி சொத்து வந்து சேரும். கடன் பிரச்னைகள் தீரும். பிரிந்து போனவர்கள் திரும்ப வந்து சேருவார்கள். உத்யோக வாய்ப்புகள் உண்டு. சுபச் செய்திகள் கூடி வரும்.




# நடக்குமென்பார்; நடக்கும்!

**மேஷம்:**

குடும்பத்தில் குதூகலம் பொங்கும். உத்யோகஸ்தர்களும், வியாபாரிகளும் நல்ல வருவாய் பெறுவர். சொத்து வாங்க சிறந்த தருணம் இது. பூர்வீகச் சொத்தும் சிலரை வந்தடையும். நற்பலன்கள் நிறையப் பொங்கும் வாரமிது!

**ரிஷபம்:**

திடீர்ப் பணவரவு அதிர்ஷ்டம் உண்டு. வீடு மற்றும் தொழில் மாற்றம் ஏற்படும். கடன் பிரச்னை குறையும்.

**சிம்மம்:**

உங்களுக்கு யானை பலம் சேர்கிறது. ராசியின் உச்சம். பணத் தேவைகள் பெருகினாலும், உங்கள் மீது மரியாதை உள்ளவர்கள் உதவுவார்கள். கடன் பிரச்னை தீரும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வியாழன் அன்று நல்ல வருவாய் கிட்டும்.

**கன்னி:**

சூரியன் 8-ல் உச்சம் பெறுவதால், ராசிதாரர்களுக்கு விபரீத ராஜ யோகத்தை அளிக்கும். எதிர்பாராத பயணம், வம்பு வழக்குகள் வந்து சேரும். உடல் நலத்தில் கவனம் தேவை. குரு/சனி வழிபாடு குறைகள் தீர்த்து நற்பலன்கள் அளிக்கும்.

**மகரம்:**

இந்த வாரம் நல்ல செய்திகள் தேடி வரும். பணக்கஷ்டம் இருக்காது. குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும். புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. வர வேண்டிய கடன்கள் வசூலாகும். புதிய முதலீடுகள் செய்ய ஏற்ற நேரமிது.

**கும்பம்:**

நல்ல பொருள் வரவு தேடி வரும். கடகாரியத் தடைகள் விலகும். திடீர் தனவரவு உண்டு. கணவன்-மனைவி உறவு மேம்படும். வேலை உயர்வு ஏற்படும். சுபச் செலவுகள் உண்டு. ஆஞ்சநேயர் வழிபாடு நற்பலனை அளிக்கும்.

**மீனம்:**

இந்த வாரம் எதிர்பாராத உதவி தேடி வரும். சொத்து வாங்கும் யோகம் வந்து சேரும். கடன் சுமை தீரும். பூர்வீகச் சொத்து வரும் வாய்ப்புண்டு. அதை விற்கவும் நேரிடும். குடும்ப நலன் கூடும். உடல்நலம் நன்றாக இருக்கும். ●

**01.05.10 வரை**




# கற்பெனப்படுவது

'களவும் கற்று மற'- ஔவையார்

**எ**ன்னருமை இளம்நண்பர்களே, அன்று சேரமாதேவி கேட்ட கேள்வி, வடநாட்டு மன்னர்கள் தலைகளில் இமய மலைக் கல்சுமைகளாக வந்து முடிந்தது போல, குஷ்பு, தமிழ்ப் பெண்களின் 'கற்பு'ப் பற்றிச் சொன்ன பதில், நீதிமன்ற விவகாரமாகி, இன்று, தமிழக முதல் அமைச்சர், குஷ்புவுக்குத் தரும் ஆதரவில் வந்து முடிந்திருக்கிறது. நீங்கள் இளை ஞர்கள் என்பதால், இந்தப் பிரச்னையை அவசியம் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலில் சொன்னதற்கு விளக்கம்.

சேரன் செங்குட்டுவன், கோவலன்-கண்ணகி வரலாற்றைக் கேட்ட பிறகு, தன் மனைவி சேரமாதேவியிடம் ஒரு கேள்வி கேட்கிறான்: 'கணவனுக்காக வாதாடித் தன் கணவன் குற்றமற்றவன் என்று பாண்டியன் அவையில் நிரூபித்த கண்ணகியின் கற்பு சிறந்ததா அல்லது, தவறு செய்துவிட்டோ மென்று உணர்ந்தவுடன் தன் உயிரை நீத்த பாண்டிய மன்னனுடன் உயிர் நீங்கிய பாண்டிய மாதேவியின் கற்பு சிறந்ததா?' என்று. என்ன முட்டாள்தனமான பட்டி மன்றக் கேள்வியென்று சேரர் அரசி நினைத் திருக்க வேண்டும். இதற்கு நேரடியாக விடை கூறாமல், அவள் 'பத்தினிப் பெண்டிர் பரசல்(போற்றுதல்) வேண்டும்' என்கிறாள். அவள் கண்ணகியின் வீரத்தைக்

கண்டு வியந்திருக்க வேண்டும். ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்குத் தரும் பாராட்டு.

எந்த அந்நியப் படையெடுப்புக்கும் (இன்றைய மொழியில் சொல்லப் போனால், தேர்தலுக்கும்) மக்களைக் கவர் கின்ற ஒரு கோஷம் வேண்டும். சேரன் செங்குட்டுவன், 'பத்தினிப் பெண்' கண்ணகிக்குச் சிலையெடுத்துக் கோயில் கட்டத் தீர்மானித்து, வடநாட்டு மன்னர்கள் கனக விசயர் மீது படையெடுத்து, அவர்களைத் தோற்கடித்து, அவர்கள் தலைகள் மீது இமயமலைக் கற்களை அடுக்கி, சேரநாடு திரும்பியவுடன் கோயில் எழுப்புகிறான்.


சேர மன்னன் எழுப்பிய விவாதத்தில், 'கற்பு' என்ற சொல்லாட்சியைக் கவனிக்க வேண்டும். 'கற்பு' என்றதும், நாம் இப்பொழுது ஆங்கிலச் சொல்லாகிய

# ...யாதெனில்?

'chastity' என்ற சொல்லின் அர்த்தத்தில்தான் பார்க்கிறோம். நிச்சயமாக, சேரன் செங்குட்டுவன் ஆண்டபோது, 'கற்பு' என்ற சொல்லை, நாம் இப்பொழுது நினைக்கும் பொருளில் வழங்கியிருக்க முடியாது. கணவன் இறந்தான் என்றதும், அது தாளாமல், உணர்ச்சிச் செறிவில், உயிரை விடும் 'அன்பு' சிறந்ததா அல்லது, பொறுமை காத்து, நீதி கேட்டு, கணவன் குற்றமற்றவன் என்று நிறுவி, மறப் பெண்ணாக உயிர் நீக்கும் 'அன்பு' சிறந்ததா என்ற அர்த்தத்தில்தான், செங்குட்டுவன் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டும். 'கற்பு' என்ற சொல் பரவலாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கு இன்னொரு சான்று, 'rape' என்ற சொல், 'கற்பழித்தல்' என்று தமிழில் வழக்கத்தில் இருந்து வருவதாகும். 'Rape' என்றால் 'பலாத்காரம்'.

'கல்' என்ற வேரினின்றும் பிறந்தன, 'கற்பு', 'கல்வி' போன்ற சொற்கள். 'கல்' என்றால் 'தோண்டுதல்' - அதாவது, 'ஆழமாகச் சிந்தித்தல்'. லத்தீன் வேர்ச் சொல்லாகிய 'cultivatus' என்பதனின்றும் பிறந்தவைதாம், 'cultivate', 'culture' போன்ற ஆங்கிலச் சொற்கள். இங்கும் வேர்ச் சொல்லின் அர்த்தம் 'தோண்டுதல்'தான். எது ஆழமாகச் சிந்திக்கப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றதோ, அதுதான் 'கற்பு'. கல்வியினால் உண்டாகும் ஞானமும் 'கற்பு'தான். ஒழுக்கத்தின் அடையாளமாகிய 'அன்பும்' 'கற்பு'தான். 'கற்பு சிறிதும் கீண்டிலன்' என்று அநுமன் சீதையைப் பற்றிக் கூறும்போது, 'அன்பை'த்தான் குறிப்பிடுகிறான்.

திருமணமாகாத ஒரு தமிழ்ப் பெண், திருமணமாகாத ஓர் ஆணுடன் பாலுறவு கொள்வதைப் பற்றி, குஷ்பு ஒரு பத்திரிகைக்குக் கூறிய பதில்தான், ஒரு பெரிய விவாதத்துக்கு உள்ளாகியிருக்



அறக்கற்பு, மறக்கற்பு என்று ஏதுமில்லை. 'கற்பு' என்றால் 'திருமணம்'.

**இந்திரா பார்த்தசாரதி**

கிறது. திருமணமாகாமலேயே, ஓர் ஆணும் பெண்ணும் பரஸ்பர இசைவுடன் பாலுறவு வைத்துக்கொள்வதில், சட்டப் பிரச்னை ஏதுமில்லை என்கிறது உச்சநீதி மன்றம். நமது முதல் அமைச்சர், சங்கத் தமிழ்ப் பண்பாடாகிய 'களவியல் ஒழுக்கத்தை'ச் சான்றாகக் காட்டியிருக்கிறார்.

இங்குதான் நெருடல். சங்க காலத்தின் ஒழுக்க விதிகளின்படி, ஓர் ஆணும் பெண்ணும், திருமணத்துக்கு முன் ஒரு குறிப்பிட்ட காலம் வரை, 'களவு' (pre-marital sex) பயிலுவதில் தவறு ஏதுமில்லை; ஆனால், அந்தக் குறிப்பிட்ட ஆணும் பெண்ணும் பிறகு, திருமணம் செய்து கொண்டாக வேண்டுமென்றுதான் கூறுகிறது.

தொல்காப்பியம் கூறுகிறது:

'இன்பமும் பொருளும் அறனும்
என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை
மருங்கின்.
காமக் கூட்டம் காணுங்காலை
மறையோர்த் தேஎத்து மன்றல்
எட்டனுள்
துறையமை நல்லியாழ்த்
துணைமையோர் இயல்பே'

திருமணமாகாத இளம் ஆண், பெண் ஆகிய இருவரிடையே, அன்பின் விளைவாக ஏற்படும் இன்பத்தின் பகுதியாகிய 'புணர்தல்' முதலாகிய ஐவகை ஒழுக்கம், 'களவு' எனப்படும். வேதத்துள் குறிப்பிடப் பட்டுள்ள எட்டுவகைத் திருமணங்களுள் ஒன்றாகிய 'கந்தர்வம்'தான், தமிழில் சொல்லப்படும் 'களவு' என்று கூறும் நச்சினார்க்கினியர், மேலும் கூறுகிறார், 'கந்தருவருக்குக் கற்பின்றி அமையவும் பெறும், ஈண்டுக் கற்பின்றை களவு அமையாது'. 'ஈண்டு' என்றால் தமிழர்தம் பண்பாட்டில் என்ற பொருள்.

இங்கு 'கற்பு' என்றால் திருமணம். 'களவி'ல் 'புணர்தல்' பழகும் ஆணும் பெண்ணும் கட்டாயமாகப் பிறகு திருமணம் செய்து கொண்டாக வேண்டும். தலைவன், தலைவி ஆகிய இருவருடைய பெற்றோர்கள், காதலர்களின் உறவை உறுதிப்படுத்த நிகழ்த்தும் சடங்கே 'கற்பு'. அல்லது 'திருமணம்'. 'கற்பியல்' என்றால், திருமணத்துக்குப் பிறகு நிகழும் இல்லற வாழ்க்கையைக் கூறுவதாகும். ஆகவே,

## திருமணத்துக்கு முன் எந்த

ஒரு குறிப்பிட்ட ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே நிகழும் 'களவு', 'கற்பில்' முடிந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இருக்கும்போது, தமிழர் பண்பாட்டில், எந்த ஆணும் எந்தப் பெண்ணும் இருவரும் உடன்பட்டு எந்த நிலையிலும் பாலுறவு வைத்துக் கொள்ளமுடியுமென்று பொத்தம் பொதுவாக 'முற்போக்கு வேடம்' தரித்துச்



சொல்வதும் தவறு. இது 'உள்ளப் புணர்ச்சி' தானே (platonic love) தவிர, பாலுறவு அல்ல என்று கூறுவதும் தவறு.

**தொல்காப்பியர் கூறுகிறார்:**

*'பொய்யும் வழுவும்*
*தோன்றிய பின்னர்*
*ஐயர் யாத்தனர் கரணம்*
*என்ப.'*



பண்ணுக்குமே 'கற்பு நிலை' சாத்தியமில்லை.

களவொழுக்கத்தில், பொய்யும், குற்றமும் ஏற்படத் தொடங்கிய பிறகு, குடும்ப மூத்தவர்கள் திருமணச் சடங்குக்குத்தான் முன்னுரிமை தந்தார்கள் என்பது இதன் கருத்து. 'பொய்' 'வழு' என்று குறிப்பிடப்படுபவை யாவை? 'பொய்யாவது செய்த ஒன்றினைச் செய்திலேன் என்றல்; வழுவாவது சொல்லுதலேயன்றி ஒழுக்கத்து இழுக்கி ஒழுகல்' என்கிறார் நச்சினார்க்கினியர். 'கரணம்' என்றால் சடங்கு.

ஆகவே 'களவு' என்பதை இக்காலத்தில் வழங்கும் 'engagement' போல் வைத்துக் கொள்ளலாம். இப்பொழுது, 'engagement' முறியலாம். அவ்வாறு முறிந்தால், சட்டப் பூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆனால், களவொழுக்கத்தில், களவுக்குப் பின், அதே ஆணும், அதே பெண்ணும் திருமணம் செய்துகொண்டாக வேண்டும். இந்தக் களவு வாழ்க்கை ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சரிவரப் புரிந்துகொள்ளத்தான்.

ஆனால், 'கற்பு' என்ற சொல்லைப் பெண்ணைச் சார்த்தியே கூறப்பட்டு, அவளுடைய பதிவிரதைத் தன்மையையும், பொறுமையையும் போற்றுவதாக அமைந்ததற்குக் காரணம், பெண்ணைக் கண்டு ஆண் அஞ்சுவதுதான். அவளை அடக்கி ஆளுவதுதான் தனக்குத் தற்காப்பு என்று நினைக்கின்றான். இந்திய ஆணின், பெண்ணைப் பற்றிய அடிமன அச்சந்தான் துர்க்கையின் உருவம். அவளுடைய சீற்றம் அடங்கிய நிலையில், உமாவாகிச் சாந்தத்தின் உறைவிடமாகத் திகழ்கிறாள். அநியாயத்தைப் பொறுக்க முடியாத சீற்றத்தில் (கணவன் இன்னொரு பெண்ணை நாடிய அநியாயம், பாண்டியன் செய்த தவறு) மதுரையை எரித்த கண்ணகி, தன் நாட்டு எல்லைக்கு வந்தாள் என்று கேட்டு, அவளுடைய சீற்றம் இன்னும் எஞ்சியிருக்குமோ என்று பயந்து, அவளைப் பத்தினித் தெய்வமாக்கி அவளுக்குக் கோயில் கட்டுகிறான் சேரன் செங்குட்டுவன். சேரமாதேவி 'இந்த வீரப் பெண் கண்ணகியைப் போற்றுவோம்' என்று சொல்லாமல், செங்குட்டுவனின் ஆண் மனத்தைப் புரிந்து கொண்ட நிலையில், 'பத்தினிப் பெண்ணைப் போற்றுவோம்' என்கிறாள். இதன் அடிப்படையிலேதான் நம்முடைய இன்றைய பட்டிமன்ற வீரர்கள், 'அறக் கற்பு', 'மறக்கற்பு' என்று சொற்சிலம்பம் ஆடுகிறார்கள்.

அறக்கற்பு, மறக்கற்பு என்று எதுவுமில்லை. 'கற்பு' என்றால், 'திருமணம்'. திருமணத்துக்கு முன் எந்தப் பெண்ணுக்குமே 'கற்பு நிலை' சாத்தியமில்லை.

**(அடுத்த வாரம்: களவு)**

''அமுல் - இந்தியாவின் சுவை'
(Amul - The Taste of India)
என்ற விளம்பர வாசகத்தைக் காப்பாற்ற, நாங்கள் தரத்திலும் சுவையிலும் ஒருபோதும் காம்பரமைஸ் செய்து கொள்வதில்லை.



● சூர்யதேவ்

ஹாங்காங்கிலிருந்து வெளிவரும் மீடியா மேகசின் என்ற பத்திரிகை, ஆசிய பசிபிக் நாடுகளில் தலைசிறந்த பால் உற்பத்தித் தயாரிப்பாக, எங்கள் அமுல் தயாரிப்புகளைத் தேர்ந்தெடுத்துள்ளது என்று பெருமிதப்படுகிறார் அமுலின் டெபுடி மேனேஜர் சூர்யாதேவ்!

''குழந்தைகள் பால் குடிக்காமல் அடம் பிடித்தால் பரவாயில்லை, எங்கள் ஐஸ் க்ரீமைக் கொடுங்கள் போதும்'' என்று வித்தியாசமாக விளம்பரப்படுத்துகிறார் இவர். ''அதாவது ஒரு குழந்தைக்கு 100 எம்.எல் பால் தேவைப்பட்டால், அதற்குப் பதிலாக எங்கள் ஒரு ஐஸ்க்ரீம் கொடுத்தால் போதும்; ஒரு ஐஸ்க்ரீம் 100 எம்.எல் வரை சுத்தமான பால் சேர்த்துள்ளோம்'' என்று விளக்கமும் தருகிறார். ''ஐஸ்க்ரீம் சாப்பிட்டால் உடம்புக்குக் கெடுதல் என்பது, எங்கள் அமுல் ஐஸ்க்ரீமுக்கு பொருந்தாது. உடலுக்குத் தேவையான நல்ல பாக்டீரியாக்கள் அடங்கிய புரோபயோடிக் பாக்டீரியா (Probiotic Bacteria) ஐஸ்க்ரீமையும் நாங்கள் தயாரிக்கிறோம்'' என்றவரிடம், இந்த சம்மர் ஸ்பெஷல் என்ன என்று கேட்டோம்.

"Nuts About You" என்ற பல்வேறுவித பருப்புகளை உள்ளடக்கிய ஐஸ்க்ரீமையும், 'மிலன்' என்ற மாறுபட்ட சுவை கொண்ட ஐஸ்க்ரீமையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.



மேலும், சாகோ-சிப்ஸ் என்ற நானூறு ரூபாய் ஐஸ்க்ரீமை, நூற்றியைம்பது ரூபாய்க்கே தருகிறோம்.

மிகச் சிறந்த மூலப் பொருட்களை மட்டுமே வைத்து, எங்கள் தயாரிப்புகளைத் தர உறுதியாக இருப்பதால், விலை சற்று அதிகம் போல் தெரியலாம். இனிப்புக்குச் சுத்தமான நெய், ஐஸ்க்ரீமுக்கு சர்க்கரையை மட்டும்தான் பயன்படுத்துகிறோம். மற்ற ஒரு சில நிறுவனங்களைப் போல, சாக்ரின் பயன்படுத்துவதில்லை'' என்று சொல்லியவர், நமக்கும் ஒரு சாகோபார் தருகிறார். சாகோபாரின் சுவையை ரசித்துச் சாப்பிடும் நம்மிடம், ''இந்தச் சுவைக்குப் பின்னால் 26 லட்சம் விவசாயிகளின் உழைப்பு இருக்கிறது. இந்த விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்த பாலில் இருந்துதான் இத்தனை சுவையான தயாரிப்புகளைத் தருகிறோம். இவர்களிடம் இருந்து ஒரு நாளைக்கு சுமார் 80 லட்சம் லிட்டர் பாலைப் பெறுகிறோம். இந்த விவசாயிகள்தான் உண்மையில் அமுல் முதலாளிகள்...'' என்று பெருமிதப்படுகிறார்.

''1940களில், குஜராத்தின் கிராமப் பகுதியிலிருந்த விவசாயிகளிடமிருந்து பால்சன் (polson) என்ற நிறுவனம் பாலைப் பெற்று மும்பைக்கும், ஆங்கிலேயர்களுக்கும் வழங்கி வந்தது. இந்தப் பாலுக்காக விவசாயிகளுக்கு, மிகக் குறைந்த அளவிலேயே கொள்முதல் விலைப் பணம் தரப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, முறையான நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்க, அமுல் நிறுவனம் கூட்டுறவு சொசைட்டி திட்டத்தின்படி 250 லிட்டர் பாலுடன் துவக்கப்பட்டது. எனவே, அமுல் தயாரிப்புகள் என்பன தின்பண்டங்கள் என்பதையும் தாண்டி, தேசிய உணர்வுடன் தொடர்புடையவை'' என்கிறார் சூர்யாதேவ்.

- ராகவ் குமார்




கலக்க வருதுப்பா

# கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

தர்மபுரி-கிருஷ்ணகிரி மாவட்டங்களின் கற்கண்டு வாசகர்களே!

## இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...



- உடனடித் தேவை?
- உங்க ஊர்ப் பெருமை?
- வாட்டம் தரும் வேதனை?
- அமைதி தரும் ஆலயங்கள்?
- பெருமைப்பட வைக்கும் தலைவர்கள்?
- மனசைச் சுத்திகரிக்கும் டூரிஸ்ட் ஸ்பாட்?
- கலை இலக்கியத்தில் உங்க மாவட்டங்களின் பங்களிப்பு?
- அடிப்படைத் தேவைகள் நிறைவேறிடுச்சா... இல்லையா?

**வாசகர்களே...**

உங்க மாவட்டங்களைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான்
கல்கி தர்மபுரி-கிருஷ்ணகிரி மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கு!




ஒகேனக்கல்

ஆமாம்! உங்கள் தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

**சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...**

கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...

- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களின்.. பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

**கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி : 22.05.2010**

**கலக்க வருதுப்பா கல்கி**
**தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்கள்**

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

# நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
# நாங்க உடனே ரோடு போடறோம்!

நேபாளி மொழியி

சிலருக்கு இருட்டு பிரியமாக இருப்பதால், 'இந்த உலகமே சூரியமண்டலம் உட்பட ஒருமுறையாவது காரிருளில் மூழ்கிக் கிடக்கவேண்டும்' என விரும்புவார்கள். இவர்களில் ஒருவர் கிழவி மகர்னி. இரவு இருள் சூழ்ந்த பிறகும் சிம்னி விளக்கை ஏற்றவில்லை.

பக்கத்து வீட்டுக்காரி பாத்திலிகாஞ்சி. நாலு தடவை வந்து பார்த்துவிட்டுப் போனாள். ஒழிந்தபோது வந்து உதவுவாள்; சமைத்ததும் சமைக்காததுமாக உண்ணக் கொடுப்பாள். தொலைவிலுள்ள கேணியிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும்போது, கிழவிக்கும் கொடுப்பாள். அன்று மாலைப்பொழுது வீடு திரும்பும் கணவன் காஞ்சி வந்து சேரவில்லை. பால்யப் பருவம் தாண்டாத மகளும், மகனும் பசியெடுத்து அழத் தொடங்கிவிட்டார்கள். மழையில் நனைந்த கந்தலாடை உலர வழியில்லை. நாலு நாளாக இடைவிடாது அடை மழை.

பாத்திலி, மகளை இடுப்பில் தூக்கிக் கொண்டு இருட்டில் கிழவியைப் பார்க்கப் போனாள். ''பாட்டியம்மா! சிம்னி விளக்கை ஏத்தலியா?'' எனக் குரல் கொடுத்தாள்.

''மகளே! விளக்கிலே எண்ணெய் இல்லை. எனக்கு இருட்டே நல்லாயிருக்கு. வாழ்விலே மண்டியிருக்கிற இருட்டை இந்த சிம்னி விளக்கு விரட்ட முடியுமா? நீ போய்ப் படு!''

பாத்திலி இரு பிள்ளைகளுக்கும் சோறு ஊட்டி விட்டுப் படுக்க வைத்தாள். 'அரிசிச் சோறு ஆக்கிவைத்தால் புருஷனுக்குப் பத்தாது. அவர் கொண்டு வருகிற மீனை நறுக்கி, வதக்கிக் கறியாக்கிப் போடணும். ஏன் இன்னும் அவர் வரக்காணோம்? காட்டாற்றிலே வெள்ளம் பொங்கியிருக்குமோ? கரைகடக்க இயலாமல் அக்கரை



ருண் சேத்திரி பிரியதர்சி

தமிழில் : சௌரி

# இருண்ட இரவுகள்



பிறமொழிக் கதை 5

யிலேயே தங்கியிருப்பாரோ?''

அடுத்த வீட்டு ரேணு அண்ணி, மூன்றாம் தடவையாக விசாரிக்க வந்தாள். அவள் கணவர் முந்தாநாள் சிலிகுடி போனவர் இன்னும் ஊர் திரும்பவில்லை. இங்கே அண்ணி தவிக்கிறாள். பிள்ளை குட்டி இல்லாததனாலே புருஷனிடம் பாச நேசம் அதிகமாம். பாத்திலிக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்த பிறகும் புருஷனிடத்திலே அன்பு-பரிவு குறைவா? மேலும், நாலு பிள்ளைகளைப் பெத்தவள், புருஷனை விட்டு பிறத்தியானோடே ஓடிப் போயிருக்கிறாள். பிள்ளைப்பேறு இல்லாதவள் கடைசி வரைக்கும் கட்டினவரோடு இசைந்து வாழ்கிறாள்..

ரேணு அண்ணி மறுபடியும் வந்தாள்.

''பாத்திலி! அடைமழையிலே வெள்ளப்பெருக்கு அதிகமாயிடிச்சாம். பக்கத்துக் கிராமம் பேன்சோய் முச்சூடும் மூழ்கிப் போச்சாம். நதியைக் கடக்க ஒரே பாலம் ராடராங் இடிஞ்சு விழுந்திடுச்சாம். என் வீட்டுக்காரரு காய்ச்சலோடே கிளம்பிப் போனார். பாவம், எங்கே சிக்கிக்கிட்டுத் தவிக்கிறாரோ? சிக்கிம் பிராந்தியத்து இந்த வடக்குப் பகுதி மகா மோசம். சனங்க குடியிருக்க லாயக்கில்லை. மலை மேலே இருக்கிற மயூல் கிராமத்திலே முப்பது வீடுங்களும் மழை தாங்காமல்

இடிஞ்சு தரைமட்டமாயிடுச்சாம். இன்னும் எத்தனை அழிவோ?...'' - கட்டில் விரிப்பை ஒதுக்கிவிட்டு ஓரமாக உட்கார்ந்தாள்.

பாத்திலி ஆறுதல் கூறினாள் -

''அண்ணி! நாம கவலைப்பட்டு என்ன ஆகப் போவுது? எல்லாம் கடவுள் விட்ட வழி. நம்ம கவலை, கங்கதோக் போயிருக்கிற அண்ணனை இங்கே கொண்டு வந்திடுமா? எல்லாம் நல்லபடியாய் நடக்க கடவுளை வேண்டிக் கொள்வோம். நாம செய்ய முடிந்தது, செய்ய வேண்டியது அதுதான்.''

''எனக்கும் தெரியுது. கவலைப்படாமல் இருக்க முடியல்லையே. நம்பிக்கையும் கெட்டதாகவே நினைக்க வைக்குது.''

''அண்ணி! பக்கத்து வீட்டு மகர்னி கிழவியை நினைத்துப் பாருங்க. போன வருஷம், இதே மாரிக்காலம்; அவங்க புருஷனும் வாலிப வயசு மகனும் வழக்கம் போல திஸ்தா நதியிலே வலை வீசி மீன் பிடிக்கப் போனாங்க. இன்னி வரைக்கும் வீடு திரும்பல்லை! இருக்காங்களா, போனாங்களா -எதுவும் தெரியல்லை. திஸ்தா நதியிலே வெள்ளம் பொங்கினால் கிழவிக்கு நப்பாசைத் துளிர்க்கும். ஆத்தங்கரையிலே நின்னுக்கிட்டு, ஆற்று வெள்ளத்தையே பார்த்துக்கிட்டிருப்பாங்க. அவங்களை இது கரை சேர்க்காதான்னு ஏங்குறாங்க. மூணு நாள் முந்தி கிழவியை வெள்ளம் இழுத்துக்கிட்டுப் போயிடிச்சு. நல்ல காலம், பக்கத்திலே இருந்தவங்க ஆத்திலே குதிச்சு கிழவியைக் காப்பாத்தி விட்டாங்க.''

ரேணு அண்ணி, புதுக் கவலையுடன் வீடு திரும்பினாள்.

பாத்திலியின் கணவன் காஞ்சி வீடு திரும்பவில்லை. இரவு பத்து மணி. பிறருக்கு ஆறுதல் - தேறுதல் கூறுவது சுலபம். தனக்கு என்று வரும்போது?

கிழவி இருமுறை வந்து, ''காஞ்சி பிள்ளையாண்டான் வந்திட்டானா? இன்னும் வரலியா? வந்திடுவான்!'' என்று சொல்லிப் போனாள்.

பாத்திலி, ஓலைப்பந்தம் பிடித்து தெரு முக்கு வரை வந்து பார்த்தாள். கும்மிருளில் ஏதும் புலப்படவில்லை. தொலைவில் சனங்களின் கூக்குரல்கள் கேட்டது. இந்த வட்டாரம் முழுவதும் வெள்ளக்காடாகி இருக்கும். திஸ்தா நதி, பிரவாக ஆர்ப்பரிப்புடன் பாய்வது கேட்கிறது. குன்றுப் பாறை மீது நின்று கொண்டு பார்த்தாள். தொலைவிலிருந்தே கணவன் குரல் கொடுப்பது வழக்கம். கவனித்தாள், இல்லை. வெள்ளம் வடிந்ததும் வந்துவிடுவார். தூறல்தான், பயமில்லை. அவர் தகிரியசாலி. எப்படியும் இரவுக்குள் வீடு வந்து சேருவார். இரவு



'நான்' படத்தின் நாயகன்...

✱ விஜய் ஆன்டனி

அவருக்கு ராசியான நேரம்.

வீடு திரும்பிய பாத்திலி, ரேணு அண்ணி பதற்றத்துடன் வருவதைப் பார்த்தாள். எதிரே நின்று படபடப்புடன், "பாத்திலி! பிள்ளைகளைத் தூக்கிக்க. முக்கியமான சாமான் செட்டுகளை மூட்டை கட்டு. எங்க கைவண்டியிலே போட்டுக் கொண்டு போகலாம். இந்த ராடராங் கிராமத்தை விட்டு நாம போயிடலாம். மண் சரிஞ்சு இந்த ஊரே நாசமாகப் போவுது. அக்கம் பக்கமெல்லாம் கிளம்பிப் போறாங்க. நாமும் போயிடலாம், புறப்படு!" என்று துரிதப்படுத்தினாள்.

பாத்திலி நிதானமாக, "இல்லை அண்ணி! எப்படியும் எம் புருஷன் இரவுக்குள்ளே இங்கே வந்திடுவார். எங்களைக் காணாமே தவிக்கப் போவார். எங்கிருந்தாலும் ஆபத்து வரத்தான் செய்யும். இங்கியே இருந்திடுறோம். மகர்னி பாட்டியும் இருக்கிறாங்க" என்றாள்.

நேரம் கடந்தது. பாத்திலிக்குப் பயம் கவ்வியது. 'மீன் பிடிப்புத் தொழில் இனி நமக்கு வேண்டாம். மண் சுமந்து, கல் உடைத்து, கலவை தூக்கி, வீட்டு வேலை, ரோட்டு வேலை என்று போக வேண்டியது தான். இந்த வீடு இடிந்து விழுந்தாலும் மரத்தடியில் ஒண்டுவேன், ஊரை விட்டுப் போக மாட்டேன். சாவும் சரிவும் எங்கிருந்தாலும் வரத்தான் செய்யும்...'

பாத்திலி அடுப்பை மூட்டி தீக்கவாலையில் உடல் பூராவும் சூடாக்கிக் கொண்டிருந்தாள். குளிரிலே வெடவெடத்து வருகிற புருஷனுக்கு மனைவி மேனி வெதவெதப்பு இதமாக இருக்கும். மனசுக்கும் தெம்பு ஊட்டும். பழைய இனிய நினைவுகள் அலைமோதின.

**வெ**ளியே டார்ச்சு லைட் வெளிச்சத்தில் சனங்கள் குடும்பத்தோடு வெளியேறுகிற சந்தடி சத்தம் கேட்டது. வயதானவர்களையும் மூட்டை முடிச்சுகளையும் கைவண்டிகளில் ஏற்றி பத்திரமான இடத்துக்குக் கொண்டு போனார்கள். ரேணு அண்ணியும் அந்தக் கூட்டத்தில் இருந்தாள்.



**'நா**க்க முக்க' புகழ் விஜய் ஆண்டனி இப்போ 'காக்க காக்க' சூர்யா ரேஞ்சுக்குக் களத்தில் குதித்திருக்கிறார். அட, அதாங்க ஹீரோவா நடிக்கப் போறார். படத்தின் நாமகரணம் 'நான்'. விஜய் ஆண்டனி ஃபிலிம் கார்ப்பரேஷனுடன் இணைந்து ஏ.வி.ஆர். டாக்கீஸ் பிரைவேட் லிட். இந்தப் படத்தைத் தயாரிக்கிறது.

"விதியின் கரத்தில் தம் வாழ்க்கையைக் கொடுத்த இளைஞர், மதியின் எழுச்சியால் வெற்றி பெறும் விஷயம்தான் கதை" என்கிறார் இயக்குநர் ஜீவா சங்கர். இவர் மறைந்த ஒளிப்பதிவாளர் கம் இயக்குநர் ஜீவாவின் சிஷ்யப் பிள்ளை! 'நான்' படத்தின் ரெண்டாவது கதாநாயகனாக செலக்ட் ஆகியிருப்பவர், 'ஆனந்த தாண்டவம்' படத்தில் மெயின் கதாநாயகனாக நடித்த சித்தார்த். இவருக்கு ஜோடி 'துறுதுறு திருதிரு' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்த ரூபா மஞ்சரி! ஹீரோ விஜய் ஆண்டனியே இந்தப் படத்துக்கு இசையமைத்ததால், குத்துப் பாட்டு கண்டிப்பா ஹிட்டாகும் என்கின்றனர்.

– கமலி

பாத்திலி அடுப்படியிலேயே படுத்துத் தூங்கிவிட்டாள். உள்ளுணர்வு தூண்ட திடுக்கிட்டு எழுந்தாள். கணவன் காஞ்சி விளக்கடியில் குந்தியிருந்தான். பெருமிதம் பொங்க, ''எப்போ வந்தீங்க? எழுப்பக் கூடாதா?'' என்றாள்.

''கொஞ்ச நேரம் முந்தி வந்தேன். ஊர் பூரா அல்லோலப்படுது. நீ தூங்குறே!''

''நான் தனியாய்த் தவிச்சுக்கிட்டு இருந்தேன். நல்லபடியாய் வந்து சேர்ந்தீங்களே, கடவுள் காப்பாத்திட்டார்.''

''சாவுக்கும் நேரம் - காலம் வரணும். நீயும் ரேணு அண்ணியோடு கிளம்பிப் போகாமே இருந்தியே, நல்ல காலம்.''

''நீங்க எப்படியும் ராவுக்குள்ளே வந்திடுவீங்கன்னு நம்பிக்கைதான்.''

'ரேணு அண்ணியை ஆத்து வெள்ளத்திலேயிருந்து காப்பாத்த முடியல்லை. ஏழெட்டுப் பேர்களைக் காப்பாத்தினேன். ஆத்தைக் கடக்கிற போது சிக்கிக்கிட்டாங்க. அதனாலேதான் இங்கே வர நேரமாயிடிச்சு... சரி, மீன் ஏதும் கிடைக்கல்லை. முள்ளங்கி கிடைச்சிது. கறியாக்கிக் கொண்டு வா! பசிக்குது. தின்னுட்டுப் படுப்போம்.''

இருவரும் சாப்பிட்டு விட்டுப் படுத்தார்கள். நடுநிசி. கட்டிலில் படுத்து ரஜாய் போர்வைக்குள் புகுந்து கொண்டதும் உடலும் உள்ளமும் கதகதத்தது.


''பாத்திலி! இனிமேலே இங்கே மீன் பிடிப்பு இயலாது. இந்த ஊரை விட்டுப் போயிடலாம். தார்ஜலிங் தாண்டி நம்ம பூர்விகக் கிராமத்துக்கே போயிடலாம். மூட்டைத் தூக்கி, ரோடு வேலை செய்து பிழைச்சுக்கலாம். மழை ஓய்ந்து, வெள்ளம் வடியட்டும்.''

பாத்திலி கணவனை இறுகத் தழுவிக் கொண்டாள்.

மறுநாள் கதிரவனோடு எழுந்த போது, காஞ்சி பாத்திலி தம்பதியர், தார்ஜலிங் எல்லைப்புறக் கிராமம் ஆலேபுங்கில் குடிபுகுந்த காட்சியை மனத்திரையில் கண்டு கொண்டிருந்தார்கள். ●



**“நான் தனியா தவிச்சுக்கிட்டு இருந்தேன். நல்லபடியா வந்து சேர்ந்தீங்களே, கடவுள் காப்பாத்திட்டாரு.”**



# பேசும் பறவை!

- கவிதைகள்
- கதைகள்
- பரிசுப் போட்டி



# நல்லதே சொல்லும் நடனம்!

# கோகுலம்

மே 2010 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

சினிமா நட்சத்திரங்களின் நடை உடை பாவனைகள் முதற்கொண்டு எல்லாவற்றையுமே பின்பற்றும் நாம், ஏன் அவர்களின் கோடை கால - அதாங்க, சம்மர் டயட் வகையறாக்களையும் அறிந்து, தெளிந்து பின்பற்றக்கூடாது? ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட் ஸ்டார்களின் செம ஸ்பெஷல் சம்மர் டயட் ப்ளான் இவைதான், பத்திரமா குறிச்சு வெச்சுக்கங்க... (சம்மர் லீவுக்கு ஹாலிவுட் பக்கம்தான் போக முடியலை. அட்லீஸ்ட் அவங்களைப் பத்தின நியூஸாவது படிக்கலாமே)




* அசின்

ஏஞ்ஜலினா ஜூலி:

ஏதையுமே சரியா ப்ளான் செய்வதில் வல்லவரான ஏஞ்ஜலினா, தம் டயட் விஷயத்திலும் அப்படித்தான். அதிக அளவு பச்சைக் காய்கறிகள், பழங்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஜூஸ் வகைகள் (சர்க்கரை இல்லாமல்) இவரது சம்மர் டயட்டில் முதல் இடம் பிடிப்பவை. எப்போதும் சாப்பிடும் உணவை அப்படியே பாதிக்குப் பாதி எனக் குறைத்து, சம்மர் காலங்களில் சாப்பிடுவது ஏஞ்ஜலினாவின் ஸ்டைல். சம்மர் காலங்களில் நான்-வெஜ் உணவுகளுக்குக் கண்டிப்பாக ஒரு பெரிய 'நோ' சொல்லி விடுவார்களாம் பல ஹாலிவுட் ஸ்டார்கள். அந்த 'நோ' போடுவதில், நம்பர் ஒன் ஏஞ்ஜலினாதானாம்.

ஷில்பா ஷெட்டி:

ஒருநாளைக்கு 2,000 கலோரி கொடுக்கும் உணவுகளைச் சாப்பிடுவது ஷில்பாவின் வழக்கம். அது சுட்டெரிக்கும் வெயில் காலமாக இருந்தாலும் சரி, ஜில் ஜில் பனிக் காலமாக இருந்தாலும் சரி. காலை உணவை, ஒரு பவுல் நிறைய சத்து மாவுக் கஞ்சியுடனும், டீயுடனும்

# ஸ்டார் டயட்




ஆரம்பிக்கும் ஷில்பா, உடற்பயிற்சிக்குப் பிறகு சாப்பிடுவது, எண்ணி எட்டே எட்டு கறுப்பு திராட்சைகள், இரண்டு பேரீச்சம் பழங்கள் மற்றும் ஒரு புரோட்டீன் ஷேக். மதியம் சரியாக 2.30 மணிக்கு லஞ்ச் டைம். அதில், ஒரே ஒரு ரொட்டி, (ஐந்துவித தானியங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது) தால் (பருப்பு), ரெண்டு ஸ்பூன் எண்ணெய் கொண்டு தயாரிக்கப்பட்ட காய்கறி, சிக்கனமான சிக்கன். இரவு 9.30 மணிக்கு இவர் உட்கொள்ளும் இரவு உணவில், கோஸ் அல்லது லெட்யூஸ் கொண்டு செய்யப்பட்ட சாலட் மற்றும் அதனுடன் சேர்க்கப்பட்ட மாதுளைப் பழங்கள், ஆப்பிள் பழத் துண்டுகள்தானாம். வெயில் காலங்களில் எக்ஸ்ட்ராவாக அதிக அளவு தண்ணீர் மட்டுமே உட்கொள்வாராம் ஷில்பா.

**அசின்:**

'வெள்ளை விஷம்' என அழைக்கப்படும் சர்க்கரையை அறவே தவிர்த்து விடுவது அசினின் வழக்கம். ஆம், சர்க்கரைக்குப் பதிலாக, அச்சு வெல்லம்தான் அவரது உணவை இனிக்க வைக்கச் சேர்க்கப்படுமாம். மசாலாப் பொருட்கள், ஃபுட் கலரிங் இவை எல்லாம் அசினுக்கு ரொம்பவே அலர்ஜி. இயற்கையான இளநீரை கோடைக்காலங்களில் பருகுவது அசினுக்கு பிடித்தமான ஒன்று. சோடா, கோலாவை பக்கம் நெருங்கவே விட மாட்டார் இவர். அவ்வளவு ஏன், சாக்லேட் பக்கம் கூடச் சாய மாட்டார். எண்ணெய், கொழுப்பு இல்லாத உணவுகள் ரசிகையான இவர், தமது சம்மர் டயட்டிலும் இயற்கை உணவுகளுக்குதான் ஸ்பெஷல் இடம்கொடுக்கிறார்.

**- நளினி சம்பத்குமார்**



# கல்யாண



கல்யாண விருந்தை கலக்கலான ஏ.சி.ஹாலில் உட்கார்ந்து ஒரு பிடி பிடிக்கும்போது, அதைத் தயாரிப்போர் படும் பாட்டை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை... ஆனால், சுவையையும், சர்வீஸையும் மட்டும் சினிமா விமர்சனத்துக்குப் போட்டியாகப் போட்டுக் கிழிக்கிறோம்... வேகாத வெயிலில் வேகவேகமாக இயங்கும் கல்யாண சமையல் காண்டிராக்டர் கிருஷ்ணன் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க...



"சமையல்னாலே அடுப்படியிலே நின்னு வேகற தொழில் தான். அதுவும் இந்த வெயில் காலத்தில், நம்மளையே சமைச்சு எடுக்கற மாதிரி உணர்வு இருக்கும். பாண்டிபஜாரில் நாயுடு ஹால் இருக்கிற இடத்தில், முப்பது வருடங்களுக்கு முன்னாடி ஹோட்டல் ஒண்ணு இருந்தது. அங்கதான் வாட்டர்பாயா வேலைக்குச் சேர்ந்தேன். கல்யாண வீடுகளில் வேலை செய்வதை விட, ஹோட்டல்களில் வேலை செய்யும்போது, சமையல்கட்டில் வெப்பத்தின் தாக்கம் குறைவாக இருக்கும். காலை மாலை டிஃபன், மதியம் சாப்பாடு என்று ஒரே மாதிரியான சுழற்சி முறை. ஒவ்வொரு வேளைக்கு இடையேயும் ஓய்வு கிடைக்கும். ஹோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையிலும், அன்றாட மாற்றங்கள் பெரிய அளவில் இருக்காது.

திருமணம் என்பது அப்படி அல்ல. உறவினர்கள், நண்பர்கள் என சென்டிமென்ட் உணர்வுகள் நிரம்பிய இடம். இங்கே அடுப்படியின் வெப்பம், வியர்வை, தற்சமயம் அடிக்கடி ஏற்படும் பவர்கட், இவைகளால் ஏற்படும் மனஉளைச்சல் போன்றவைகளை கல்யாணத்துக்கு வரும்

விருந்தினர்களிடம் காட்ட முடியாது. நமக்குள்ளாகத்தான் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்று வெப்பம் சூழ்ந்த உலகத்தை கூலாக விவரிக்கிறார்.

"சமையலில் மிகவும் கஷ்டமானது, விறகு அடுப்பில் சமைப்பதுதான். இதில் சமைக்கும்போது, வெப்பத்தின் தாக்கம் சமைப்பவரின் அடிவயிற்றில் அடிக்கும். அதே சமயம், விறகு அடுப்பில் சமைக்கும்போது கிடைக்கும் சுவை, கேஸ் அடுப்புச் சமையலில் கிடைக்காது. இன்றைக்கு நாம் அனைவரும் விரும்பிச் சாப்பிடும் வெஜிடபிள் பிரியாணி, பால் பாயசம் போன்றவைகளை சுவைக்காக இன்னமும் விறகு அடுப்பில்தான் சமைக்கிறேன்'' என்று சுவாரஸ்யம் சேர்க்கிறார் கிருஷ்ணன்.



* கிருஷ்ணன்

"சென்னையில், இப்போதெல்லாம் மே மாதத்தில், ஒரே நாளில் ஒரே மண்டபத்தில், இரண்டு மூன்று முகூர்த்தம் வைக்கிறார்கள். காலை முதலில் ஒரு கல்யாண மண்டபத்தில் சமையல் செய்து முடிப்போம். அன்றைய தினத்தின் முதல் கல்யாணச் சமையல் நன்றாக இருக்கும். அந்தக் கல்யாண மண்டபத்திலிருந்து கிளம்பி இரண்டாவது கல்யாண மண்டபத்துக்குச் செல்லும்போது, வழியில் அக்னி நட்சத்திரத்தின் தாக்கம், போக்குவரத்து நெரிசல் எல்லாம் இருக்கும். எல்லாம் சேர்ந்து இரண்டாவது கல்யாண மண்டபத்தின் சமையல், முதல் கல்யாண மண்டபத்தில் செய்த சுவையைப் போல் இருக்காது. திருமணம் செய்பவர்களும் இதைக் காரணம் காட்டி எங்களுக்குத் தர வேண்டிய கூலியைச் சற்றுக் குறைத்து விடுவார்கள். இந்தச் சூழலில் சமையல்கட்டில் ஏற்படும் வெப்பத்தை விட, எங்கள் அடிவயிற்றில் ஏற்படும் வெப்பம் அதிகமாக இருக்கும்'' என்று விசனப்படுகிறார்.

"கல்யாண மண்டபங்களில் திறந்தவெளியில் சமைத்தால், கோடைக்கால வெப்பத்தின் தாக்கம் தெரியாது. பெரும்பான்மையான கல்யாண மண்டபங்களின் சமையல்கூடத்தின் உயரம், மெயின் ஹாலின் உயரத்தை விடக் குறைவாக உள்ளது. இதனால் எங்களுக்கு பாதிப்பு மிக அதிகம். இதைச் சமாளிக்க, சிறந்த புகைபோக்கிகளைக் கல்யாண மண்டபங்களின் சமையல் கூடத்தில் நிறுவினால், எல்லாக் காலத்திலும் சமையல் செய்வது இனிமையாக இருக்கும்.

என்னதான் அடுப்படியில் வெப்பம் வாட்டினாலும், அக்னி நட்சத்திர வெயில் எரித்தாலும், கல்யாண வீட்டிற்கு வருபவர்கள் சாப்பிட்டு விட்டு "கிருஷ்ணா உன் சமையல் பிரமாதம்டா'' என்று பாராட்டும்போது, இந்தக் கோடைக் காலம் கூட மார்கழி போல் மகிழ்வு தரும், என்கிறார் கிருஷ்ணன்.

- ஆர்.குமார்

படம்: ஸ்ரீஹரி

# சமையல் சாதம்...



## இஸ்ரேல்

சரி என்று ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் அவர்தான் இஸ்ரேலின் முதல் ஜனாதிபதி ஆகியிருப்பார். மறுத்துவிட்டார். அவர்? பிரபல நோபல் விஞ்ஞானி ஆல்பர்ட் எய்ன்ஸ்டென். மறுத்ததற்கான காரணங்களை அவர் அடுக்கவில்லை. ஆனால் யூகிப்பது சுலபம்.



பிறந்த கையோடு போராட்டங்களைச் சந்தித்த நாடு இஸ்ரேல். மே 14,1948 அன்று தனது சுதந்திரத்தை உலகுக்கு அறிவித்தது இஸ்ரேல். அடுத்த நாளே, அதன் நாற்புறமும் சூழ்ந்த முஸ்லிம் நாடுகள் இஸ்ரேலின் மீது போர் தொடுத்தன. இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் உள்ளது லெபனான். வடகிழக்கில் சிரியா. கிழக்கில் ஜோர்டன். தென் மேற்கில் எகிப்து.

இஸ்ரேல், சுதந்திரம் பெற்றதற்கா இவ்வளவு எதிர்ப்பு? அல்ல, அது உருவானதற்கே அவ்வளவு எதிர்ப்பு.

எல்லா பெரிய இனத்தவர்க்கும் ஒரு நாடாவது உண்டு. ஆனால், யூதர்களுக்கு அப்படி ஏதும் இல்லை. உலகெங்கும் பரவிக் கிடந்தார்கள். பல முன்னேறிய நாடுகளில் செல்வாக்கான பதவிகளில் இருந்தார்கள். ஆனால், என்ன பிரயோஜனம்? தங்களுடையது என சொல்லிக் கொள்ள ஒரு தாய்நாடு இல்லையே.

'பாலஸ்தீனியர்கள் வசிக்கும் பகுதிதான்

# ஆதாம்





ஜி.எஸ்.எஸ்.

தங்கள தாயகம்' என்ற ஆழமான கருத்து அவர்களுக்கு இருந்தது. காரணம், பைபிள் அப்படிக் கூறியிருக்கிறது. கி.மு.1000வது ஆண்டிலேயே, டேவிட் என்ற மன்னன் இஸ்ரேலை ஆண்டான் என்றும், ஜெருசலேம் நகரைத் தலைநகராகக் கொண்டான் என்றும் 'பழைய ஏற்பாடு' (ஓல்ட் டெஸ்டமென்ட்) கூறுகிறது. யூதர்களின் புனிதத் தந்தையான ஏபிரஹாம் அங்குதான் வாழ்ந்திருக்கிறார். ரோமானிய அரசர்கள்தான் பின்னாளில், யூதர்களை அங்கிருந்து வெளியேற்றினார்கள்.

தர்க்கமெல்லாம் சரிதான். ஆனால், இதெல்லாம் நடந்து முடிந்து பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன என்பதுதான் பிரச்னை. இந்தக் காலகட்டத்தில், அரபு மன்னர்கள் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிவிட, அது முஸ்லீம்களின் நாடாக ஆகிவிட்டது.

யூதர்கள் திட்டமிட்டார்கள். பல்வேறு விதங்களில் கொத்துக் கொத்தாக பாலஸ்தீனத்தில் குடியேறத் தொடங்கினார்கள். அதைத் தங்கள் நாடு என்று உரிமை கொண்டாடினார்கள். அமெரிக்கா போன்ற பலமான நாடுகளின் ஆதரவும் இதற்கு இருந்தது.

முதலாம் உலகப்போர் முடிந்த பிறகு, பிரிட்டனிடம் ஓர் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இஸ்ரேல் பகுதியை வளர்த்து, தனி நாடாக அது இயங்கும் வகையில் தயார் செய்ய வேண்டும்.

ஐ.நா.சபை 1947-ல் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அதன்படி 'பாலஸ்தீனம்' இரண்டு பகுதிகள் ஆக்கப்படவேண்டும். ஒன்று அரபு மக்களுக்கு. இன்

# பிறந்த பூமி!








னொன்று யூதர்களுக்கு.

அண்டை நாடுகளெல்லாம் இஸ்ரேலைத் தாக்கியதற்கு இனம், மதம் போன்றவற்றைத் தவிர, வேறொரு காரணமும் இருந்தது. இஸ்ரேல் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நிலப் பகுதியை அதிகரித்துக் கொள்ள மற்றவர் நிலப்பகுதியை ஆக்ரமிக்கத் துவங்கியதும்தான்.

ஜாம்பவான் நாடுகளின் தாக்குதலை அலட்சியமாகத் தாக்குப்பிடித்தது இஸ்ரேல். முக்கியக் காரணம், அமெரிக்கா அளித்த எல்லையில்லாத ராணுவ உதவி. இதற்குள் மேற்குக் கரை, கோலான் ஹைட்ஸ், சினாய் தீபகற்பம் போன்ற பல அண்டை நாட்டுப் பகுதிகள் இஸ்ரேல் வசம் வந்திருந்தன.

தொடர்ந்தன சிக்கல்கள். அவ்வப்போது ரத்த ஆறு. பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோன்றியது. யாசர் அராபத் அதன் தலைவர் ஆனார். உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்தன. பல்வேறு பழைய வன்மங்களுக்கு வடிகால் தேடின.

காலப்போக்கில், எகிப்து மட்டும் இஸ்ரேலை அங்கீகரித்தது. இஸ்ரேலை அங்கீகரித்த முதல் முஸ்லீம் நாடு எகிப்துதான். தான் அபகரித்துக்கொண்ட சினாய் தீபகற்பத்தை எகிப்துக்கு மீண்டும் அளித்தது இஸ்ரேல்.

இஸ்ரேலிய சரித்திரத்திலேயே மிகக் குறைந்த காலத்திற்கு நடைபெற்ற யுத்தம் 1967-ல் நடைபெற்ற 'ஆறு நாள் போர்'தான். அண்டை நாடுகளோடு போரிட்ட இஸ்ரேல் வென்றது. பின்னர் சமாதானப் படலங்கள் ஓரளவு அரங்கேறின.

எனினும், தங்களையும் பாலஸ்தீனத்தையும் பிரிக்கும் ஒரு நெடுஞ்சுவரை எழுப்புவதிலும் ஈடுபட்டிருக்கிறது இஸ்ரேல்.

ஜெருஸலேம் - இதுதான் இஸ்ரேலின் தலைநகர். ஆனால் இஸ்ரேல் இப்படிச் சொல்லிக்கொண்டாலும், பல நாடுகள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே, பல நாடுகள் தங்கள் தூதரகங்களை டெல் அவிவ், ரமட்கன் போன்ற இஸ்ரேலிய நகரங்களில் கொண்டுள்ளன.

மத்தியதரைக்கடலுக்கும் சாக்கடலுக்கும் நடுவே அமைந்த ஜெருஸலேம், உலகின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்று. தவிர, பல மதங்களின் மிக முக்கிய கேந்திரமாகவும் விளங்குகிறது. இந்த நகருக்குப் பல மாபெரும் சக்திகள்

சொந்தம் கொண்டாடுகின்றன. அவரவருக்கு அவரவர் நியாயம்.

யூதர்களைப் பொருத்தவரை இங்கிருந்துதான் உலகம் துவங்கியது. இங்கேதான் உலகின் முதல் மனிதனான ஆதாம் இறைவனால் உருவாக்கப்பட்டான். இங்குள்ள 'டெம்பிள் மவுண்ட்' மீது யூதர்கள் நடப்பதையே தவிர்ப்பார்கள். அவ்வளவு புனிதம். ஜெருஸலேமில் உள்ள அழுகைச் சுவரின் (waling wall) முன்பாக நின்றுகொண்டு 'எப்படி இருந்த எங்க இனம், இப்போது இப்படி ஆனதே' என்று கதறி அழுவதும் யூதர்களின் சம்பிரதாயம்.

கிறிஸ்தவர்களும் ஜெருஸலேம் என்றால் மெய்சிலிர்ப்பார்கள். இங்குதான் ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார், புதைக்கப்பட்டார்.

முஸ்லீம்களுக்கும் ஜெருஸலேம் மிக முக்கியமானது. இங்குள்ள அல் அக்ஸா மசூதி குரானிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. மெக்கா, மெதினாவுக்குப் பிறகு, மூன்றாவது மிகப் பெரும் புனிதத்தலமாக முஸ்லீம்கள் கருதுவது ஜெருஸலேம்தான்.

ஒரு சதுர கிலோமீட்டரைவிடக் குறைவான பரப்பளவைக் கொண்ட ஜெருஸலேம் நகருக்குத்தான் இவ்வளவு மகத்துவம். வேடிக்கை என்னவென்றால், ஜெருஸலேம் இஸ்ரேலுக்கு சொந்தமானது. ஆனால் அதை நிர்வகிப்பது ஓர் இஸ்லாமியக்குழு.

(அடுத்த இதழில்...
ஆச்சர்யமூட்டும் ஐஸ் நாடு)

## 'ஐபாட்'டுக்கு தடா!

* ராணுவ சேவை கட்டாயம். ஆண்கள் மூன்று வருடம், பெண்கள் இரண்டு வருடம். * வண்டுகள் கடிக்க வந்தால் 'உப்பு, தண்ணீர்' என்று உரத்துச் சொன்னால், வண்டுகள் பயந்து ஓடிவிடும். இது இஸ்ரேலிய நம்பிக்கை. * மின்னணுப் பொருள்களின் விலை இஸ்ரேலில் மிக அதிகம். காரணம் அதிக வரிகள். * சராசரி மக்களின் ஆயுள் மிக அதிகம் (போரில் இறந்தவர்களைக் கணக்கில் சேர்க்கவில்லையோ?) * இஸ்ரேல் பாராளுமன்றத்தின் பெயர் நெஸ்ஸெட் (Knesset) * உலகின் மிகச் சிறிய நாடுகளின் பட்டியலில் 82-வது இடம். மிகக் குறைந்த மக்கள்தொகை கொண்ட நாடுகளில் 96வது இடம். * ஜெருஸலேம் நகரிலுள்ள ஒரு குகைப்பாதை மிகப் பிரபலமானது. மூன்று மதங்களின் முக்கிய பகுதிகளை இது இணைக்கிறது. * சமீபத்தில் ஐ-பாட்டுக்குத் தடை விதித்துள்ளது இஸ்ரேல். இஸ்ரேலின் தர விதிகளுக்கு இவை ஒத்துவரவில்லையாம். மேற்படித் தடையைத் தொடர்ந்து, ஐ.பாட் (iPad) வைத்திருப்பவர்களின் கணினிகளைப் பறிமுதல் செய்யத் தொடங்கியிருக்கிறது அரசு.






**ந**ம் நாட்டில் மொத்த உணவுத் தானியங்களின் உற்பத்தி 2009-இல் 23 கோடி டன்கள். அரசின் உணவுக் கார்ப்பரேஷன் (FCI - Food Corporation of India) உணவுத் தானியங்களைச் சேமித்து விநியோகித்து வருகிறது.

1997-2007 காலப் பத்தாண்டுகளில் FCI கிடங்குகளில் கெட்டுப் போன உணவுத் தானியங்கள் எவ்வளவு தெரியுமா? பதிமூன்று லட்சம் டன்கள். இதை வைத்து, ஒரு கோடி இந்தியர்களின் பசியை, ஒரு வருடத்துக்குத் தீர்த்திருக்கலாம்.

**ஐ**ந்து நட்சத்திர ஹோட்டல்களில் mulligatawny soup கொடுப்பார்கள். விலை 150லிருந்து 200 ரூபாய். புது ஐட்டமாக இருக்கிறதே என்று ஆர்டர் செய்யாதீர்கள். அது வீட்டில் அம்மா வைக்கும் சாதா மிளகு ரசம். ஒரே ஒரு வித்தியாசம். அம்மா வைத்த ரசம் டேஸ்ட்டாக இருக்கும்.

**எ**கிப்து நாட்டில் பழங்காலத்திலேயே பெரியாரின் சீடர்கள் இருந்தார்கள். ஏன் தெரியுமா? நீதிமன்றங்களில் சாட்சிகள் சத்தியப் பிரமாணம் எடுக்கும்போது, வலது கையை வெங்காயத்தின்மேல் வைத்துக்கொண்டுதான் உறுதிமொழி எடுக்க வேண்டும். வெங்காயம் நிரந்தரத் தன்மையின் சின்னம் என்பது அவர்கள் நம்பிக்கை.

**த**லைவலியா, நரம்புத் தளர்ச்சியா? உடனே குடியுங்கள் கோகோ கோலா.



# வெங்காயத்தில்

என்ன கிண்டலா? என்று முறைக்காதீர்கள். இதை நாம் சொல்லவில்லை. கோகோ கோலா கம்பெனிக்காரர்களே சொல்லியிருக்கிறார்கள்.

1886-இல் அமெரிக்க அட்லாண்டா மாநிலத்தில், டாக்டர் பெம்பர்ட்டன் (John Pemberton) கோகோ கோலா கண்டுபிடித்தார். ஆரம்ப கால விளம்பரம் கோகோ கோலாவை எப்படி வர்ணித்தது தெரியுமா?

A delicious, exhilarating, refreshing, invigorating beverage in addition to being a cure for all nervous afflictions, sick headaches, neuralgia, hysteria, melancholy.

(சுவையான, உற்சாகமூட்டும், புத்துணர்ச்சி அளிக்கும், ஊக்கம் தரும் இந்தப் பானம் நரம்புத் தொல்லைகள், நரம்பு வலி, நரம்புத் தளர்ச்சி, மனச் சோர்வு ஆகியவற்றுக்கும் மருந்து.)





# தேவ சத்தியம்!

இன்னொரு ஆச்சரியம். சர்வரோக நிவாரணியாக அறிமுகமாகி வெற்றிக் கொடி கட்டிய கோகோ கோலாவுக்கு வில்லனாக இருக்கும் பெப்ஸியின் கதை தெரியுமா? 1898-இல் அதைத் தயாரித்தவரும் டாக்டர்தான். காலெப் பிராட்ஹாம் (Caleb Bradham) தன் பானத்துக்கு பிராட்ஸ் டிரிங்க் என்று பெயர் வைத்தார். வயிற்று வலி மருந்தாக விளம்பரம் செய்தார். 1903-இல் பெப்ஸி கோலா என்று பெயர் மாறியது.

- எஸ்.எல்.வி.மூர்த்தி

## சசி தரூர்

அரசியல் களத்தில் எதிரிகளின் சாணக்கியத்தால் வீழ்ந்துபோனவர்களும் உண்டு; தங்கள் தவறான நடத்தைகளால் களப்பலியானவர்களும் உண்டு. "சர்ச்சை நாயகர்' சசிதரூர் இரண்டாவது ரகம். "ஒரு அதிபுத்திசாலி, அரசியல் சூறாவளியில் தடுமாறிச் சாய்ந்துவிட்டார்'' என்கின்றனர் அவர் நண்பர்கள்.

### ப்ளஸ்

● சீமான் வீட்டுப் பிள்ளைகளை 'வாயில் வெள்ளி ஸ்பூனோடு' பிறந்தவர்கள் என்பார்கள். பெற்றோர்கள் சந்திரன் நாயருக்கும், லில்லிக்கும், அப்படிப் பிறந்தவர்தான் சசி. பாலக்காடு மாவட்டம்; தரூர் தரவாத் குடும்பம்.

● லண்டனில் பிறப்பு; ஏற்காடு, மும்பை, கொல்கத்தா, தில்லியில் படிப்பு; இருபத்திரண்டு வயதிலேயே, சட்டம் மற்றும் ராஜீய விவகாரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் வாங்கியவர்.

● எழுத்தாளர், பத்திரிகையாளர், நாவலாசிரியர், கட்டுரையாளர், மனித உரிமை ஆர்வலர்... என்று பல காப்ஸ்யூல்களில் இவரை அடக்கலாம்.

● சசியின் முதல் கதை 'பாரத்ஜோதி'. ஃப்ரீ ப்ரஸ் (Free Press Journal) என்ற ஆங்கில நாளிதழில் வெளியாயிற்று. அப்போது அவருக்கு வயது பத்து.

● ஆங்கில தினசரிகளில் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் எழுதியிருக்கிறார். மகாபாரதத்தை அடிப்படையாக வைத்து இவர் எழுதிய 'Great Indian Novel' இதுவரை இருபத்தெட்டு பதிப்புகள் வந்திருக்கின்றன. 'யானை, புலி, செல்ஃபோன்' என்ற நாவல் பரபரப்பாக விற்பனையில் இருக்கிறது.

● ஐக்கிய நாடுகள் சபையின் பல பிரிவுகளில் வேலை பார்க்கும் வாய்ப்பைப் பெற்றவர். 2006-ல் அதன் செயலர் பதவிக்குப் போட்டியிட்டு பான்-கி-மூனிடம் தோற்றார்.



● பிரதமர் மன்மோகன் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே. நாராயணன் ஆகியோரின் ஆலோசனைப்படி 2007-ல் ஐ.நா. சபை உயர் பதவியைத் தூக்கிப் போட்டுவிட்டு, இந்தியாவில் செட்டிலானார்.

● 2009 பாராளுமன்றத் தேர்தலில், திருவனந்தபுரம் தொகுதியில், ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்றவர்.

● முதல் மனைவி திலோத்தமா; இரண்டாவது மனைவி கிறிஸ்டா கைல்ஸ் (கனடா). மூன்றாவதாக சுனந்தா புஷ்கரை



# யானை... புலி... செல்ஃபோன்!

விரும்பினார். வெளியுறவுத் துறை இணை அமைச்சராக இருக்கும்போதே, கரம்பிடிக்க நினைத்தார். வாய்ப்புக் கிட்டவில்லை.

### மைனஸ்

● ஐ.நா.சபையில் வேலை பார்க்கும் போதே தன் 'குறும்புகளை'த் துவங்கி விட்டவர். தனக்கு வேண்டிய பெண்ணை பக்கத்திலேயே ஸீட்டு போட்டுக் கொடுத்து உட்காரச் சொன்னவர்; 'வாட்ஸ் திஸ்' என்று அங்கு வேலை செய்யும் வெளிநாட்டுக்காரர்கள் முகம் சுளித்தனர்.

● அவருடைய வலைதளத்தில் சொல்லப்படும் பல கருத்துக்கள் சர்ச்சையை உருவாக்கி விடுபவை. சிக்கனம் கருதி, விமானத்தில் கட்டணம் குறைவான வகுப்பில் சோனியா உட்பட பறக்க 'ஐய்ய... அதில் யார் போவார்கள்; அது ஒரு மாட்டுக் கொட்டகை' என்று போட்டார் ஒரு போடு; பற்றிக்கொண்டது.

● 'காந்தியும் நேருவும், தங்களது தவறான வெளியுறவு கொள்கைகளால், உலக அரங்கில் இந்தியாவின் பங்களிப்பை சிறுமைப்படுத்தி விட்டார்கள்' என்று கொளுத்திப் போடப் பத்திக்கிச்சு; பத்திக்கிச்சு.

● மத்திய அமைச்சரானவுடன், வீடு ஒதுக்கப்படாததால் ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்கவே, அதுவும் பிரச்னையாகி விட்டது.

● 'காந்தி பிறந்தநாள் அன்று அலுவலகங்கள் வேலை செய்ய வேண்டும்; அதுவே நாம் அவருக்கு செய்யும் உண்மையான மரியாதை' என்றவுடன், 'இவரோடு பெஜாராப் போச்சே' என்று அலுத்துக் கொண்டனர் ஸீனியர் அமைச்சர்கள்.

● இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சவுதி அரேபியா மூலம் அமைதிப் பேச்சு வார்த்தையைத் தொடர வேண்டும் என்று சொன்னதும் வம்பாப் போச்சு.

● தம் தலையில் சர்ச்சை மேல் சர்ச்சையாக அடுக்கிக்கொண்டிருந்த சசிக்கு ஐ.பி.எல். விவகாரம் இறுதி அடி. சிந்தனைத் தளத்திலும் மேற்கத்திய கோணத்து நடையுடை பாவனைகளிலும் பூத்த சர்ச்சைகளை விஞ்சி வெடித்துள்ளது சராசரி இந்திய பிராண்ட் ஊழல் ஊற்று! (ஐ.பி.எல். விவகாரம்)

- ஸ்ரீநி



"பஸ்தானே! போனா போவுது உடுங்க!"

"யோவ்! பிரேக்க மாட்றதுக்குள்ளே அவசரப்பட்டு எடுத்துட்டுப் போய்ட் டாங்கய்யா!"

- பா.விஜயராமன், வடபாதிமங்கலம்



"என் பொண்ணு காதலிக்க ஆரம்பிச்சுட்டான்னு நினைக் கறேன்."

"எப்படிடா சொல்ற?"

"இப்ப எல்லாம் அவ 'ரீசார்ஜ்' பண்ண பணமே கேட்கிறது இல்லை."

- எஸ்.பொருநை பாலு, திருநெல்வேலி

# கஜானா, வாடகைக்குக்

"அமைச்சரே, ஆராய்ச்சிமணியை அடித்தது யார்?"

"ஒரு பிச்சைக்காரன் மன்னா, கஜானா காலி என்று கேள்விப் பட்டானாம். வாடகைக்கு விட முடியுமா? என்று கேட்கிறான் மன்னா...!"

- டி.கே.ராமமூர்த்தி, சென்னை






"கலை நிகழ்ச்சி நடக்கும்போது தலைவர் பாதியிலேயே எழுந்து போயிட்டாரே?"

"குத்தாட்டம் எல்லாம் ஏற்பாடு பண்ணலேன்னு சொல்லிட்டாங்களாம்!"

- லெ.நா.சிவகுமார்,
சென்னை



"பெண்கள் யாராவது 'சர்வாதிகாரி'களாக இருந்திருக்காங்களாடா?"

"என் சாப்பாட்டுக்கே உலை வெச்சிடுவே போல இருக்கே, பேசாம வா, வெளியே போய் பேசுவோம்!"

- வெ.சீதாராமன்,
சென்னை

# கிடைக்குமா?



"உங்க ஹோட்டல் ஸ்வீட்ஸ் எப்படி?"

"ஒண்ணை ஒண்ணு தூக்கிச் சாப்பிடும் ஸார்!"

"அதுங்க சாப்பிடறது இருக்கட்டும், நாங்க சாப்பிடற மாதிரி இருக்குமா?"

- வெ.சீதாராமன்,
சென்னை

"இது வரலாற்றை மறு பதிவாக்கம் செய்யும் முயற்சி. நாம் பிறந்து வளர்ந்த சென்னையை, ஆங்கிலேயர்கள் ஆவணப்படுத்தி வைத்தது போல, இனிவரும் தலைமுறையினருக்கு ஆவணப் படுத்த முடியுமா என்பது கேள்விக்குறியே! கடந்த கால வரலாற்றை ஆராயும் முயற்சியில் நான் சென்னைக் காதலன் ஆகிவிட்டேன்" என்கிறார் மதராசபட்டினம் படத்தில் நாற்பதுகளின் சென்னையைத் தத்ருபமாக வடிவமைத்திருக்கும் ஆர்ட் டைரக்டர் செல்வகுமார்.

"இயக்குநர் விஜய்யின் சிந்தனையில் உருவான மதராசபட்டினம் படத்தை கல்பாத்தி அகோரம் தயாரிக்க முன்வந்தார். 1945-47 சென்னையைப் பற்றிய தகவல்கள் சேகரிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தவுடன், நான் முதலில் சென்ற இடம் பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரிதான். புகைப்படம், உலகுக்கு அறிமுகம் ஆனவுடன், அதாவது




ஆர்ட் டைரக்டர் செல்வகுமார்

# நான் சென்னைக் காதலனாகிவிட்டேன்!

1865-ஆம் ஆண்டு முதல் சென்னையின் முக்கியப் பகுதிகளையும், நிகழ்வுகளையும் புகைப்படமாக ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கும் முந்தைய காலகட்டத்தை ஓவியமாக வரைந்திருக்கிறார்கள். எத்தகைய மாண்புகளையும், கலாசாரத்தையும் இந்த நகரம் கடந்து வந்திருக்கிறது என்பதற்கு பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தின் ஆவணங்களே சாட்சி'' என்று ஆச்சர்யப்படுகிறார்.

''1947-ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்திர தினத்தன்று சென்னையின் கொண்டாட்டங்களைப் பதிவுசெய்ய, அந்தக் காலகட்டத்தில் வெளியான 'கல்கி' பத்திரிகை புகைப்படக் காட்சிகள் உதவியாய் இருந்தன.



கதையின் நாயகன் ஆர்யா, சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் வசிக்கும் சலவைத் தொழிலாளி. சென்ட்ரல் ரயில் நிலையத்தையும், அந்தக் கால ரயில்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள வில்லிவாக்கத்திலுள்ள ரயில்வே மியூசியத்துக்குச் சென்றேன். அங்கே முக்கிய பொறுப்பிலுள்ள அருண் தேவராஜன் என்பவர் குழந்தைகளுக்கு அந்தக் கால நீராவி இன்ஜின்களைப் பற்றியும், மரத்திலான ரயில் பெட்டிகளைப் பற்றியும் விளக்கிக் கொண்டிருந்தார். நானும் குழந்தைகளுடன் அமர்ந்து, அந்தக் கால ரயில்களைப் பற்றித் தெரிந்துகொண்டேன். அருண் தேவராஜன் எனக்காகத் தனிப்பட்ட முறையில் சென்னையின் பல்வேறு ரயில்களைப் பற்றிய தகவல்களை அளித்தார்'' என்று தாம் ரயில் பாடம் பயின்றதையும் விவரிக்கிறார்!

''சென்னையின் பக்கிங்ஹாம் கால்வாய் ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டது. ஆந்திராவிலிருந்து மிளகாய், உப்பு போன்றவற்றைப் படகுகள் மூலம் சென்னைக்குக் கொண்டு வர பயன்பட்டது. இதை மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ளோம். இதற்கான படகு ஓவியங்களை மனோகர் தேவதாஸ் என்ற ஓவியர் வரைந்திருக்கிறார். இந்த ஓவியங்களின் அடிப்படையில் பக்கிங்ஹாம் படகு செட்டிங்ஸை வடிவமைத்தேன். சென்ட்ரலில் வைத்திருந்த மணிக்கூண்டைப் பார்க்க வாய்ப்புக் கிட்டவில்லை. இதனால் திருச்சி ரயில் நிலையத்திலுள்ள மணிக்கூண்டைப் பார்த்து அனுமானமாக வடி வமைத்திருக்கிறோம்.

பழைய சென்னை என்றாலே பலருக்கு நினைவில் வருவது டிராம்தான். இந்த டிராமை பல்வேறு புகைப்படங்களில் பார்த்

தும், பல பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டும் வடிவமைத்துள்ளோம். இப்போது 'பெரியார் திடல்' உள்ள இடத்தில் தான் டிராம் வண்டிக்கான மிகப் பெரிய ஷெட் இருந்திருக்கிறது.

இந்தியத் துறைமுகங்களில் முக்கியப் பொறுப்பிலிருந்த 'நரசய்யா' என்பவர் சென்னையின் வரலாற்றைப் பற்றி எழுதிய புத்தகம், மெட்ராஸ் பற்றிய பல்வேறு தகவல்களைத் தந்தது.


அன்றைய கவர்னர் மாளிகை இப்போது இருப்பதைப் போல ராஜ்பவனில் இருக்கவில்லை. ஓமந்தூரார் மாளிகையில் இருந்திருக்கிறது. இத்தகவலை, மூதறிஞர் ராஜாஜியிடம் உதவியாளராக இருந்த ராமசாமியிடம் கேட்டுத் தெரிந்துகொண்டோம்.

பிராட்வே, சென்ட்ரல், மெரீனா சென்னைப் பல்கலைக்கழகம் போன்ற பல பகுதிகளை கேளம்பாக்கத்தில் செட் போட்டு எடுத்தோம். ஆங்கிலேயர் காலத்துக் கார்களை பழைய ஜீப்களை வாங்கி ரீமாடல் செய்தோம்'' என்கிற செல்வகுமார், ''சாரங்கபாணி நடித்து 40-களில் வெளிவந்த 'என் மனைவி' திரைப்படத்தில் சென்னையின் பாரிமுனை, டிராம், கிராமபோன் போன்ற பல்வேறு விஷயங்கள் இடம்பெற்றிருந்தன. இந்தப் படத்தைப் பலமுறை போட்டுப் பார்த்துப் பல்வேறு தகவல்களைப் பெற்றேன். பரபரப்பு, டென்ஷன் இதுவே இன்றைய சென்னையின் முகம் என்றாகி விட்ட சூழலில், பழைய சென்னையை வடிவமைத்தது ஒரு சுகமான பயணமாக இருந்தது'' என்று கண்களில் கனவு ஓட்டுகிறார்.

-ராகவ் குமார்






ஃபன்னி
ஃப்ரூட்ஸ்!

# ஐஸ் க்ரீம் சாப்பிட்டா.

**நா**க்கைத் தழுவி, தொண்டையில் நழுவி நெஞ்சில் இனிக்கும் ஐஸ் க்ரீம் எட்டு மாதக் குழந்தை முதல் எண்பது வயதுக் குடுகுடுவரை ருசிக்கும், ரசிக்கும் உணவு.

ஐஸ்க்ரீம்களின் கதை வெனிலா, ஸ்ட்ராபெரி, சாக்லெட் இத்யாதி வகையறாக்களைவிடச் சுவையானது.

ஒன்ஸ் அப்பான் எ டைம் லாங் லாங் எகோ, ஐஸ்க்ரீம் நீங்களும் நானும் சாப்பிடறமாதிரி சாதா ஐட்டம் இல்லீங்கோ, ராஜா ராணிங்களுக்கு மட்டுமே கெடச்ச சமாசாரம்.

மூவாயிரம் வருடங்களுக்கு முன்னால் போகலாம். சீன நாட்டு மன்னரின் பிரம்மாண்ட அரண்மனை. ராஜா ரிலாக்ஸிங். பக்கத்திலே ராணி. ரெண்டு பேரும் தங்கக் கிண்ணத்திலே இருந்து குட்டி ஸ்பூனால் கொஞ்சம் கொஞ்சமா எதையோ எடுத்து முழுங்குறாங்க. கலர் கலரா இருக்குது அது என்ன? மலையிலிருந்து அடிமைகள் கொண்டு வந்த பனிக்கட்டியோடு பழங்கள், தேன், கொஞ்சூண்டு ஒயின் சேர்த்து அரண்மனையின் தலைமைச் சமையல்காரர் ஸ்பெஷலாகத் தயாரித்த ஐட்டம். இன்றைய ஐஸ்க்ரீமின் ஆரம்பம். ராஜா ராணி தவிர வேறு யாராச்சியும் டேஸ்ட் பண்ணினாங்களோ, ஆயுள் தண்டனை தானாம்!



**மன்னராட்சிக் காலத்தில் ஐஸ்க்ரீமை ராஜா ராணி மட்டுமே சாப்பிடலாம். சாமானியர்கள் சாப்பிட்டால் அதோகதிதான்!**

**மா**வீரன் அலெக்சாண்டரும் ஐஸ்கிரீம் ரசிகர்.

இப்போ கி.பி.62-க்கு வாங்க. ரோமன் சாம்ராஜ்யச் சக்கரவர்த்தி புது ஆள் இல்லே. உங்களுக்கு நல்லாத் தெரிஞ்ச ஆள். ரோம் நகரம் தீப் பிடிச்சு எரிஞ்சப்போ பிடில் வாசிச்சாரே. அதே நீரோ மன்னர். இவருக்கு 'ஐஸ்க்ரீம்'ன்னா உசிர். தயார் பண்றது அதே சீன ராஜா ஸ்டைல்; அடிமைகளை மலைக்கு அனுப்புறது. கலெக்ட் ஐஸ்கட்டி மிக்ஸ் பழம், தேன். என்ஜாய்.

மார்கோ போலோ இத்தாலி நாட்டு வணிகர். இவர் பல நாடுகளுக்கும் ஆய்வுப் பயணம் மேற்கொண்டவர். 1274ம் ஆண்டு வாக்கில் சீனாவை அடைந்தார். சீன மன்னர் குப்ளாய்கானுக்கு மார்கோ போலோவை மிகப்

# ஆயுள் தண்டனை!

பிடித்துவிட்டது. அரசவைப் பதவிகள் கொடுத்தார். பல நாடுகளுக்கும் தூதுவராக அனுப்பினார். பதினேழு ஆண்டுகள் சீனாவில் பதவிகள் அனுபவித்த மார்கோ போலோ தாய்நாடு இத்தாலி திரும்பினார்.

வரும்போது, இத்தாலிக்குக் கொண்டுவந்தது சீனாவில் சேர்த்த சொத்துகள் மட்டுமல்ல. இன்னும் இரண்டு ராஜ ரகசியங்கள். ஒன்று நூடுல்ஸ் என்கிற சீன உணவு. இரண்டாவது ஐஸ்க்ரீம் தயாரிக்கும் முறை.

மார்கோ போலோ சாதா மனிதரல்ல. கில்லாடி. சீன ஐஸ்க்ரீமை அவர் வெறுமனே காப்பி அடிக்கவில்லை. தன் ஐடியாவைச் சேர்த்தார். பனிக்கட்டிகள், பழம், தேன் ஆகியவற்றோடு எருமைப் பாலையும் கலந்தார். இப்போ, தனிச்சுவை, தூக்கலான சுவை, இன்றைய ஐஸ்க்ரீமின் சுவை.

**1533**-ல் இத்தாலிய இளவரசி கேத்தரின், பிரான்ஸ் மன்னர் இரண்டாம் ஹென்றியை மணந்தார். இதுவரை ராஜ ரகசியமாக மட்டுமே இருந்த ஐஸ்க்ரீம் தயாரிப்பு முறை பிரான்ஸின் பல சமையல்காரர்களுக்கும் பரிச்சயமாயிற்று.

1600-களில் இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லஸ் பிரான்ஸ் நாட்டுக்கு வருகை தந்தார். அரச விருந்தில் ஐஸ்க்ரீம் பரிமாறப்பட்டது. நாடு திரும்புமுன் சார்லஸ் மன்னர் மறக்காமல் செய்த வேலை, ஐஸ்க்ரீம் தயாரிக்கும் முறையைக் கற்றுக்கொண்டதுதான்.

சார்லஸ் தன் அரண்மனைச் சமையல்காரருக்கு ஐஸ்க்ரீம் தயாரிக்கும் முறையைக் கற்றுக் கொடுத்தார். ஒரு நிபந்தனை. இந்த விஷயம் பற்றி வெளி உலகத்துக்குக் கப் சிப். ரகசியம் காப்பதற்காகச் சம்பளம் தாண்டி ஒரு அமௌண்ட் தனியாக.



அந்தச் சமையல்காரர் தில்லாலங்கடி. அமௌண்ட்டை அமுக்கியவர் இங்கிலாந்து நாட்டுப் பிரபுகளுக்கும் ரகசியத்தைக் கசிய விட்டார்.

200 ஆண்டுகள் ஓடின. பதினெட்டாம் நூற்றாண்டில் ஐஸ்க்ரீம் சாதாரண மக்களுக்கும் கிடைக்கும் ஐட்டமானது.

இந்தியாவுக்கு ஐஸ்க்ரீமைக் கொண்டுவந்தது யார்? பதினாறாம் நூற்றாண்டின் மொகலாய மன்னர்கள் என்று நம்பப்படுகிறது. இவர்கள் ரசித்த ஒருவகை ஐஸ்க்ரீம், இன்றும் பிரபலமாக இருக்கும் குல்ஃபி.

வெனிலா, ஸ்ட்ராபெரி, சாக்லெட், பட்டர் ஸ்காட்ச், ட்ருட்டி ஃப்ருட்டி, ப்ளு பெரி, மாங்கோ, லிச்சி என வகை வகையான ஐஸ்க்ரீம்கள் இருந்தாலும், நம்பர் ஒன் வசூல்ராஜா வெனிலாதான். மொத்த விற்பனையில் 28 சதவிகிதம் இதுக்குனு சொல்றாங்கோ.

உலகத்தில் அதிகமாக ஐஸ்க்ரீம் சாப்பிடுவது யாரு? நியூசிலாந்து நாட்டில் வருடத்துக்கு சராசரியாக ஒரு ஆள் 22 லிட்டர் சாப்பிடுகிறார். அடுத்த ஐஸ்கிரீம் சாப்பாட்டு ராமன்கள் அமெரிக்கர்கள். வருடத்துக்கு 18 லிட்டர். இந்தியா? 120 மில்லி லிட்டர். ஆமாம், 120 மில்லி லிட்டர் மட்டுமே!

**– எஸ்.எல்.வி.மூர்த்தி**

கண்ணீரை விரும்பும் கணமொன்றைக் கடந்தேன்
கண்ணீரெனை விரும்பும் கணமொன்றைத் தவிர்க்க
கண்ணீரை அழைத்து எச்சரித்தேன் பூக்களின்
கதறலிசைப்பதாய் வேண்டாமுன் வருகையென
கண்ணீரை எழுத வருகவெனில் மறுத்தன
கண்களுக்கு முந்தைய காலத்தின் சொற்கள்
கண்ணீரை வடிகட்டிச் சேகரித்த வாழ்க்கை
கைதட்டி மகிழ்கிறது கண்ணீர் பயமற்று...

கண்ணீர், நீர்த்தக் கனவுகளின் நீர்க்குறிப்பு
கொடுந் துயரக் கொதிமீண்ட குருதிச்சாறு



# நீர்த்த கனவுகளின் நீர்க்குறிப்பு!

## பொற்கிழி 6

கண்ணீர், வேர்த்த ஆன்மாவின் புழுக்கப்பதிவு
    கடுந்துரோக சந்திப்பின் அதிர்ச்சித் தீர்த்தம்
கண்ணீர், கருணை மடியூட்டும் தாய்ப்பாலும்
    கையா லாகாதோர் செயலுமெனக் கழிவநீரும்
கண்ணீர் விழிப்பேனும் கருவியெனும் விஞ்ஞானம்
    கிடக்கட்டும் கண்ணீர்மன மியக்கக் குறியீடு...

முற்றிலும் மனசை உரித்த வேதனையை
    முகமெங்கும் ஒட்டி வைத்துக் கடந்து
சற்றும் சம்பந்த மிலாதன் வாழ்வை
    சுயமரியா திழக்கும் விழித் தண்ணீர்
கொற்றக் குடைசாய கோவில் தீப்பற்ற
    குலுங்கிச் சரியவிடும் குவலயத்தை ஓர்த்துளி
வெற்றிக் குரியபோதும் தோல்விக் குரியபோதும்
    வாஞ்சையுடன் மனசைக் கழுவித்தரும் விழியாழி....

விழியின் வழியாக விரியுமோர் வெளியை
    வழிக்காட்ட உதவுபொருள் மொழிக்கூற்று கண்ணீர்
தொழிலாகத் துயரத்தைத் துவளாமல் தந்தபடி
    துடிக்க வைக்கின்ற காலத்தின் நீர்க்கறை
அழிவை அவனிக்கு அறிவித்து துக்கத்தின்
    அடையாளக் கொடியென அசைகின்ற கண்ணக்கூத்து
பொழிவது துயரத்தின் ஈரமெனப் புரியாது
    பார்வை பேரியக்க நிலைத்தாங்கு விழித்தூறல்

தலைக்குள் நடக்கும் அடிதடியை அரவணைப்பை
    துல்லியமாய்த் தாங்கித் தொங்கும் விழிப்பதாகை
விலைக்குக் கேட்டாலும் கிடைக்கும், ஆயினுமது
    உயிர்க்கருணை துயரானந்த தத்துவ இயக்கம்
புரியுமா உனக்கிவை, காதல் பிரிவை
    பிழிந்துவிட்டுப் போனவுடன் உறவுச்செருப் படியால்
மரித்த வெயிலான வாழ்வின் துக்கத்தில்
    மெய்யழுது கதறியயென்
        கண்ணீர்கேட்டு சிரித்தவனே...



கவின்கவி

**கோடையும், ஐஸ்க்ரீமும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத விஷயங்கள். ஐஸ்க்ரீமை காசு கொடுத்துக் கடையில் தான் வாங்க வேண்டுமா? நாமே வீட்டில் செய்ய முடியாதா? என்றால், ''முடியும்'' என்று காரன்டி ஸ்மைல் தருகிறார் பொதிகை தொலைக் காட்சியில் 'சுவையும் ஆரோக்கியமும்' என்ற நிகழ்ச்சியில் பல்வேறு ரெஸிபிகளைச் செய்து கலக்கும் கிருத்திகா ராதாகிருஷ்ணன். சில கூல் ஐட்டங்களை நமக்காகச் செய்து காட்டுகிறார்...**



* கிருத்திகா ராதாகிருஷ்ணன்

## குல்ஃபி ஐஸ்

**தேவையான பொருள்கள்:**

பால் - 1 லிட்டர், கோதுமை மாவு - 1 மேஜை கரண்டி (ஒரு மேஜை கரண்டி என்பது ஒரு டீஸ்பூனை விடச் சற்று அதிகம்) கார்ன்ஃபிளவர் பவுடர் ஒரு மேஜைகரண்டி, சர்க்கரை 160 கிராம், சர்க்கரை கலக்காத கோவா - 60 கிராம், பாதாம் மசாலா பவுடர் - 20 கிராம்.

**செய்முறை:**

கோதுமை மாவு, கார்ன்ஃபிளவர் பவுடர் இரண்டையும் சிறிதளவுப் பாலில் நன்றாகக் கலக்கி வைத்துக் கொள்ளவும். மீதமுள்ள பாலைச் சுண்டக் காய்ச்சி, அதனுடன் ஏற்கெனவே பாலில் கலக்கி வைத்த கார்ன்ஃபிளவர், கோதுமை மாவு, மற்றும் பாதாம் மசாலாப் பவுடரையும் சேர்த்துக் கலக்க வேண்டும். இதை ஆற வைக்கவும். கோவாவை மிக்ஸியில் அரைக்க வேண்டும். அரைத்த கோவாவை, ஏற்கெனவே உள்ள ஆறவைத்த கலவையுடன் சேர்த்து மீண்டும் ஒருமுறை மிக்ஸியில் அடிக்க வேண்டும். அரைத்ததை குல்ஃபி அச்சில் ஊற்றி, ஃப்ரிட்ஜ்ஜில் ஃப்ரீசர் பகுதியில் வைத்தால், சில மணி நேரங்களில் சுவையான குல்ஃபி ஐஸ்க்ரீம் தயார்.

## கேசர் பிஸ்தா ஐஸ்க்ரீம்!

**தேவையான பொருட்கள்:**

பால் - 1 லிட்டர், கால் கப் குளிர்ந்த பால். கார்ன்ஃபிளவர்



பவுடர்-1 மேஜைகரண்டி, சர்க்கரை - 7 மேஜைகரண்டி, ஃப்ரெஷ் க்ரீம் (பாலாடையிலிருந்து எடுக்கப்பட்ட க்ரீம்) 100 கிராம், பொடி செய்த அதே சமயத்தில் மொறுமொறுவென்ற பிஸ்தா, பாதாம் பருப்புகள், குங்குமப்பூ ஒரு சிட்டிகை.

**செய்முறை:** கார்ன்ஃபிளவர் பவுடரை குளிர்ந்த நீரில் நன்றாகக் கலக்கிக் கொள்ள வேண்டும். ஒரு லிட்டர் பாலை நன்றாகக் காய்ச்சி அதனுடன் சர்க்கரை சேர்க்க வேண்டும். இதை ஆறவைத்த பின்பு, இதனுடன் கரைத்த கார்ன்ஃபிளவர் பவுடர்,





பாதாம், பிஸ்தா பருப்புக்கள், குங்குமப்பூ போன்றவற்றை நன்றாக மிக்ஸ் செய்து ஃப்ரீசரில் வைக்க வேண்டும். முக்கால்வாசி ஃப்ரீஸ் ஆனவுடன், 'எக்பீட்டர்' எனும் கருவியால் பீட் (பீட் செய்வது என்பது கிட்டத்தட்ட கடைவதைப் போன்றது) செய்ய வேண்டும். பீட் செய்த பின்பு, மீண்டும் சில மணி நேரங்கள் ஃப்ரீஸ் செய்தால் சூப்பரான கேசர் பிஸ்தா ஐஸ்க்ரீம் ரெடி.

### ரசகுல்லா ப்யூஷன்

**தேவையான பொருட்கள்:** ரசகுல்லா - 3, மேரி பிஸ்கெட், சாக்லெட் சாஸ், மற்றும் மொறுமொறுவென சிறிய துண்டுகளாக வெட்டப்பட்ட பாதாம், முந்திரி, பிஸ்தா பருப்புகள், வெண்ணெய் - 1 மேஜைகரண்டி, சர்க்கரை - 2 மேஜைகரண்டி, வெனிலா ஐஸ்க்ரீம் -ஃபேமிலி பேக்.

**செய்முறை:** துண்டு துண்டாக வெட்டப்பட்ட ரசகுல்லா, மேரி பிஸ்கெட் இரண்டையும் வெண்ணெய்யுடன் சேர்த்துச் சாதத்தைப் பிசைவது போல் பிசைந்து ஒரு கிண்ணத்தில் அமுக்கி வைக்க வேண்டும். அதன் மேல் வெனிலா ஐஸ்க்ரீமையும் வைக்க வேண்டும். பின்பு மொறுமொறு பாதாம், பிஸ்தா பருப்புகளைத் தூவ வேண்டும். மேல்பகுதியில் சாக்லெட் சாஸையும் ஊற்றி ஃப்ரீசரில் வைக்கவும். சில மணி நேரங்களில் ரசகுல்லா ஃப்யூஷன் ஐஸ்க்ரீம் தயாராகிவிடும். கேக்கை வெட்டுவது போல் இதை வெட்டிப் பரிமாற வேண்டும்.

- **ஆர். வரலட்சுமி**

## ஜலாகும் பாருங்க..!



* பாக்யலட்சுமி

அசந்தா ஆளையே ஃபிரிஜ் உள்ள தூக்கி வெச்சுடுவாங்க, இப்ப இருக்கின்ற ஹவுஸ் ஒய்ஃப்ஸ். ஆனா, அந்தக் காலத்துல உணவுப் பொருட்கள் கெடாம இருக்க என்ன பண்ணுனாங்க... அறுபத்தாறு வயதான பாக்யலட்சுமி சொல்கிறார்...

“மண்பானை செய்யற குயவர்கிட்ட சொல்லி, அடுப்பைவிட நீளமான 2 அடி உயரத்தில் மண் பெட்டி செய்து கொள்வோம். அடியில் ஆற்று மணலைப் போட்டு ஈரமாக்கிச் சின்னச் சின்னதாகப் பெட்டி முழுக்க ஓட்டைகளாக இருக்கும். மண் கலயத்தில் தயிரை வைத்து இதற்குள் வைத்து விடுவோம். அதுமாதிரி மாவு, பால் என எதை வைத்தாலும் புளிக்காது... கெடாது. காய்கறிகளைக்கூட இதற்குள் வைக்கலாம்.

விறகு அடுப்புத்தான். எப்போதும் விடிய விடிய கணகணன்னு தணல் இருக்கும். மீதமான குழம்பு, வெஞ்சனம் இவற்றை அடுப்பின்மீதே வைத்து விடுவோம். மண்பானையில் வைப்பதால், அடிப்பிடிக்காமல் ஒரு வாரம்கூட



# சேஃப்டி

குழம்பு அப்படியே
இருக்கும்.

பாலைச் சுண்டக்காய்ச்சி
விடுவதால் கெட்டுப்போவது என்பதே
கிடையாது'' என்றவர் நீர்ச்சத்துள்ள உணவுப்
பொருட்களைப் பாதுகாப்பது குறித்தும் பேசினார்.

''நுங்கு, இளநீர்களை தோட்டத்தில் இருந்து வெட்டி வந்து தண்ணீர்த் தொட்டிகளில் போட்டுவிடுவோம். வாரக் கணக்கில் சிலுசிலுவென்று இருக்கும்.

கம்பு, ராகி, சாமை, தினை சாதவகைகள் மீதமானால் அப்படியே தண்ணீர் ஊற்றி வைத்து விடுவோம். வெயில் காலத்தில் எப்போது எடுத்தாலும் குளுகுளு என்று சாப்பிடலாம்.

பழங்களைப் பச்சையாகக் கொண்டுவந்து வைக்கோல் போட்டுப் பழுக்க வைப்போம். மொச்சை, தட்டை, சோளக்கதிர், வேர்க்கடலை, மஞ்சப் பூசணி, கிழங்கு வகைகளைக் காய்ந்த இலைக் கொடிகளைப் போட்டு, சுட்டுச் சாப்பிடுவோம்.

பூக்கள், கீரைகள், காய்கறிகளை மெலிதான பருத்தித் துணிகளை நனைத்துப் பிழிந்து சுற்றி வைப்போம். நான்கு நாட்களானாலும் வாடாது, வாசம் போகாது.

எல்லோர் வீட்டிலும் உறிகள் இருக்கும். சல்லடைக் கம்பிகளால் செய்யப்பட்ட அலமாரிக் கதவுகள். இதன் சின்னச் சின்ன ஓட்டைகள் வழியாக எப்போதும் காற்று பட்டுக்கொண்டிருக்கும்.

அந்தக் காலத்திலேயே வீட்டு வாசல்களில் இருபது, முப்பது அடிகள் 'சோளக்குழி' (தானியக்கிடங்கு) என்று சொல்வார்கள். தோண்டி மண் படிக்கட்டுக்கள், காற்றோட்டைகள் அமைத்து, மீதமாகும் தானியங்களை மாதக்கணக்கில் சேமித்து வைப்போம். இப்போதுகூட திருச்சி திருவானைக்கோவிலில் இந்த மாதிரி அமைப்பு இருக்கிறது'' என்கிறார் பாக்யலட்சுமி.

- ஆர்.பாலா

லாக்கர்!





# வாய்க்கு அவல்..

**ச**மைக்கப்படும் உணவுகளில், பாதிப் பகுதிக்கும் மேலான சத்துக்கள் வீணாக்கப்படுதுன்னு நம்ம எல்லாருக்குமே தெரியும். இருந்தாலும், நம் நாவை ருசிக்கு அடிமையாக்கி விட்டதால், சமைக்காத உணவுப் பொருட்களை நாக்கு ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் அவற்றை தினசரி ஐட்டங்களில் சேர்ப்பது நல்லது. இந்தக் கொளுத்தும் கோடையில், வயிற்றுக்கும், நமது முழு உடலுக்கும் ஏற்ற இதமான இயற்கை உணவுகள் இதோ...



நுங்கு, இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய் இவற்றை அப்படியே சாப்பிடலாம். எத்தகைய வெப்பத்தையும் நம் உடல் சமாளிக்க ஏற்ற எல்லா வகையான, குறிப்பாக நீர்ச் சத்து அதிகமாக இருக்கிறது. கம்பு குறிப்பாக சிறு கம்பு, நல்ல ரிச் புரோட்டீனுடன் உடம்புக்கு அத்தனை குளிர்ச்சி.

கம்பை ஊற வைத்து நிழலில் உலர்த்தி காய்ந்தவுடன் மாவாக அரைத்துக் கொள்ள வேண்டும். நாட்டுச் சர்க்கரையைப் பாகாகக் காய்ச்சி, கம்பு மாவையும், ஏலக்காய்த் தூளையும் சேர்த்துப் பூவன் பழம், நெய் சேர்த்துக் கலக்கிச் சாப்பிடலாம். பழம் சேர்க்காமலும் சாப்பிடலாம்.

**கம்பஞ் சோறு:**

கம்பை குருணை பதத்துக்கு இடித்து, சாதமாகச் செய்து கொள்ள வேண்டும்.

இரவு இந்த மாதிரியாகச் செய்து உருண்டைகளாக்கி ஆறவைத்து, மண் பானையில் தண்ணீரில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். கூடவே, உரித்த சின்ன வெங்காயம் சேர்த்து ஊறவைக்கலாம்.

அடுத்த நாள் காலையில் கெட்டித் தயிர், அல்லது மோருடன் சேர்த்து இந்த உருண்டையைச் சாப்பிட்டால் போதும். நாள் முழுவதும் வயிறு இதமாக, ஏ.சி. பெட்டிக்குள் வைத்த மாதிரி குளுகுளு என்று இருக்கும்.



# வயிற்றுக்கு-கம்பு...

ஊறிய கம்புத் தண்ணீரை வடித்து, ப்பு சேர்த்து பாட்டிலில் எடுத்துக்கொண்டு பாய் வெயிலில் அலையும் போதும்... டிக்கலாம். ஒரு பாட்டில் கம்புத் தண்ணி ான்கு இளநீர் சாப்பிடறதுக்குச் சமம்.

**பூசணி ஜூஸ்**

❑ மல்லி இலைகளை நன்றாக ஆய்ந்து டைப் பச்சை மிளகாய், சீரகம், சிறிது புளி ப்பு சேர்த்து சட்னியாக அரைத்துச் சாப்பிட ாம். இது மாதிரியே கறிவேப்பிலை, பொதி னாவையும் சட்டினியாகச் செய்து சாப்பிட ாம். முட்டைக்கோஸ், வாழைத்தண்டு, வெள்ளைப் பூசணி சாறு எடுத்து, இலேசாக வெள்ளை மிளகுப் பொடி தூவி, உப்பு தூவிக் குடிக்கலாம்.

**அவல் உணவு:**

சிவப்பு கைக்குத்தல் அவல் 100 கிராம் எடுத்துக்கொண்டு, தேங்காய்த் துருவல், வெல்லத்தூள், ஏலக்காய்த் தூள், ஒரு சிட்டிகை மிளகுத்தூள் கலந்தும் சாப் பிடலாம்.

❑ மாதுளை, திராட்சை, தக் காளிப் பழம், ஆப்பிள் இவற்றை ஜூஸ் எடுத்து தேன் கலந்து சாப்பிட தேவா மிர்தம்போல இருக்கும்!

❑ கோடையில் ஏற்படும் வயிற்றுப் பொருமல், நீர்ச்சுருக்கு நீங்கிட, வெந்தயம், ஓமம், சீரகம் சம அளவு எடுத்துக் கொண்டு, வெறும் வாணலியில் வறுத்து பனங்கற் கண்டு சேர்த்துப் பொடி செய்து தண்ணீரில் கலக்கிக் குடிக்கலாம்.

**கலப்பு காய்கறிப் பச்சடி!**

❑ புடலங்காய், வெள்ளைப்பூசணி, போன்றவற்றைப் பொடியாக அரிந்து, ஆவி யில் வேகவைத்தும் காரட், பீட்ரூட், முள் ளங்கி போன்றவற்றை துருவி பச்சையாகவும் மிளகுத்தூள், சீரகத்தூள், கறிவேப்பிலை, புதினா, மல்லித் தழை, பெருங்காயத்தூள், எலுமிச்சம் பழச்சாறு, உப்பு சேர்த்து, தயிர் கலந்து பச்சடி செய்தும் சாப்பிடலாம்.

\- பாலா



# ஸ்ரீ சக்கர வாஸினி

கலைகளின் உத்கிருஷ்டமாக (உட்பொருளாக) விளங்கக்கூடிய அம்பிகைக்கு **கல்யா** என்கிற திருநாமம் இடம் பெற்றுள்ளது.

**விதக்தா** - பலவிதமான நிலைகளில் செல்லக்கூடியவள். அந்த மார்கங்களில் தங்கக்கூடியவள். சாதாரண அர்த்தத்தில் பார்த்தால், சாதுர்யமானவள் என்று பொருள் கொள்ளலாம். தக்தா என்றால் திறமை படைத்தவள். **விதக்தா** - கூடுதலான திறமை, சாதுர்யம் நிறைந்தவள்.

**பைந்தவாஸனா** - பிந்துவாஸினியாக பிந்துஸ்தானத்தில் வாஸம் செய்பவள் **பைந்தவாஸனா.** ஸ்ரீ சக்கரத்தில் இருக்கக்கூடிய பிந்து, சிவ-சக்தி ஸ்வரூபம் ஆகும். ஸ்ரீ சக்கரம் என்பதே ரொம்ப அழகான விஷயம். அதைப் பற்றிய எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும், ஒன்றிரண்டு விஷயங்களைத் தெரிந்துகொள்வோம்.

ஸ்ரீ சக்கரத்தைப் பார்த்துவிட்டு ஒரு கணிதமேதை சொன்னார்: ''உலகத்தினுடைய சிருஷ்டி தத்துவம் இதில் அப்படியே தெரிகிறது,'' என்று. நான்கு கோணங்களும் ஐந்து கோணங்களும் சேர்ந்து ஒன்பது கோணங்களாக உருவாகக் கூடியது ஸ்ரீ சக்கரம். ஆசார்யர் பாடுகிறபோது, 'ஸ்ரீகண்டனான ஈசுவரனுக்கு (சிவனுக்கு) உரிய சக்கரங்கள் நான்கு' என்று ஆரம்பிப்பார். சக்தி சிவயுவதியாக இருக்கக்கூடிய கோணங்கள் ஐந்து. சிவனுடைய நான்கு கோணங்களும் சக்தியினுடைய ஐந்தும் சேர்ந்து உருவாக்கக்கூடிய ஒன்பது கோண வடிவம்தான் **ஸ்ரீ சக்கரம்.**

## ஸ்ரீ சக்கர வடிவம்


இந்த வடிவத்தைக் கவனித்துப் பார்த்தோமானால், ஒன்பது முக்கோணங்களும் ஒன்றை ஒன்று ஒட்டியும், ஒன்றன் மீது ஒன்றாகவும் அமைந்திருக்கும். அவ்வாறு கோத்துக் கொண்டிருப்பதால், நாற்பத்து மூன்று முக்கோணங்கள் அந்த வடிவத்திலே உருவாகும். நடுவிலே இருக்கும் ஒரு முக்கோணத்தையும் சேர்த்துக் கொண்டால், நாற்பத்து நான்கு. இந்த 44 முக்கோணங்களுக்கு வெளியே (43 என்று கொண்டாலும் சரி, 44 என்று கொண்டாலும் சரி) ஒரு எட்டு தள (அஷ்ட தள)த் தாமரை. அதற்கும் வெளியே பதினாறு தளத் தாமரை. பதினாறு தளத் தாமரைக்கு வெளியே மூன்று வளையங்கள் போட்டிருக்கும். அதற்குத் தான் **த்ரிவலயா** என்று பெயர். மேகலா வலயம் என்றும் சொல்வதுண்டு.

த்ரிவலயத்துக்கு வெளியே மூன்று கோடுகள் போட்டிருக்கும். அந்த மூன்று கோடுகள் எப்படி இருக்கும் என்றால், நான்கு வாசல்கள் கொண்டவையாக இருக்கும். இந்த நான்கு வாசல்களும் பூபுரத்துக்குள்


**ஸ்ரீ லலிதா 27**

**நான்காம் பாகம்**

**சுதா சேஷய்யன்**


ஸ்ரீ பெரியநாயகி அம்மன்

நுழையக்கூடிய வாசல்கள். ரொம்ப எளிமைப்படுத்திப் பார்த்தோமானால், அம்பாள் இந்த வடிவத்தின் நடுவிலே ஒரு புள்ளியாக - பிந்துஸ்வரூபமாக இருக்கிறாள். அதனால்தான் **பைந்தவாஸனா** என்ற திருநாமம். அந்த பிந்துவைச் சுற்றி அமைந்துள்ளது ஸ்ரீ சக்கரம். அதனால்தான் அவளுக்கும் ஸ்ரீ சக்கர நிலையா, ஸ்ரீ சக்கர ராஜேஸ்வரி என்றெல்லாம் பெயர். இந்த ஸ்ரீ சக்கர வடிவத்தைச் சுற்றிலும், ஒன்பது ஆவரணங்கள் (கோட்டைகள்) இருப்பதாக ஐதீகம். அபிராமி பட்டர் பாடுகிறபோது, 'ஒளிர்கின்ற கோணங்கள் ஒன்பதிலும் மேனி உறைபவளே' என்று பாடியுள்ளாரே, அந்த ஒன்பது ஆவரணங்கள். முத்துஸ்வாமி தீக்ஷிதரும் திருவாரூர் கமலாம்பிகை மீது நவ ஆவரண கீர்த்தனைகளைப் பாடினார்.



இந்த நவ ஆவரணங்களைக் கடந்து, வெளியிலிருந்து உள் நோக்கிச் செல்ல வேண்டும் பிந்து ஸ்தானத்தை அடைய. வெளிப்புறத்தில் மூன்று கோடுகள் - அது ஓர் ஆவரணம். அதற்கு அடுத்து இரண்டாவதாக, மேகலா வலயம். அதற்கடுத்து, மூன்றாவதாக பதினாறு தளத் தாமரை, அதற்குள்ளே எட்டு தளத் தாமரை. - இவை நான்கு. அடுத்த ஐந்து ஆவரணங்கள் எப்படி வரும் என்றால், 43 முக்கோணங்கள் உள்ளன அல்லவா, அவை ஒன்றோடொன்று பிணைந்திருப்பதால், பதினாறு முக்கோணங்களாகத் தெரியும். இந்தப் பதினாறு முக்கோண வடிவம் ஓர் ஆவரணம். அதற்குள்ளே சென்றால், பத்து முக்கோண வடிவம் தெரியும். அதற்குள்ளே இன்னொரு பத் முக்கோண வடிவம் தெரியும். அதனா தான் இதனை தச த்வயம் (தச - 10 த் யம் - 2) என்று சொல்வது.

பதினாறு, பத்து, பத்து ஆயிற்றா.. அதற்கும் உள்ளே சென்றால், எட் முக்கோண வடிவம் வரும். அந் எட்டு முக்கோண வடிவத்தின் உள்ே இன்னொரு முக்கோணம் (திரிகோணம் இருக்கும். - ஆக உள் பகுதியில், ஐந் ஆவரணங்கள்; வெளிப்பகுதியில் நான் ஆவரணங்கள். இவற்றின் ந விலே இருக்கக்கூடிய தி கோணத்துக்கும் ந வில் சிவ-சக்தி ஐக்கி ஸ்வரூபமாக பிந் (மையப்புள்ளி அமைந்திரு கிறது. அந்த பிந் வாக அவள் (அ பிகை இரு கிறாள்); அதிே வாசம் செ கிறாள்.

## ஒன்பது கோட்டைகள்

இதை எளிமையாகப் புரிந்துகொண்டோமானால், அம்பாளை அடைவதற்கு இந்த ஒன்பது ஆவரணங்களையும், தாண்டித் தாண்டி உள்ளே செல்ல வேண்டும் என்பது புரியும். வெளியிலே இருக்கக்கூடிய (outermost) ஆவரணத்துக்குத் **த்ரைலோக்ய மோகன சக்கரம்** என்று பெயர். மூன்று உலகங்களிலும் இருக்கக்கூடிய மாயைகளை அது குறிக்கிறது. உலகத்தாராகிய நாம், அந்த மாயைகளில் மயங்கிக் கிடக்கிறோம். அவற்றைத் தாண்டினால்தான் அடுத்த கட்டத்துக்கே

...போக முடியும். ஒவ்வொரு ஆவரணமாக (கோட்டை) இதே ரீதியில் தாண்டித் தாண்டிப் போகும்போது, மோகத்தை விட்டு, மோகத்தோடு தொடர்பிருக்கக்கூடிய எல்லாவற்றையும் விட்டு, அதற்கும் மேலாக அம்பாளை அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டு, அவ்வாறு ஆசைப்படுகிற சமயத்திலும், ரோகமோ பிணியோ வந்தால்... அவற்றையெல்லாம் தாண்டித் தாண்டி, கடைசியில் பிந்துவை - அம்பாளை - அடைவதுதான் இலக்கு.

"பதினாறு, பத்து, பத்து ஆயிற்றா..? அதற்கும் உள்ளே சென்றால் எட்டு முக்கோண வடிவம் வரும்."

இந்த ஒன்பது ஆவரணங்களிலேயும், ஆங்காங்கே, அந்தந்த ஆவரணத்துக்குரிய தேவதைகள் ஆவிர்பவித்திருக்கிறார்கள். அவர்களுக்குரிய கோட்டைகளைக் காவல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பிந்துவாஸினியாக உள்ள அம்பாளைச் சுற்றி, அஷ்டமா சித்திகள் தேவதைகளாக வீற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நடுவிலே அம்பாளை வைத்து உபாஸிக்கிற முறை என்று ஒன்று உண்டு. அணிமா, மகிமா, இலகுமா, கரிமா என்று அஷ்டமாசித்திகளுக்குமான தேவதைகள் யாரோ, அந்த தேவதைகளைச் சுற்றிலும் வைத்து, அவர்களுக்கு நடுவிலே அம்பாளை ஆவாகனம் செய்து வழிபடக்கூடிய முறை இருக்கிறது.

## அஷ்டமாசித்துக்கள்

இதனால்தான் ஆசார்யர் ஆதி சங்கரர் பாடுவார்: அஷ்டமாசித்துக்கள் கைவரப் பெற்றவர்கள் சிலர் இருக்கிறார்கள். யாரெல்லாம் அவ்வாறு கைவரப் பெற்றவர்கள் என்றால், தேவர்கள் கைவரப் பெற்றவர்கள். முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் அஷ்டமாசித்துக்கள் கைவரப் பெற்றுள்ளன. நினைத்த மாத்திரத்தில், நினைத்த இடத்துக்குப் போக அவர்களால் முடியும்.

அஷ்டமாசித்துக்கள் என்னென்ன...?

**அணிமா** - அணுவுக்கு அணுவாக, ரொம்பச் சின்னதாக மாறக்கூடிய தன்மை. **மகிமா** - இருப்பதிலேயே மிகப் பெரியதாக மாறக்கூடிய தன்மை. **இலகுமா** - ரொம்ப இலகுவாக, இலேசாக மாறக்கூடிய தன்மை. **கரிமா** - மேரு மலையைவிட கனமாக மாறக்கூடிய தன்மை. **பிராப்தி** - நினைத்த மாத்திரத்தில், நினைத்த இடத்துக்குப் போகக்கூடிய தன்மை. கண்ணை மூடினால் இங்கேயிருந்து இன்னொரு இடத்துக்குப் போய்விட முடியும்! **பிராகாச்யம்** என ஒன்று - நினைத்ததை, உடனுக்குடன் இருந்த இடத்திலேயே, அனுபவித்துவிடக்கூடிய ஆற்றல். இதிலே ஓர் அங்கம்தான் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்பது. **வசித்வம்** - எல்லாவற்றையும் தன் வசப்படுத்தக்கூடிய தன்மை. யாரைப் பார்த்தாலும், அப்படியே வசியமாகிக் கிடப்பார்கள்! இவற்றைத் தாண்டி எட்டாவதாக இருக்கக்கூடிய தன்மை **ஈசித்வம்**. இது தலைமைக் குணம். அஷ்டமாசித்துகளும் கைவரப் பெற்றவர்கள் யாராவது இருந்தால், அவர்களிடத்தில் போய் எல்லோரும் விழுந்து விடுவார்கள். அவர்கள்தான் எல்லோருக்கும் தலைவர்கள்!

*(வளரும்)*

உச்சிவேளையில் வேர்க்கடலை வண்டிக்காரர் மாதிரி, வாணலியில் டிங், டிங், டிங் சத்தத்தை அடிக்கடி எழுப்பி- இல்லத்தரசிகளைத் தூங்காமலும், அதனால் அதிகமாகப் பருக்காமலும் ஜீவிக்க வைக்கும், சானல் சமையல் போதினி 'நளனி' சந்திரிகா கேதாரிநாத்தைச் சந்தித்தேன்.

"இந்த சம்மருக்கு புது ஐட்டங்கள் ஏதானா உண்டா? நுங்கு பஜ்ஜி, பிஸ்கெட் போண்டா, தர்பூஸ் ரெய்த்தா, மாகி கட்லெட், முயல் வடை இது மாதிரி....?"

அழகாப் பொரியும் பப்படமாக அவர் முகம் மலர்ந்தது. 'இதானே வேணாங்கிறது?' என்று பார்வையாலே கடிந்துகொண்டவர், "அது என்ன முயல் பஜ்ஜி? அது நான்-வெஜ்ஜுனா?"

# ஜே.எஸ்.ராகவன்

" 'திடீர்' புளியோதரை மாதிரி ஆமை வடை துரிதமா தயாரிக்கப்பட்டா, அது முயல் வடைதானே?"

"கொழுப்புதான்" என்று கடிந்துகொண்டவர், "என்ன கேட்டீங்க? புது ஐட்டமா? இருக்கே. நாம இப்போ பார்க்கப் போறது சம்மருக்குக் கூலா யோகி ரைஸ்! இதற்குத் தேவையானவை..."

"வெயிட்... வெயிட்... என்னது? யோ..கி ரைஸா?"

"ஆமா. அமெரிக்காவிலேர்ந்து இறக்குமதி ஆனது. தேவையானவை..."

"ஹோல்டான். யோகி, ரைஸ் இரண்டும் இந்தியா சம்பந்தப்பட்டது. இதிலே அமெரிக்கா எங்கே மூக்கை நுழைச்சது?



இதுவும் பே. பிரிஞ்சால் கோத்திரமா?''

"நதிமூலம், ரிஷி மூலம் மாதிரி சமையல் ஐட்டங்களை ஆராயக்கூடாது. 'அசோகா அல்வாவை யார் கண்டுபிடிச்சது?'ங்கிற சச்சரவுக்கு இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. அதை விடுங்க. இப்போ நான் உங்களுக்கு யோகி ரைஸ் எப்படித் தயாரிக்கிறதுன்னு சொல்லப் போறேன்... தேவையானவை...''

"நீங்க மூடுக்கு வந்துட்டீங்க, இனிமேல் உங்களைத் தடுக்க முடியாது. நடத்துங்க.''

''....தேவையானவை, அரிசி, புளிக்காத கெட்டித் தயிர், உப்பு. இதனோட செய்முறை



# யோகி ரைஸ்!

ரொம்ப சிம்பிள். காப்பர் பாட்டக் கடாய், கிரைண்டர், பிளெண்டர், மைக்ரோவேவ், அவன், இவன் எதுவும் தேவையில்லை. முதல் நாள் இரவு வடித்த செலவாகாத சாதத்தில் நீரை விட்டு, கரப்பு விழாமல் இறுக மூடி வைத்துவிட்டு, மறுநாள் காலை கொட்டுக் கொட்டென்று விழித்துக் கொண்டிருக்கும் ஜில் சாதத்தில் கெட்டித் தயிரை விட்டுப் பிசைந்தால் யோகி ரைஸ் ரெடி. தேவையான உப்பைச் சேர்த்து, சௌகர்யம் போல் மதுரை வடுவையோ, எரித்த குழம்பையோ தொட்டுக்கொண்டு சாப்பிடலாம். ஸீனியர் சிட்டிஸன்கள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.''

மட்டையைக் கொளுத்த வேண்டிய சச்சின், முதல் பந்தில் பொசுக்கென்று அவுட்டாகி விட்டால் ஏமாறும் கிரிக்கெட் விசிறியாக உணர்ந்தேன். "மைகாட்! இதுவா யோகி ரைஸ்? இது நம்மூர் அரதப் பழைய பழையதுனா?''


"அதனாலென்ன? பழையன கழிதலும்னுதானே சொல்லியிருக்கு. பழையது கழிதலும்னு சொல்லலியே?''

''அதனாலே புதுசா யோகி ரைஸ்னு பேரா? அது சரி, இதிலே அமெரிக்கா எங்கே வந்தது?''

''அதுக்கு என் நாலு வயது பேத்தி ஷ்ரேயாதான் காரணம். அங்கே தயிரை யோகர்ட்டுன்னு சொல்றாங்க. யோகர்ட்டை யோகியா சுருக்கி, அதிலே பிசைந்த சாதத்தை, அந்த ரெட்டை வால் யோகி ரைஸ்னு பெயர் சூட்டி, பீட்ஸாவைவிட ரசித்துச் சாப்பிடறா. யோகி ரைஸ்! பெயர் சூப்பரா இல்லே? நீரின் மேல் நடந்தா யோகி. நீரில் ஊறினா கூட யோகி போலிருக்கு. சரி, அதை எப்படித் தயாரிக்கிறதுன்னு மறுபடியும் சொல்றேன். எழுதிக்கறீங்களா? தேவையானவை...''

**ஜாலி ஸ்டோர்ஸ்**

# நெருங்கும் உறவு.



பென்னாகரம் இடைத்தேர்தலுக்குப் பிறகு டாக்டர் அன்புமணி, புதிய உற்சாகத்துடன் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்து வருகிறார். ''தி.மு.க.வுடன் கூட்டணி ஆட்சிக்குத் தயார்'' என்பதுவரை அவரால் சொல்லப்பட்டுவிட்டது. டாக்டர் ராமதாஸோ முதல்வரை 'செல்லமாக' விமர்சித்து வருகிறார். வார்த்தைகளின் வேகமும், ஆவேச வீச்சும் போயே...போச். தி.மு.க.வும், ஏதோ இரு கரங்களையும் கூட்டித் தம்மை வரவேற்கத் தயாராக இருப்பதாகப் பா.ம.க.வினர் சொல்கிறார்கள். பா.ம.க.வின் பன்னிரண்டு ஆண்டு காலத் தேர்தல் வரலாற்றைப் பார்த்தால், சறுக்கியதைவிடச் சாதித்தவையே அதிகம். அதற்குக் காரணம் தி.மு.க.; அ.தி.மு.க. என்று மாறி, மாறி அது வைத்துக் கொண்ட கூட்டணியே!

1980-ல் வன்னியர் சங்கமாக எழுச்சி பெற்ற பா.ம.க, தனது இட ஒதுக்கீட்டுப் போராட்டத்துக்குப் பிறகு, பாட்டாளி மக்கள் கட்சியாக அறிமுகம் ஆனது. அது சந்தித்த முதல் தேர்தல் 1991-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல். அப்போது பண்ருட்டி ராமச்சந்திரன் பா.ம.க.வில் இருந்தார். அவர் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. 1996-ல் தனித்துப் போட்டியிட்டு நான்கே இடங்களில் வென்றது பா.ம.க. 2001 சட்டமன்றத் தேர்தல், 2006 சட்டமன்றத் தேர்தல் மற்றும் 2009 பாராளுமன்றத் தேர்தல்களில், இரண்டு திராவிடக் கட்சிகளுடன் அது கூட்டணி வைத்துக்கொண்டு பெற்ற வோட்டு விகிதம், ஐந்திலிருந்து ஆறு சதவீதத்துக்குள்தான். 2009 பாராளுமன்றத் தேர்தலில், ஏழு தொகுதிகளில் போட்டியிட்டுத் தோற்ற பா.ம.க பெற்ற வாக்குகளின் அடிப்படையில் பார்த்தால், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு சராசரி 20,000 பேர் அதன் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள் என்று கணிக்கலாம். அதன் செல்வாக்கு, வட, மத்திய தமிழகத்தின் எட்டு பாராளுமன்றத் தொகுதிகளில் உள்ள 50 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கிவிடும்.

பென்னாகரம் தொகுதியில் இரண்டு முறை பா.ம.க. வென்றிருக்கிறது. அந்தத் தொகுதியில் வன்னியர்கள் அதிகமிருப்பதால், அதன் வாக்கு வங்கி சுமார் 35,000 வாக்குகள்தான். அன்புமணியும், பிற பா.ம.க. முன்னணிப் பிரமுகர்களும் வீட்டுக்கு வீடு போய் மூன்று மாத காலம் பிரசாரம் செய்ததாலேயே, இரண்டாவது இடத்துக்கு வர முடிந்தது. பொதுத் தேர்தலில் எல்லாத் தொகுதிகளிலும் இதுபோன்ற பிரசாரம் செய்ய முடியாது. தவிர, கடந்த பத்து வருடங்களில் அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள் தேர்தலைச் சந்திக்கும் யுக்தியே மாறிவிட்டது. மேலும், தங்களுக்கு இட ஒதுக்கீடு பெற்றுத் தந்த

மருத்துவர் ராமதாஸை வன்னியர்கள் நன்றியுடன் நினைத்தாலும், பா.ம.க. பத்து வருட காலம் மத்தியில் அமைச்சரவையில் பங்கு வகித்த கால கட்டத்தில் அடிமட்டத் தொண்டர்களுடன் தலைமைக்கு இடை வெளி அதிகமாகிவிட்டது. எனவே பழைய செல்வாக்கு மீண்டு விட்டதா என்பது சந்தேகமே.

அன்புமணிக்கு எப்படியாவது மாநிலங்களவையில் ஓர் இடம் பெற்றுத் தந்துவிட வேண்டும் என்பதே பா.ம.க.வின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. இரண்டா மிடம் பெற்றது அந்தக் கோரிக்கையைச் சற்று அழுத்தமாக தி.மு.க. தலைமைக்கு வைக்க உதவி செய்திருக்கிறது. ஜெய லலிதா பா.ம.க.வுக்கு அந்த வாய்ப்பைத் தரத் தயாராக இல்லாததால், இப்போது பா.ம.க.வுக்கு தி.மு.க.வை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை.

''இடைத் தேர்தலுக்கு முன்னரே 'உங் களுக்கு ராஜ்யசபாவும் தருகிறோம். ஆதர வும் கொடுக்கிறோம்' என்று ஜெயலலிதா முன் வந்தார். நாங்கள்தான் ஏற்றுக் கொள்ள வில்லை'' என்று தேர்தல் பிரசாரத்தின் போது, அன்புமணி நம்மிடம் கூறினார். ஜெயலலிதா செல்வாக்கிழந்து வருவதாகத் தான் பா.ம.க.வின் மதிப்பீடு.

அதேசமயம், தி.மு.க. தலைமையும், செம்மொழி மாநாட்டுக்குப் பிறகு வரும் சட்டமன்றத் தேர்தலை மனத்தில் வைத்து, 'பா.ம.க.வுடன் சமரசம் செய்து கொண்டா லென்ன என்று யோசிக்கிறது. ''ஸ்டாலின் கையில் ஆட்சி போகும்போது அது மெஜாரிட்டி ஆட்சியாக இருக்க வேண்டும்; அந்த அடிப்படையில் ஆதரவு, தளங்களை விரிவுபடுத்தி வலுப்படுத்த வேண்டும்'' என்பது தி.மு.க. தலைமையின் விருப்பம்.

பென்னாகரம் தேர்தல் பிரச்சாரத்தின் போதே, ராமதாஸ் கருணாநிதியுடன் பேசி ஒரு 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' போட முயற்சி செய்தார். இதை கருணாநிதியே ஒரு கட்டத்தில் அம்பலப்படுத்தினார்.

பா.ம.க.வுடன் மீண்டும் நெருக்கம் என்பதை, தி.மு.க.வில், வடதமிழகத்தில் இருக்கும் அமைச்சர்கள் பலரும் விரும்ப வில்லை. ''இப்போது இருக்கிற அணியே போதும். காங்கிரஸ் எங்களுடன்தான் இருக் கும். பா.ம.க. மீண்டும் வந்து சேர்ந்தால், எங்கள் கட்சிப் பிரமுகர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் விதத்தில், சட்டமன்றத் தேர் தலில் பல தொகுதிகளை அவர்களுக்குக் கொடுக்க நேரிடும். எங்கள் உறவு உடைந்த கண்ணாடியாகத்தான் இருக்கிறது' என்கிறார் ஓர் அமைச்சர். ஸ்டாலினுக்கும் பா.ம.க. வுடன் நெருங்க விருப்பம் இல்லையாம்.

மாநிலங்களவை தேர்தலில் வாய்ப்புக் கொடுக்கப்படாவிட்டால், பா.ம.க.வின் விமர்சனக் குரலில் ஆவேசம் கூடும். ஆனால், அப்போதுகூட சட்டமன்றத் தேர் தலில் அது எப்படி முடிவெடுக்கும் என் பதைச் சொல்ல முடியாது. அதுதான் பா.ம.க.!

– ப்ரியன்



# ..திறக்குமா கதவு..?

'திக் திக் ஸ்பெஷல்' படைப்புகள் எல்லாமே சுவாரசியம். கொன்னுட்டீங்க, போங்க!

- அனன்யா, திருச்சி

செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரி மாணவிகளின் ஜோக்குகளும் கவிதைகளும் திக் திக் ஸ்பெஷலின் 'பக்பக்' பயத்தைப் போக்கின!

- பி.ஆர். மயிலப்பன், ஈரோடு

குருவிகள் வேண்டுமானால் கூடுவிட்டுக் கூடு பாயலாம். ஆனால், ஆவிகளால் முடியாது. ஆக, இவையெல்லாம் ஏமாளிகளை ஏமாற்ற எத்தர்கள் செய்யும் சாமர்த்திய வேலை.

- எஸ்.ராமசாமி, குட்டைதயிர்பாளையம்

ராஜேஷ் குமார், கடைசியில் 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என விளக்கம் அளித்துள்ளார். அவருக்கு ஆவியில் நம்பிக்கையில்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

- கே.வி.ராமன், சென்னை 73

'பிழை திருத்தம்' சிறுகதையில் வறுமையின் அவலம், மனித நேயம், எடுத்துக் காட்டப்பட்டு பலிச்சிட்டு, சரியான திருத்தமாய் மனத்தை நெகிழ வைத்தது.

- எஸ். உதயகணேஷ், மதுரை-2

எந்த ஒரு விவகாரத்திலும், தேங்காய் உடைத்தாற் போன்று 'பட்'டென்று தன் கருத்தைச் சொல்லும் கல்கி, இந்த அமானுஷ்ய விவகாரத்தில், 'வழவழா, கொழ கொழா' நிலையை எடுத்திருப்பது ஏனோ...?

- வே.ந.கதிர்வேல், வேலூர் - 6

வாமன தேசங்கள்' வெகு அருமையான, மிகவும் அறிய வேண்டிய விவரங்கள் அடங்கிய பகுதி!

- விஜயா ராஜன், பெங்களூரு

# கொன்னுட்டீங்க



என்னைப் பயமுறுத்திய உம்மை, அமெரிக்காவின் அரிசோனா நகரில் அமைந்துள்ள அல்கோர் மருத்துவ நிலையத்தில் அட்மிட் செய்யணும் போல ஆசையாக உள்ளது.

- வை.கோபாலகிருஷ்ணன், திருச்சி

ஒன்ஸ்மோர்... மொய்தீன்! சிறுகதைக்கு லலிதாவின் ஓவியம் ரொம்ப ஆப்ட்!

- சாந்தி சுந்தர், நெய்வேலி - 3

என்னை முத்தமிட்ட பாம்பு! என்ற தலைப்பில் நடிகை ஜெயசித்ரா தனது கடந்த கால சினிமா அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டது உண்மையிலேயே திக் திக் ஸ்பெஷலுக்குப் பொருத்தமான நிகழ்ச்சி ஆகும்.

- எம். இராஜேந்திரன், லால்குடி-1

# பரிசுக் கடிதம்

கிழக்குப் பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள
நூல்கள் பரிசு பெறும் கடிதம்:

**கொ**சு கடித்த வினாடி, நம்மையும் அறியாமலே கை கொசுவை அடித்து ஒழிக்கத்தான் விரையும். மலேரியா ஒழிப்பு ஊசித் தடுப்பு எல்லாம் பின்னரே.

மாவோயிஸ்டுகள் அழிக்கப்பட வேண்டிய கொசுக்கள். வளர்ச்சி வேண்டுமெனக் கேட்பது ஒரு பக்கம். பள்ளிகளையும், ஆஸ்பத்திரிகளையும் தகர்ப்பது மறு பக்கம். இது மாவோஸ்டுகள் போடும் இரட்டை வேஷம் அல்லவா?

அத்தகைய மாபாதகர்களுக்கு 'மனித உரிமை' என்ற பெயரில் சப்பைக்கட்டு கட்டும் அறிவிஜீவிகள், 76 மாவீரர்கள் மரணத்துக்கு அனுதாபம் காட்ட மாட்டார்கள். வன்முறை கூடாது என ஏன் அவர்கள் மாவோயிஸ்டுகளை வற்புறுத்துவதில்லை?

- எஸ்.வெங்கடசுப்ரமணியன், சென்னை-17

**'ர**சவாதம்' சிறுகதை, பேராசை ஒரு மனிதனுடைய மனத்தை எவ் விதம் மாற்றுகிறது என்பதை உணர்த் தியது!

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், நாகர்கோவில்

# போங்க!

**பு**த்த பிட்சு வேடத்தில் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற நிக் செய்தி, நம்மைவிட இலங்கை அதிபர் ராஜபக்ஷேவுக்குதான் அதிக திக்திக்!

- வி.சி.வெங்கடேஷ், திருச்சி - 2

**'ப**யம்' என்ற அபாய நிலையைச் சொல்ல ஆரம்பித்து, அத்வைதமாகிய மோட்சம் என்ற பயமில்லாத அபய நிலையையும் அருளிக்காட்டிய காஞ்சி சுவாமிகளின் 'அருள் வாக்கு' பகுதி இந்த இதழின் ஈர்ப்புகளில் ஒன்று.

- அய்யாறு எஸ்.வாசுதேவன், சென்னை - 91

**மா**ணவி எஸ்.மாலினியின் 'லொள்ளு-தில்லாக' இருந்தாலும் கோடை வெயிலிலும் குளிர வைக்குது.

- எம்.கே.அருள்ராஜா, முனியங்குறிச்சி

**கு**ருதியோடு ஒன்றிப்போன காதல் குமரியின் குதூகல நினைவுக்குத் தாழ் போட்டுத் தவிக்கச் செய்த, பேய்த் தகிப்பை நீள் கவிதையாக்கிச் சிகரம் தொட்டிருக்கிறார், சகா!

- 'இனாம்' கேசவன், குருமலை

**ஞாபகம் இருக்கா ரீடர்ஸ்...**
**ஸ்டார் அஃப் தி சீரிஸ்** யார்?
வாசகர் ஐ.பி.எல். போட்டிக்கான விடைகள் வந்து சேரக் கடைசி தேதி:
**01.05.2010**

**கல்கி** இணைய இதழில் எந்தக் கடிதமும் பரிசுக்குரியதாகத் தேர்வாகவில்லை!

# கல்கி


இணைந்து வழங்கும்

# கோடைக்கால கொண்டாட்டம்

## ஆறு வார அதிரடி போட்டி ஆரம்பம்!

கல்கி வழங்கும் கோடைக்கால கொண்டாட்டம், ஆறு வாரம் அதிரடியான போட்டிகளோடும், அசத்தலான தங்கக் காசு பரிசுகளோடும் வருகிறது வாசகர்களே... அந்தந்த வாரம் ஸ்பெஷலை அடிப்படையாக வைத்தே போட்டிகள் இருக்கும்.

இந்த வாரம் கோடைக்காலக் கொண்டாட்டத்தில் 'உணவு ஸ்பெஷல்' என்பதால் உணவை அடிப்படையாகக் கொண்ட **கோடைக்கால போட்டி-1** இதோ...



* கருத்தாக்கம்: ஜீ.எஸ்.எஸ்.



## இடமிருந்து வலம்

1. உரிக்க உரிக்க ஒன்றுமில்லை! (5)

4. திருப்பதி என்றதும் வெங்கடாஜலபதிக்குப் பிறகு இதன் நினைவு வரும்! (3)

5. ஒரு பிரபல காய்கறி - ஆங்கிலத்தில் போகிறான் (2)

6. ஆங்கிலேயரை நினைவுபடுத்தும் பூசணி போன்ற காய்கறி (4)

10. 'நித்தம் நித்தம் நெல்லுச்சோறு' பாடியவர் (2)

11. அர்ச்சனைக்கு உகந்தது. தென்னையின் கொடை (4)

12. பெண்கள் தலையில் கட்டிக் கொள்வதுண்டு. பகோடாவில் இப்படியும் ஒருவகை (4)

## மேலிருந்து கீழ்

1. தாம்பூலம் மற்றும் பீடாவின் அடிப்படை (4)

2. ஒரு குறிப்பிட்ட இட்லி வகைக்குப் பெயர் பெற்ற கோயில்நகரம் (6)

3. தழும்பு? தயிர்சாதத்துக்கு தொட்டுக் கொள்ள ஏற்றது மா....(2)

4. சர்க்கரைத் தயிர்க் கரைசல் (3)

7. சேனை, உருளை, கருணை வகை இறுதி எழுத்து இல்லாமல் (3)

8. ஒரு வகை இனிப்பு (2)

9. 'அங்கே சரிதான்' என்பதற்குள் ஒளிந்திருக்கும் ஸ்வீட் (3)

10. உருளை மற்றும் வாழையினால் உண்டாவதாக நம்பப்படுவது பேச்சு வழக்குச் சொல் (3)

11. பலாச்சுளையை இதில் தோய்த்துத் தின்றால் - ஆஹா (2)

***விதிமுறைகள்***

*வாசகர்களே! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவைதான்.*

*● கல்கி வழங்கும் கோடைக்கால கொண்டாட்டம் ஆறு வாரப் போட்டி இந்த இதழோடு சேர்த்து ஆறு வாரங்கள் வெளியாகும். ● ஒவ்வொரு வாரமும் வெளியாகும் போட்டிக்கான விடைகளை நிரப்பி, போட்டிப் பக்கங்களைக் கத்தரித்து பத்திரப்படுத்தவும். (94-95 பக்கம் முழுவதையும்). ● சரியான விடை எழுதிய வாசகர்களிலிருந்து குலுக்கல் முறையில் தேர்வாகும் ஆறு அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா கால் சவரன் தங்கக் காசு பரிசு. ● ஆறாவது வாரம் ஸ்பெஷல் போட்டியும் உண்டு. ● சரியான விடை எழுதி ஸ்பெஷல் போட்டியின் அடிப்படையில் தேர்வாகும் ஓர் அதிர்ஷ்டசாலிக்கு ஒரு சவரன் தங்கக் காசு பரிசு. ● ஆறுவார போட்டிப் பக்கங்களை ஒன்றாக இணைத்து அனுப்ப வேண்டும். ● ஆசிரியர் தீர்ப்பே இறுதி. ● ஆறு வார போட்டி பக்கங்கள் வந்து சேர கடைசித் தேதி:* **10.06.2010**

*ஆறு வாரங்களுக்கு உரிய போட்டிப் பக்கங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:*

**கோடைக்காலப் போட்டி, கல்கி**

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

**கோடைக்காலப் போட்டி - I**

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

..............................................................

தொலைபேசி:..............................................................

''மண்பானைத் தண்ணீல வெட்டிவேர்த் துண்டுகளை ஊறப் போட்டு, அந்தத் தண்ணியைக் குடிச்சிருப்பீங்க. குடிதண்ணியில துளசி இலையையும் ஊறப் போட்டுக் குடிச்சிருப்பீங்க! உங்கள்ல யாராவது தாழம்பூ குடிநீர் பத்திக் கேள்விப்பட்டிருக்கீங்களா? கொளுத்துற கோடை வெயில்ல, உடலை உருக்கற சூட்டைத் தணிக்கிற உத்தமபானம்ங்க அது.

சரி... தாழம்பூ பறிக்க எங்கே போறது? நாட்டு மருந்துக் கடைகள்ல தாழம்பூ எஸென்ஸ் விக்குது. (தாழம்பூ சென்ட் அல்ல!)

ஒரு குடம் தண்ணீல நாலைஞ்சு சொட்டு தாழம்பூ எஸென்ஸ் விட்டு மூடி வெச்சுடணும். தண்ணீல அது நல்லா கலந்துடும். தாழம்பூ வாசம் தூக்கலா இருக்குதேன்னு உணர்றவங்க, ஒண்ணு ரெண்டு சொட்டும் கொறைச்சுக்கலாம். நாம அருந்த, தாழம்பூ குடிநீர் இப்ப தயார்! முழுமையான குடிநீராக, இதனை நாள் முழுவதும் அருந்தலாம். உச்சி வெயில் மண்டையைப் பிளக்கும் உயர்ந்த அளவு கோடை வெப்பத்தில், இது உடலுக்கு அத்தனை குளிர்ச்சி. முக்கியமா... கோடைக் காலத்துல நம்ப உடலைத் தாக்கற அம்மை நோயிலிருந்தும், மஞ்சள் காமாலை நோயிலிருந்தும், காப்பாத்தி விடுது தாழம்பூ குடிநீர். இந்தக் கோடை யிலேருந்தாவது தாழம்பூ குடிநீருக்கு மாறிடுங்க. நாங்க எப்பவோ மாறிட்டோம்'' என்கிறார் சரஸ்வதி முத்துகோபால்.



# தாழம்பூ குடிநீர்!

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் நிறைவேற்ற, தீர்மானங்களைத் தயாரித்து வருகிறது மாநாட்டுக் குழு. தமிழ் அபிமானிகளான சிலர் பரிந்துரைக்கும் தீர்மானங்களை வாரம் ஒன்றாக இப்பகுதியில் வழங்குகிறது கல்கி.**


# போடுங்கய்யா தீர்மானம்-1

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு



*''பரவலா, இப்ப எல்லா மட்டத்துலயும் பொறியியல் படிப்புல, மருத்துவத்துல, நீதி மன்றங்கள்ல தமிழ் வேணும்னு உரத்துக் குரல் கொடுத்து வர்றாங்க. மூணு வயசுலேந்து முப்பது வயசு வரைக்கும், ஆங்கில மொழியைத் திணிச்சிப்புட்டு, அந்தந்தத் துறைகள்ல செம்மொழி தமிழ், சிம்மாசனத்துல அமரணுங்கறது எந்தவிதத்துல ஒத்துவரும்? அப்பிடினா... ஆங்கில வழிக் கல்வியை அடியோட தொடச்சிடலாமா? அதுவும் முடியாதுங்க. ஆகவே, தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்கள்ல கொறைஞ்சபட்சமா, எல்கேஜியிலேந்து மூணாம் வகுப்பு வரைக்குமாவது, எல்லாப் பாடங்களையும் தமிழ்லதான் பயிற்றுவிக்கணும்னு மாநாட்டு மேடையில முதல் தீர்மானம் போடுங்க!''*

**- ஜி.கே.எம்.சொர்ணலெட்சுமி, பத்தாம் வகுப்பு மாணவி, திருச்சி.**



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licen
post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srila